ஷிதவ்யமென்– தஸ்யயதாகப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ" என்கிற ஶ்ருதியையுட்கொண்டு "பரம்பரனே" என்றவநந்தரம் "பங்கயநீணயநத்து" என்றதுக்கர்த்தமருளிச் செய்கிறார் (அந்தவித்யாதி). (க) "అతిర్క మప్రేమ దుఘం క్షణోజ్జ్వలం నచోరమన్తః కరణస్య పశ్యతామ్ । అనుబ్జమబ్జంను కథం నివర్తనం వనాద్రి నాథస్య విశాలయోర్ద్రృశోః-அதிர்க்கமப்ரேமதுகம் க்ஷணோஜ்ஜ்வலம் நசோரமந்தஃகரணஸ்யபஶ்யதாம் அநுப்ஜமப்ஜம்நு கதம்நிதர்ஶநம் வநாத்ரிநாதஸ்யவிஶாலயோர்த்ருஶோஃ" என்று ஆழ்வானருளிச் செய்த ப்ரகாரத்தைத் திருவுள்ளம்பற்றி (தாமரையே ஒரு போலியாகச் சொல்லலாம்படி) என்றும், (அவ்வளவன்றிக்கே நீண்டிருக்கிற) என்றும் அருளிச் செய்தது. [అనుబ్జమ్-அந்ருஜு. அநுப்ஜம்-அந்ருஜு "ఋజు-ఆర్జవే"](உ)உப்ஜ-ஆர்ஜவே" என்றிறே தா(து)து.

"செய்யவள்" என்றது-சிவந்தவளென்றபடியாய், இவன் திருமார்பிலிருக்கையைச் சொல்லுகையாலே (பெரிய பிராட்டியார்) என்கிறார். அகலமென்றதினர்த்தம் (திருமார்பு) என்றது. "சேமமுடைத்தாக வேணும்" என்று கூட்டித் தாத்பர்யம் (இந்தவித்யாதி). "ஆயர்களுடைய

(க) ஸுந்தர-ஸ்த-ச. (உ) துதாதி.

யன்றே; அபிமத விஷயத்தில் அது மிகவும் வேணுமிறே. (செல்வித்யாதி) அவருக்கு யோக்யமான திருமகரக்குழைகள் திருக்காதிலே அசைந்து விளங்க. செல்வாவது- அவளுக்குமிகவும் போக்ய(ஐஸ்வர்ய)மாகையிறே. ஐஸ்வர்யம் மிக்குப் படிசேர்ப்புண்டார்க்கிறே மகரக் குழை தானுவது. (ஐய) பிள்ளைகளை "ஐயா" "அப்பா" என்னக் கடவதிறே. (எனக்கித்யாதி). உன் உகப்பாலும் அவளுகப்பாலும் ஆடினவளவன்றிக்கே எனக்காகவும் ஒருகால் ஆடவேணுமென் கிறூர். இவர் உகப்பது அமுதுசெய்த பதார்த்தங்களைஜரிப்பிக்கைக்கு ஆயாஸமுண்டாக வேணுமென்றிறே. (செங்கீரை) செங்கீரைக்குத் தகுதியான லக்ஷணத்தோடே. (ஆயர்கள் போரேறே) திருவாய்க் குலத்துக்கு ஸிம்ஹ புங்கவம்போலே இருக்கிறவனே!. .... (க)

ஸ்வா.—இரண்டாம்பாட்டு. (கோளரியித்யாதி) மிடுக்கை

யையுடைத்தாகவேணுமென்று நினைத்துக்கொண்டு ஐஸ்வர்ய ஸம்ருத்திக்கு ஸூசகமான திருமகரக்குழைகளோடு கூடின திருக் காதுகளானவை உஜ்ஜ்வலமாய்க்கொண்டு விளங்க. (ஐயவித்யாதி) ஐயனே! என் பொருட்டாக ஒருகால் செங்கீரை ஆடியருளவேணும். (ஆயர்களித்யாதி) ஆயர்களுக்கு "என்னுடையவன்" என்று அபிமானிக்கும்படி ப(பா)வ்யனுய், அத்தாலே யுத்தோ (ந்நத)ந்முகமான ருஷபம்போலே செருக்கியிருக்கிறவனே! ஆடியருளவேணும், ஆடியருளவேணும். செங்கீரையாவது - தாய்மார் முதலானுர் பிள்ளைகளைத் தாங்களே அசைத்தாடுவிப்பது ஒரு ந்ருத்தவிசேஷம். (க)

மூ.—கோளரியின்னுருவங்கொண்ட வுணனுடலம்
குருதிகுழம்பியெழக் கூருகிரால்குடைவாய்!
மீளவவன்மகனை மெய்ம்மைகொளக்கருதி
மேலையமரர்பதி மிக்குவெகுண்டுவரக்
காளநன்மேகமவை கல்லொடுகால்பொழியக்
கருதிவரைக்குடையாக் காலிகள்காப்பவனே!
ஆள வெனக்கொருகா லாடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறே யாடுகவாடுகவே. (உ)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (கோளரியினுருவம் கொண்டு)

போரேறு" என்று நிரூபகம் சொல்லுகையாலே அருளிச்செய்கிறூர் (ஆயர் களுக்கித்யாதி). ... ... (க)

யுடைத்தான நரஸிம்ஹ வேஷத்தை அங்கீகரித்து, ஹிரண்யன் பாப த்ரவ்யங்களாலே ஊட்டுப்பன்றிபோலே வளர்த்த சரீரத்தை நரஸிம்ஹாவதாரமாய் நின்று முஷ்டிப்ரஹாரங்களைச் செய்து குருதி குழம்பவும்,வாய்தகர்ந்து ரத்தம்உகளிக்கவும், ஆயுதமெடுக்கவொண்ணாமையாலே முழுக்கூர்மையான திருவுகிரை ஆயுதமாகக்கொண்டு பிளத்தல் கிழித்தல் செய்தவளவன்றிக்கே, அவன்மகனை மெய்ம்மை கொள்ளக்கருதி, மீளவும் (குடைவாய்) குடைகிறது - ரத்தங்கள்

தேவர்கள் கொடுத்த வரத்துக்கு விரோதமற அவனை நிரஸிக்கைக்காக மிடுக்கையுடைத்தான நரஸிம்ஹவேஷத்தைப் பரிக்ரஹித்துக் கொண்டு. (அவுண னித்யாதி) பாபிஷ்டனான ஹிரண்யாஸுரனுடைய வரப(ல)ல புஜபலங்களாலுண்டான செருக்காலே மிடியற வளர்ந்த சரீரமானது ரத்தம்குழம்பிக் கிளரும்படியாகவும், (க)"ஸர்வ த்ராஸ்தி -ஸர்வத்ராஸ்தி"என்றுசொன்னவார்த்தையைப்பொய்யென்று(உ)*இங்கில்லை என்று, தான் (ங)* அளந்திட்டதூணைத்தட்டின அவன்மநஸ்ஸு புரிந்து ஸ்வபுத்ரனனவனை"ஸத்யவாதி" என்றுகொள்ளும்படியாகவும் திருவுள்ளம்பற்றி ஆயுதம் எடுக்க வொண்ணாதது கொண்டு முழுக்கூர்மையான திருவுகிர்களாலே (ச)* ஒள்ளிய மார்பு உறைக்க ஊன்றிக் குடைந்தவனே!. "மீள" என்றது - இல்

அரு.— இரண்டாம்பாட்டு. (கோளரியித்யாதி) நரத்வ ஸிம்ஹத்வங்களைப் பரிக்ரஹிப்பானென்னென்ன (தேவர்களித்யாதி). கோளென்றதி னர்த்தம் (மிடுக்கு) என்றது. லோககண்டகதயா வந்த ப்ரமாண ப்ரஸித்தியைப் பற்ற (பாபிஷ்டனான) என்றது. (மிடியற) என்றது-க்லேசமறவென்றபடி. "குருதி குழம்பியெழவும், அவன் மீள மகனை மெய்ம்மை கொளவும் கருதி, கூருகிரால் குடைவாய்" என்றந்வயித்தருளிச் செய்கிறார் (ரத்தமென்று துடங்கி, குடைந்தவனே என்னு மளவும்). "அவன்" என்கிற சப்தம் புத்திஸ்த்தபராமர்ஸியாகையாலே தத்காலத்தில் ஹிரண்யனுடைய வ்யாபாரமெல்லாம் தோன்றவருளிச்செய்கிறார் (ஸர்வத்ராஸ்தீத்யாதி). மீளவென்றதினர்த்தம் (மநஸ்ஸு புரிந்து) என்றது. ஆயுதமிருக்க "உகிரால்" என்பானென்னென்ன வருளிச் செய்கிறார் (ஆயுதேத்யாதி). "குடைவாய்" என்றதுக்கு ப்ரமாண பூர்வகமர்த்த மருளிச்செய்கிறார் (ஒள்ளியவித்யாதி). "மீள" என்றது-புந: என்ற அர்த்தத்தைத் தோற்றுவிக்கையாலும், "மெய்ம்மை" என்றது-தர்மவாசகமாக விருக்கையாலும், உக்தார்த்தாநுகுணமாக பதாரூடமாக்குகிறார் (மீளவென்றதியாதி).

(க) (உ) தி-வாய்-உ-அ-கூ. (ங) க-எ-கூ. (ச) ச-கூ-அ.

தேங்கினப்ரதேசங்கள்தோறும் திறந்துவிடுவதாகவிறே. மெய்ம்மை யாவது - பாகவதசேஷத்வமிறே. அதுஉள்ளது ப்ரதம ரஹஸ்யத் திலேயிறே. அது அவன்வாயிலே ஒள்ளியவாகிப்போந்த சப்த மாத்ரத்தையே அர்த்தஸஹிதமாகச்சொன்னுகை ப்ரதிபத்திபண்ணி ஞனிறே; தான்கருதினதாகையாலே.

இதுக்குக்கீழ் அஸுரர்களால் வந்த ப்ராதிகூல்யம் தீர்ந்தபடி சொல்லிற்று. மேல் தேவர்களாலே ஆஶ்ரிதர்க்கு வந்த ப்ராதிகூல் யத்தைப் போக்கினபடி சொல்லுகிறது. (மேலையித்யாதி) நாலுநாள் மநுஷ்யரைக் காட்டில் இருக்கிறோமென்கிற மேன்மையுடைய ராகை யாலே "அமரர்" என்கிறது. இனிமுப்பத்து முக்கோடி தேவர் களுக்கும் கர்த்தாவுமாய் இவர்களுக்குப் பதியாகையாலே "அமரர் பதி" என்கிறது - இந்த்ரனை. இவன் "எனக்கிட்டசோற்றை உண்ட வன் ஆர்" என்று பசியாலே மிகவும் கோபித்துவர, கடலைவறளா கப் பருகின நன்மேகங்களானவை காற்றோடேகூடி கல்மழையைப் பொழிய. "நன்மேகம்" என்றது - இந்த்ரன்சொன்ன விபரீதம் செய்கையாலே; முன்புநன்மையேயிறே செய்து போந்தன; அவை யிறே இப்போது அவன் கோபத்துக்கு அஞ்சி, பெருங்காற்றுங் கூடி கல்மழைபொழிந்து நலிகிறது. அன்றிக்கே"கார்" என்றுபாட மானபோது மழையாகக்கடவது. (கருதியித்யாதி) முன்பே தாம்

லையென்ற மநஸ்ஸு புரிந்தென்றபடி. "மெய்ம்மைகொள" என் றது -மெய்ம்மையையுடையவனுக நினைக்கவென்றபடி.

(மேலையித்யாதி) ஐஶ்வர்யத்தாலும், ஆயுஸ்ஸாலும் இவ்வரு குள்ளாரிற்காட்டில் மேலாயிருக்கிற தேவர்களுக்கெல்லா மதிபதி யான இந்த்ரன் "எனக்கிட்ட சோற்றை உண்டவனுர்?" என்று பசியாலே மிகவும் கோபித்துவர, கடலை வறளாகப் பருகுகையா லே கறுத்து, ஸ்வாமிசொன்ன கார்யம் செய்கையாகிற நன்மையை யுமுடைய மேகங்களானவை பெருங்காற்றோடே கல்வர்ஷமாக வர் ஷிக்க; அன்றிக்கே "கார்" என்று பாடமானபோது கல்லோடே கூட வர்ஷத்தைச் சொரியவென்று பொருளாகக்கடவது. (கரு

வெகுண்டுவர வென்றதினர்த்தம் (கோபித்துவர) என்றது. (வறளாக) சோஷிக்கும்படியாக. (ஸ்வாமி) இந்த்ரன். "காலொடு கல்பொழிய" என் றந்வயித்தர்த்தம் (காற்றோடே இத்யாதி). கருதியென்றதினர்த்தம் (இம்மலை

அமுதுசெய்யக்கருதி "இந்த்ரனுக்கிடுகிற சோற்றை இப்பர்வதத்துக்கு இடுங்கோள், இது உங்கள் ஆபத்காலத்துக்கு ரக்ஷிக்கும்" என்று தான் அருளிச்செய்தத்தைக் கருதியிறே இந்த ஆபத்திலே அவ்வரைதன்னையே குடையாக வெடுத்தது. இடையரையும் இடைச்சிகளையும் ரக்ஷிக்குமவனென்னுதே "காலிகள் காப்பவனே" என்றது - ரக்ஷித்தவனை அறிவாரைச் சொல்லவேணுமிறே. "ஆள" என்றது - ரக்ஷித்த ஆண்மையை யுடையவனென்னுதல்; என்னை ஆளவேண்டியிருந்தாயாகில் எனக்கு ஒருகாலாடுக வென்னுதல்;

தியித்யாதி) "இம்மலையே உங்களுக்கு ரக்ஷகம், இச்சோற்றை இதுக்கு இடுங்கோள்" என்று அடியில் அருளிச்செய்ததை நினைத்து அம்மலைதன்னையே குடையாகக்கொண்டு பசுக்களை ரக்ஷித்தவனே! இடையரையும் இடைச்சிகளையும் ரக்ஷித்தவென்னுதே, "காலிகள் காப்பவனே" என்றவிது - ரக்ஷ்யவர்க்கத்தில் ப்ரதாநம் இவையென்று தோற்றுகைக்காக. பண்ணினஉபகாரமறிவதும் இவையேயிறே. (ஆள) இப்படி ரக்ஷித்த ஆண்மையை யுடையவனேயென்னுதல்; என்னுடைய அபேக்ஷிதம்செய்து என்னை ஆளும்படியாகவென்னுதல். (எனக்கித்யாதி) எனக்காக ஒருகால் செங்கீரை ஆடியருளவேணும். (ஆயர்களித்யாதி) பூர்வவத். .... (௨)

யேயித்யாதி). வரையென்றதினர்த்தம் (மலைதன்னையே) என்றது. ப்ராதாந்யந்தன்னைக் காட்டுகிறார் (பண்ணினவித்யாதி). உபகாரமாவது-கோவர்த்தநோத்த(த்)ரணம்பண்ணி ரக்ஷித்தஉபகாரம். இவ்விடத்தில் (௧) "అథాహ సురభిః కృష్ణ మభివన్ద్య మనస్వినీ। స్వసన్తానైరుపామన్త్ర్య గోపరూపిణమచ్యుతమ్ - அதாஹஸுரபிஃ க்ருஷ்ணமபிவந்த்ய மநஸ்விநீ। ஸ்வஸந்தாநைருபாமந்த்ர்ய கோபரூபிணமச்யுதம்" என்றுதொடங்கி "ఏవంకృష్ణముపామన్త్ర్య సురభిఃపయసాత్మనః। జలైశ్చాకాశగఙ్గాయా ఐరావతకరోద్ధృతైః- ஏவம் க்ருஷ்ணமுபாமந்த்ர்ய ஸுரபிஃ பயஸாத்மநஃ। ஜலைஶ்சாகாஶகங்காயா ஐராவதகரோத்த்ருதைஃ" என்னுமளவும் ஶ்ரீ பாகவத தஶமஸ்கந்த ஸப்தவிம்ஶாத்யாய வசநங்கள் அநுஸந்தேயங்கள். இப்படி கோவிந்தாபிஷேகம் பண்ணுகையாலே பசுக்களே க்ருதஜ்ஞதை யுடையவைகளென்று கருத்து. "ஆள" என்றது-ஸம்போதநையாகவும், "ஆளுகைக்கு" என்று-துமுந்நந்தமாகவு மர்த்தமருளிச்செய்கிறார் (இப்படியித்யாதி). (ஆண்மை) ஆளுகை. ... ... (௨)

---

(௧) பாகவ-௧௦-௨௭-௧௮.

நான் உன்னை நியமித்து ஆளவேண்டில் எனக்கு ஒருகாலாடுக. (செங்கீரை) தமிழருடைய பிள்ளைக்கவிந்யாயமாகவுமாம். .... (உ)

ஸ்வா.—மூன்றாம்பாட்டு. (நம்முடையித்யாதி) என்னுடைய ஸ்வாமியானவனே!. இவர்க்கு நாயகனான பின்பிறே நான்மறையின் பொருளாய்த்ததும். அதாவது - நாராயணநுவாகம் தலைப் பெறுகையிறே. (நான்மறை) அநந்த வேதோபலக்ஷணம். (க) * వేదైశ్చ-

மூ.—நம்முடை நாயகனே! நான்மறையின் பொருளே!
நாவியுள் நற்கமலம் நான்முகனுக் கொருகால்
தம்மனையானவனே! தரணி தலமுழுதும்
தாரகையின்னுலகும்தடவி யதன்புறமும்
விம்மவளர்ந்தவனே! வேழமு மேழ்விடையும்
விரவியவேலைதனுள் வென்று வருமவனே!
அம்ம வெனக்கொருகாலாடுக செங்கீரை
ஆயர்கள்போரேறே! ஆடுகவாடுகவே. (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (நம்முடை நாயகனே) எங்களுக்கு நிர்வாஹகனானவனே!(நான்மறையின்பொருளே)நாலுவகைப்பட்ட வேதங்களுக்கும் ப்ரதாந ப்ரதிபாத்யனானவனே! (க)"వేదైశ్చసర్వై రహమేవవేద్యః- வேதைஶ்சஸர்வை ரஹமேவ வேத்ய:" என்றானிறே.

அரு.—மூன்றாம்பாட்டு. (நம்முடையித்யாதி) விபூதி பூ(భూ)தரானப்ரஹ்மாதிகளையும் வேதத்தில் சொல்லியிருக்கையாலே அவர்களை வ்யாவர்த்திக்கைக்காக (ப்ரதாநப்ரதிபாத்யனானவனே) என்றது. இதுக்கு ப்ரமாணம் (வேதைரித்யாதி). " அஹமேவ " என்றவிடத்தில் ஏவகாரம் ப்ரதாந ப்ரதிபாத்யாந்தரத்தை நிஷேதிக்கிறது. இங்கு ப்ராதாந்யமாவது-தாத்பர்ய விஷய ஸ்வரூபப்ராதாந்ய மென்று கொள்ளவேணும். இல்லையாகில் கர்மங்களே விசேஷ்யமாகவும், அக்நீந்த்ராதிகள் ஆராத்யமாகவும் சொல்லுகிறவிடத்துக்குச் சேராதிறே. இத்தைத் திருவுள்ளம் பற்றியிறே (உ) ఆదౌవేదాః ప్రమాణం స్మృతిరుపకురుతే సేతిహాసైః పురాణై ర్న్యాయైస్సార్థం త్వదర్చావిధిముపరి పరిక్షీయతే పూర్వభాగః। ఊర్ధ్వోభాగ స్త్వదీహాగుణవిభవ పరిజ్ఞాపనై స్త్వత్పదాప్తౌ వేద్యో వేదైశ్చసర్వై రహమితిభగవన్ స్వేనచ వ్యాచకర్థ- ஆதௌ வேதா:ப்ரமாணம் ஸ்ம்ருதிருபகுருதே ஸேதிஹாஸை: புராணைர்ந்யாயை ஸ்ஸார்த்தம் த்வதர்ச்சாவிதி முபரி பரிக்ஷீயதே பூர்வபாக:। ஊர்த்த்வோ பாகஸ்த்வதீஹாகுண விபவ

(க) கீ-க௫-க௫. (உ) ர-ஸ்த-உ-௯௯.

வேதைஶ்சவிறே. (ஒருகால் நற்கமலம் நான்முகனார் தமக்கும் நாபியுள் தம்மனையானவனே) ஓரோகாலங்களிலே திருநாபி கமலத்திலே விகஸிதமான தாமரையிலே உத்ப (த்பூ) வித்த நான்முகனார் தமக்கும், தாமரைக்கும் ஜந்மபூமியானவனே!; அன்றிக்கே மகர ஒற்று-னகரவொற்றாய் "நான்முகன் தன் அனை" என்று- நான்முகனுக்கு அன்னையென்றுமாம்.

(தரணியித்யாதி) அந்த ப்ரஹ்மாவுக்கும் ஆராத்யனாகைக்காக அந்ய சேஷபூதர் வர்த்திக்கிற பூதல மடங்கலும், ஸ்வஸ்வாதந்த்ர்ய பரர் வர்த்திக்கிற நக்ஷத்ரபதம் முதலான உபரிதநலோகங்களையும் நிலாத் தென்றல் போலே ஸ்பர்ஶித்து. (அதன்புறமும்) அண்டபித்திக்கப்புறமும். (விம்ம வளர்ந்தவனே) இரண்டு திருவடிகளாலும் தடவிக்கார்யம் பலித்தவாறே பூரித்தபடி. (வேழமித்யாதி) குவலயாபீடமும் ஏழுருஷபங்களும். (விரவிய வேலைதனுள்) நெஞ்சு

(நாபியுளித்யாதி) திருநாபியிலே உத்பந்நமாய் விலக்ஷணமா யிருந்துள்ள தாமரையைப் பிறப்பிடமாகவுடைய சதுர்முகனுக்கு ஒருகாலத்திலே தாய்போலே பரிவனானவனே! (தம்மனை) தாய். மதுகைடபர்கள் கையிலே வேதத்தைப்பறிகொடுத்து, (க) "వేదా మే పరమంచక్షుర్వేదా మే పరమంధనమ్- வேதாமே பரமம் சக்ஷுர்வேதாமே பரமம் தநம்" என்று இவன் "கண்ணிழந்தேன், தநமிழந்தேன்" என்று க்லேசப்பட, அவற்றை மீட்டுக்கொடுத்து ரக்ஷித்தபடியாலே "ஒருகால் தம்மனையானவனே" என்கிறது.

(தரணிதலமித்யாதி) பூதலமடங்கலும் நக்ஷத்ரலோகமும் நிலாத்தென்றல்போலே திருவடிகளாலே ஸ்பர்ஶித்து, அதுக்குப் புறம்புள்ள தேசமெங்குமொக்கப் பரிபூர்ணமாம்படி வளர்ந்தவனே!; இத்தால் - ஆஶ்ரிதனான இந்த்ரனுடைய அபேக்ஷித ஸம்விதாநம் தலைக்கட்டுகைக்காகச்செய்த வ்யாபாரம் சொல்லிற்று. (வேழமுமித்யாதி) குவலயாபீடமும் ஸப்தருஷபங்களும் நலிவதாகஉன்னோடே

பரிஜ்ஞாபனை ஸ்த்வத்பதாப்தள வேத்யோவேதைஶ்ச ஸர்வை ரஹமிதி பகவந் ஸ்வேநச வ்யாசகர்த்த" என்று பட்டரருளிச்செய்ததும். "நான்மறையின் பொருளே தம்மனையானவனே" என்றஸமபிவ்யாஹாரத்தைத் திருவுள்ளம் பற்றி "ஒருகால்" என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யம் (மதுகைடபர்களித்யாதி).

(க)

கலந்தகாலத்தில். வேலை - அளவும், பொழுதும், எல்லையும், செயலும். எல்லை என்றாலும் ஏலை என்றாலும் ஏகாரம் குறைந்து எல்லையைக் காட்டும். "வெலவை" என்றுபாடமானாலும் எல்லையைக் காட்டிப் பொருளொக்கும். (வென்றுவருமவனே) வேழத்தை ஒருகாலத்திலேயும், ருஷபத்தை ஒருகாலத்திலேயும் வென்றாலும் ப்ராதிகூல்யம் துல்யமாகையாலே சேரவருளிச் செய்கிறார். ஸாது ஜநங்களுக்கும் அபிமத விஷயத்துக்கும் ப்ராதிகூல்ய ப்ரதிபந்த (ங்ஞ) கங்களை வென்றது தம்பேறுகையாலே அம்மவென்கிறார்; அன்றிக்கே, இவன் ஜயித்து வந்தது "இவனை இன்னும் ஒன்றிலே மூட்டும்" என்று பயப்பட்டு "அம்ம" என்கிறாராதல். .... (ந)

ஸ்வா.—நாலாம்பாட்டு. (வானவரித்யாதி) தேவர்கள் ப்ரியப்

வந்து கலசின வளவிலே அவற்றை ஜயித்துவருமவனே!. வேழத்தையும் ருஷபத்தையும் ஜயித்தது பி(நி)ந்நகாலத்திலேயாயிருக்கச் செய்தேயும், ஏககாலத்திற்போலே யருளிச்செய்தது, விரோதி நிரஸநத்தில் த்வரையாலே. இத்தால் ஸ்ரீமதுரையில் பெண்களுக்கும் நப்பின்னைப் பிராட்டிக்கும் அதிப்ரியகரமாம்படிசெய்த வ்யாபாரங்கள்சொல்லப்பட்டன.(அம்ம)ஸ்வாமீ! (எனக்கித்யாதி) பூர்வவத்.(ந)

மூ.—வானவர் தாம்மகிழ வன்சகடமுருள
வஞ்சமுலைப்பேயின் நஞ்சமதுண்டவனே!
கானகவல்விளவின் காயுதிரக்கருதிக்
கன்றதுகொண்டெறியும் கருநிறவென்கன்றே!
தேநுகனும் முரனும் திண்டிறல்வெந்நகரன்
என்பவர்தாம் மடியச் செருவதிரச்செல்லும்
ஆனை! யெனக்கொருகாலாடுக செங்கீரை
ஆயர்கள் போரேறே! யாடுகவாடுகவே. (ச)

வ்யா.—நாலாம்பாட்டு. (வானவரித்யாதி) பூபா(ரூஹ)ர நிரஸ்நார்த்தமாக அர்த்தித்து அவதரிப்பித்ததேவர்கள், பருவம் நிரம்பு

விரவிய வேலைதனு ளென்றதுக்கர்த்தம் (கலசினவளவில்) என்றது. "வேலைதனுள்" என்றது-முழுச்சொல். ... ... (ந)

அரு.—நாலாம்பாட்டு. (வானவரித்யாதி) "வன்சகடமுருள" இத்யாதியைக் கடாக்ஷித்து "வானவர்தாம் மகிழ" என்று விசேஷித்துச்சொன்னதுக்குமர்த்த மருளிச்செய்கிறார் (பூபாரேத்யாதி). வன்மைக்கர்த்தம் (அஸுரா

படும்படியாக சகடாஸுரனை நிரஸித்து, தாய்போலே வஞ்சித்து வந்த பூதனையுடைய முலையில் கொடிதான அந்த நஞ்சை உண்டவனே!; அன்றியிலே "நஞ்சமுது" என்று ஸமஸ்த பதமானபோது, என்பாக்ய(ஞ்ஞு)த்தால் நஞ்சு அமுதாய்த்திறே யென்னுதல். ஜாதமான முஹூர்த்தத்தாலேயாதல்.

(கானகமித்யாதி) காட்டிலே கன்றுமேய்க்கிற விடத்திலே பெருத்த விளாவாய் காய்த்து நின்றும், கன்றாய் கன்றுகளோடே கலந்து மேய்கிறவளவிலே "இவை அஸுரமயங்களாயிருக்கும்" என்று திருவுள்ளம்பற்றி, அந்த கன்றான அஸுரனை எடுத்து விளாவின்காயும் கொம்பும் உதிர எறிந்து முடிந்துபோகையாலே, திருமேனி புகர் பெற்றபடி. என்கன்றிறே கன்றை எடுத்தெறிந்தது.

வதுக்கு முன்னே தொடங்கி ஆஸுரப்ரக்ருதிகளை நிரஸிக்கிறபடியைக்கண்டு ப்ரீதராம்படியாக, அஸுராவிஷ்டமாய்க்கொண்டு கண்வளருகிற விடத்திலே நலியவந்த ப்ரபலமான சகடத்தை முலைவரவு தாழ்த்துச் சீறிநிமிர்த்த திருவடிகளாலே கட்டழிந்து சிதறி உருளப்பண்ணி, பெற்றதாய்போல் வஞ்சித்துவந்த பேச்சியுடைய முலையில் கொடிதான நஞ்சை ப்ராணஸஹிதமாக உண்டவனே!. "நஞ்சமுதுண்டவனே" என்று பாடமானபோது - நஞ்சை அமுதாகவுண்டவனேயென்று பொருளாகக்கடவது. (க) "ஸ்தந்யம் தத்விஷஸம்மிஶ்ரம் ரஸ்யமாஸீஜ் ஜகத்குரோ:" - ஸ்தந்யம் தத்விஷஸம்மிஶ்ரம் ரஸ்ய மாஸீஜ் ஜகத்குரோ:" என்னக்கடவதிறே.

(கானகமித்யாதி) காட்டில் கன்றுகள் மேய்க்கப்போன விடத்திலே விளாவான வடிவைக்கொண்டும் கன்றான வடிவைக்கொண்டும் சிலவஸுரர்கள் தன்னை நலிவதாக வந்து நிற்க, அவற்றிலே ஒன்றையிட்டு ஒன்றை எறிந்து இரண்டையும் முடித்தபடியைச் சொல்

விஷ்டமாய்க் கொண்டித்யாதி). "வஞ்சப்பேயின் முலையினுடைய அது நஞ்சமுண்டவனே" என்றந்வயித்து அர்த்தமருளிச்செய்கிறார் (பெற்றதாயித்யாதி). வானவர் மகிழ்கைக்கு ஹேதுக்களைச்சொல்லுகிற ப்ரகரணமாகையாலே "வானவர்தாம் மகிழ உண்டவனே" என்றந்வயமுட்கொண்டு (ப்ராணஸஹிதமாக) என்றது. நஞ்சு அம்ருதமானதுக்கு ப்ரமாணம்(ஸ்தந்யமித்யாதி).

மீழும் மேலும் அஸுரநிரஸநம் சொல்லுகையாலே ததநுகுணமாக கானகமித்யாதிக்கு பா(வ)வம் சொல்லுகிறார் (காட்டிலித்யாதி). சப்தார்த்தம்

(க)

(தேனுகனித்யாதி) தேநுகன் முதலாக ஸமர்த்தருமாய் கொடியருமாயிருக்கிற அஸுரவர்க்கமடைய நசிக்கும்படி யுத்தத்திலே ஒரு மத்தக(ஜ)ஜம்போலேஅதிரச் சென்றபடி. ஆனை நடையில் அதிர்ச்சி கூடுமோ வென்னில்; நடந்த கடுமையாலே "அதிர" என்கிறது. ஆனைபோலே என்னுதே "ஆனை" என்றது- முற்றுவமை. (ச)

லுகிறது. காட்டிலேநிற்கிற வலிய விளாவினுடைய காய்களானவை உதிரும்படியாகக் கருதி, கன்றானவற்றைக்கொண்டு எறிந்து, கறுத்த நிறத்தையுடைய என்னுடையகன்றாய் நின்றவனே!. இத்தால்- விரோதி நிரஸநம்பண்ணுகையாலே திருமேனிபுகர்பெற்றபடியும்,எல்லாத்தசையிலும் ஆஸ்ரிதர்க்கு ப(ம்)வ்யனாயிருக்கும்படியையும்சொல்லுகிறது. "என்கன்றே" என்றது-உகப்பின் கார்யமான அஃறிணைச் சொல்லு. (தேனுகனித்யாதி) தேநுகனுகிற அஸுரனும், முராஸுரனும், திண்ணிதானதிறலையுடையனாய் அதிக்ரூரனுமா யிருக்கிற நரகாஸுரனு மென்று சொல்லப்படுகிறவர்கள் தாங்களடைய நசித்துப் போம்படியாக யுத்தத்திலே முடுகிச்சென்ற ஆனையானவனே!. ஆனைபோலென்னுதே, "ஆனை" என்றது-முற்றுவமை. (ச)

மூ.—மத்தளவும் தயிரும் வார்குழல்நன்மடவார்
வைத்தனநெய்களவால் வாரிவிழுங்கியொருங்
கொத்தவிணைமருத முன்னியவந்தவரை
ஊருகரத்தினொடு முந்தியவெந்திறலோய்!
முத்தினிளமுறுவல் முற்றவருவதன்முன்
முன்னமுகத்தணியார் மொய்குழல்களலைய
அத்த வெனக்கொருகாலாடுக செங்கீரை
ஆயர்கள்போரேறே யாடுகவாடுகவே. (ரு)

(காட்டிலே நிற்கிறவித்யாதி). விரோதிநிரஸநம் சொல்லுமிடத்தில் "கருநிற வென்கன்றே" என்றதுக்கு பா(ஷ)வமருளிச்செய்கிறார்(இத்தாலித்யாதி). "கன்று"என்கையாலே ப(ம்)வ்யதை. பரமசேதநனானவனை"கன்று"என்னக் கூடுமோ வென்ன வருளிச்செய்கிறார் (என்கன்றே யித்யாதி). அஃறிணைச் சொல்லாவது-அசேதநவாசியான சொல்லு. "உயர்திணை" என்று சேதந வாசியென்று தமிழ்க்கு வ்யவஹாரம். "செருவதிரச்செல்லும் ஆனை" என்றதினர்த்தம் (யுத்தத்திலே யித்யாதி). (முற்றுவமை) பூர்ணோபமை. அதாவது- உபமாநவாசகத்தால் உபமேயத்தைச் சொல்லுகை. ... ... (ச)

ஸ்வா. —அஞ்சாம்பாட்டு. (மத்தளவுமித்யாதி) (வார்குழலித்யாதி) வார் குழல் - தாழ்ந்தகுழலென்னுதல்; ஒப்பம்செய்த குழலென்னுதல். கடைகைக்கு யோக்யமாகப் பலபாத்ரங்களிலும் வைத்த தயிரும் நெய்யும் க்ருத்ரிமத்தாலே திருக்கைகளார 'வாரி அமுதுசெய்து.

(ஒருங்கொத்தவித்யாதி) "இணை" என்று இரண்டாய், தன்னிலொத்து உன்னிய மருதமாய் வந்தவரை ஒருங்கே சேரமறிந்து விழும்படியாகத் திருத்துடையாலும்திருத்தோள்களாலும்தள்ளின கடிய ஸாமர்த்த்யத்தை யுடையவனே!. (முத்தித்யாதி) திருமுத்துக்

வ்யா. —அஞ்சாம்பாட்டு. (மத்தளவுமித்யாதி) (வார்குழல் நன்மடவார் வைத்தன) நீண்ட கேசபா (ஈ) ரத்தையும், நன்றான மடப்பத்தையுமுடையரான ஸ்த்ரீகள் சேமித்து வைத்தவையான. (மத்தளவும் தயிரும் - நெய்யும் களவால் வாரிவிழுங்கி) மத்தாலே அளாவிக் கடைகைக்கு யோக்யமான தயிரும், முன்பு கடைந்த வெண்ணெய் உருக்கினநெய்யும், வைத்தவர்கள் அறியாதபடி க்ருத்ரிமத்தாலே அபிநிவேசாநுகுணமாக வாரி அமுதுசெய்து.

(உன்னிய - ஒருங்கொத்த விணைமருதம் - வந்தவரை) உன்னை நலியவேணுமென்னும் நினைவையுடையராய், அதுக்கிடாக ஒருபடிப்பட்ட நெஞ்சு ஒத்துள்ளவர்களாய், ஸ்வவேஷம் தெரியாதபடி இரட்டை மருதாய்வந்து நின்ற அஸுரர்களை. (ஊருவித்யாதி) நடுவே தவழ்ந்து போகையாலே திருத்துடைகளாலும் திருக்கைகளாலும் இரண்டருகும் சரிந்துவிழும்படி தள்ளிப்பொகட்ட கடிய திறலையுடையவனே!. (முத்தித்யாதி) திருமுத்துக்கள் தோன்றும்படி

அரு.—அஞ்சாம்பாட்டு. (மத்தளவுமித்யாதி) அந்வயமுகேந ப்ரதீகம் (வார்குழலித்யாதி). (சேமித்து) என்றது-ரக்ஷித்தென்றபடி. அளாவுமென்றது- "அளவும்" என்று குறைந்து கிடக்கிறதாய் அர்த்தமருளிச் செய்கிறார் (மத்தாலேயித்யாதி). (அளாவி)வ்யாபித்து.

உன்னியவென்றதினர்த்தம் (உன்னையித்யாதி.) ஒருங்கவென்றதினர்த்தம் (அதுக்கித்யாதி). ஒத்தவென்றதினர்த்தம் (நெஞ்சித்யாதி). உந்தியவென்றதினர்த்தம் (இரண்டருகுமித்யாதி). வெம்மையினர்த்தம் (கடிய) என்றது. "முத்து இன் இளமுருவல்" என்று பதவிபாக(ஈX)த்தைத் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார் (திருமுத்தித்யாதி). "முற்ற" என்றதினர்த்தம்

கள் தோன்றும்படி முறுவல் முதிர வருவதற்கு முன்னே, திருமுக மண்டலத்துக்கு மேலாகத் திருநெற்றியிலே கவியும்படி நெருங்கி அழகியதான திருக்குழல்களலைய. (அத்த) அப்பனே! .... (ரு)

ஸ்வா. —ஆறும்பாட்டு. (காயவித்யாதி) அப்போதலர்ந்த செவ்விக்காயாம்பூப்போலே யிருக்கிற திருநிறத்தையும், கழுத்தே கட்டளையாகப்பருகினமேகம்போலேயிருக்கிற திருமேனியுமுடைய

இனிதான மந்தஸ்மிதமானது பூர்ணமாக வருவதற்குமுன்னே, முன்முகத்திலே அழகுமிக்குச் செறிந்திருந்துள்ள திருக்குழல் களானவை (க) "பங்கிகள்வந்துன் பவளவாய்மொய்ப்ப" என்கிற படியே திருப்பவளத்தை மறைக்கும்படி தாழ்ந்தலையும்படியாக. (அணி) அழகு. (மொய்) செறிவு. (அத்த) அப்பனே!. .... (ரு)

மூ.—காயமலர்நிறவா! கருமுகில்போலுருவா!
கானகமாமடுவில் காளியனுச்சியிலே
தூயநடம்பயிலும் சுந்தரவென்சிறுவா!
துங்கமதக்கரியின் கொம்புபறித்தவனே!
ஆயமறிந்து பொருவானெதிர்வந்தமல்லை
அந்தரமின்றியழித்தாடிய தாளிணையாய்!
ஆயவெனக்கொருகாலாடுக செங்கீரை
ஆயர்கள்போரேறே யாடுகவாடுகவே. (சு)

வ்யா.—ஆறும்பாட்டு. (காயவித்யாதி) "காயா" என்கிற வித்தை "காய" என்று குறுச்கிக்கிடக்கிறது. நெய்ப்பாலும் நைல் யத்தாலும் காயாம்பூப்போலேயிருக்கிற நிறத்தையுடையவனே!. (கருமுகிலித்யாதி) இருட்சியாலும் குளிர்த்தியாலும் காளமேகம்

(பூர்ணமாக) என்றது. "முன்னமுகத்து" என்றதினர்த்தம் (முன் முகத்திலே) என்றது. அலையவென்றதுக்கு ப்ரமாண பூர்வக மர்த்தமருளிச் செய்கிறார் (பங்கிகளித்யாதி). (பங்கிகள்) திருக்குழல்கள். (முன்முகத்திலே) என்றதுக்கு (தாழ்ந்து அலையும்படியாக) என்றத்தோடந்வயம். "வார்குழல் நன் மட்வார் வைத்தன- மத்தளவும் தயிரும் - நெய்யும் களவால் வாரிவிழுங்கி, உன்னிய - ஒருங்கொத்த இணைமருதமாக வந்தவரை ஊருகரத்தினொடும் உந்திய வெந்திறலை யுடையவனே! அத்த-முத்தினிளமுறுவல் முற்ற வருவதன்முன் முன்னமுகத்தணியார் மொய்குழல்களலைய எனக்கு ஒருகாலாடுக" என்றந்வயம். ... ... (ரு)

அரு.—ஆறும்பாட்டு. (காயவித்யாதி) (நெய்ப்பு) ஸ்நிக்த(ꣲ)தை. இரு

(க) க - க - உ.

வனே! (கானகமித்யாதி) யமுநாதீரச்சோலை நடுவில் பெரிய மடுவிலே கிடக்கிற காளியன் பணம் விரிந்தாட, அதினுடைய உச்சியிலே. பரதஶாஸ்த்ரத்தில் சொல்லுகிறபடியே தூயநடம் என்னுதல்; பரதசாஸ்த்ரத்துக்கு ஹேதுவா மென்னுதலிறே ந்ருத்தத்துக்குத் தூய்மையாவது. இப்படி யிருக்கிறந்ருத்தத்தையிறே பண்ணிற்று. (சுந்தரவித்யாதி) அழகு விளங்காநிற்பானாய் "என்னுடையவன்" என்று நான் அபிமாநிக்கும்படி எனக்குச் சிறுப்பிள்ளையானவனே! உனக்குச் சிறுக்கனை எனக்குச் சிறுக்கனானவனே!. (துங்கவித்யாதி). மிக்கமதத்தையுடைத்தான கரியென்னுதல்; ஓக்கத்தையும் மதத்தையுமுடைத்தான கரியென்னுதல். இப்படியிருக்கிற குவலயாபீடத்தின் கொம்பை அநாயாஸேந பிடுங்கினவனே!.

(ஆயமித்யாதி) மல் பொரும் விகல்பங்களை ஸாதித்து அறிந்த ப்ரகாரம்தோன்ற எதிரே பொருவதாக வந்தணிந்து நின்ற மல்ல

போலிருக்கிற வடிவை யுடையவனே!. (கானகமித்யாதி) காட்டிடத்திலே பெரியமடுவினுள்ளே கிடந்தகாளியனை அலைத்துக்கிளப்பி க்ரோதத்தாலே விஸ்த்ருதமான அவன் சிரஸ்ஸிலே, ஸலக்ஷணமாகையாலே அழகியதாயிருந்துள்ள ந்ருத்தத்தை நெருங்கச்செய்த அழகையுடைய என்பிள்ளையானவனே!. சுந்தரம் - அழகு. சிறுவன்- பிள்ளை. (துங்கவித்யாதி) பெரிய உயர்த்தியையுடைத்தாய் மதமுதிதமான குவலயாபீடத்தினுடைய கொம்புகளை அநாயாஸேந பிடுங்கினவனே!.

(ஆயமித்யாதி) மல்பொரும் கூறறிந்து பொருவதாக எதிர்

ட்சி) நீலப்ரபை(ஞ). "கான் அகம்" என்று பதவிபாக(ஞு'X)ம் திருவுள்ளம்பற்றி (காட்டிடத்திலே) என்றது. உச்சியில் நடம்பயிலுகைக்கு பணங்கள் விஸ்த்ருதமானபடியைக் காட்டுகிறார் (காளியனை அலைத்தித்யாதி). (அலைத்துக்கிளப்பி) என்றதுக்கு (நெருங்கச்செய்த) என்றத்தோடந்வயம். "பறித்தவனே" என்றதுக்கு பூப்பறித்தவனென்னுமாபோலே அநாயாஸேந பறிக்கை விவக்ஷிதமென்கிறார் (அநாயாஸேந பிடுங்கினவனே) என்று.

ஆயமென்றதினர்த்தம் (மல்பொருங்கூறு) என்றது. அதாவது - பண்ணுகிற ப்ரகாரங்களில் மல்லருடைய யுத்தப்ரகாராம்சத்தை யென்றபடி. "பொருவான்" என்றதினர்த்தம் (பொருவதாக) என்றது. அந்தரமின்றி

ரை. (அந்தரமித்யாதி) அவர்கள் அணிந்து நின்றால் தானும் எதிரே சென்றுநின்று பா(ஷா)ஷைகூறி பொருகையன்றிக்கே, இடைவெளி தோன்றாதபடி சிக்க்ரமாகச் சென்று மல்பொரும் க்ரமத்திலே திருவடிகளாலே கூட்டி அவர்களுடைய எலும்புகள் முறிந்து வெண்கலப்பைபோல்தூக்கி எடுக்கும்படி நெரித்து. ஆயம் - மல்லில் கூறுபாடு. அந்தரம் - அவகாசம். அன்றிக்கே, அந்தரமின்றியாவது - உடலுமுடலும் இடைவெளியறப் பொருந்தினபடி. அன்றிக்கே - அந்தரமாவது - பொல்லாங்காய், தனக்குப் பொல்லாங்கின்றியிலே யென்னவுமாம். (ஆடியதாளிணையாய்) "இன்னும் ஆரேனும் வருவாருண்டோ" என்று ஸஞ்சரித்தபடி. (ஆய) உனக்காய எனக்கென்னுதல்; ஆயனே! என்னுதல். .... (சா)

ந்து வந்த மல்லரை, அவர்களுக்கு வ்யாபரிக்கைக்கு இடமறும்படி சிக்க்ரமாகச் சென்றுஓடிப் பொருது அழித்து, "இன்னம் வருவாருண்டோ" என்று பார்த்து மநோஹரமாம்படி ஸஞ்சரித்த திருவடிகளை யுடையவனே!; அன்றிக்கே, "அந்தரமின்றி" என்றது - மல்பொருகிறபோது உடலும்உடலும் இடைவெளியறப்பொருந்தும்படிபொருதபடியைச் சொல்லுகிறதாகவுமாம். அன்றிக்கே, அந்தரமாவது - அபாயமாய், உனக்கொரு அபாயமில்லாதபடி அவர்களைஅழித்து என்கிறதாகவுமாம். (ஆய) ஆயனே! .... (சா)

மூ.—துப்புடையாயர்கள்தம் சொல்வழுவாதொருகால்
தூயகருங்குழல் நற்றோகைமயிலனைய
நப்பினைதன்திறமா நல்விடையேழவிய
நல்லதிறலுடைய நாதனுமானவனே!
தப்பினபிள்ளைகளைத் தனமிகுசோதிபுகத்
தனியொருதேர்கடவித் தாயொடு கூட்டியவென்
அப்ப! எனக்கொருகாலாடுக செங்கீரை
ஆயர்கள்போரேறே யாடுகவாடுகவே (எ)

யென்றதுக்குத் தாத்பர்யம் (அவர்களுக்கித்யாதி). (சென்றோடி) போய்க்கிட்டியென்றபடி. "ஆடிய" என்றதுக்கு ப்ரயோஜநமுகேந தாத்பர்ய மருளிச்செய்கிறார் (இன்னும் வருவாரித்யாதி). அந்தரமென்றதுக்கு காலாவகாச பரமாகக் கீழ்த்தமருளிச் செய்து, தேசாவகாசபரமாக அர்த்தாந்தரம் (அன்றிக்கேயித்யாதி). ... ... (சா)

ஸ்வா.— ஏழாம்பாட்டு. (துப்பித்யாதி) துப்பு - மிடுக்கு. (தூயகருங்குழல்) குழலுக்குத் தூய்மையாவது- க்ருஷ்ணன்விரும்புகை. (நற்றோகைமயிலனைய) நன்றான தோகையையுடைய மயில் போன்ற சாயலையுடைய நப்பின்னைப் பிராட்டிஹேதுவாக. இவளோடே சேரலாமாகில் ஆர் சொல்லிற்றுச் செய்தால் நல்லதென்றிறே "துப்புடையாயர்கள்தம் சொல்வழுவவொண்ணாது" என்று ஒருகால விசேஷத்திலே கொடியருஷபங்களேழையும் விளக்குப் பிணம்போலே உருக்காணவொண்ணாதபடி அவித்த ஸாமர்த்த்யத்தைக்கண்டு, இடையர் "எங்கள் குலநாதன்" என்று கொண்டாடும்படி அவர்களுக்கு நாதனுமானவனே!. "துப்பு" என்றுநெஞ்சில் வலியாகவுமாம். அதாவது - ருஷபங்களின்வன்மையும் இவனுடைய திருமேனியில் மென்மையும் பார்க்கவறியாத மிடுக்கிறே.

வ்யா.— ஏழாம்பாட்டு. (துப்பித்யாதி) துப்பு - மிடுக்கு. இத்தால்-ஏறுதழுவவல்ல ஸாமர்த்த்யத்தைச்சொல்லுதல்; அன்றிக்கே, ருஷபங்களின் வன்மையும் இவன் மென்மையும் பாராதே இவற்றைத் தழுவவேணுமென்ற நெஞ்சுரமாதல். இப்படியிருந்துள்ள இடையர் தங்களுடைய வசநத்தைத்தப்பாதே ஒருகாலவிசேஷத்திலே. (தூயவித்யாதி) அழகியதாய்க் கறுத்திருந்துள்ள குழலையுடையளாய், அத்தாலே நன்றானதோகை மயில்போலேயிருக்கிற சாயலையுடைய நப்பின்னைப் பிராட்டிஹேதுவாக, இவளோடே சேரலாமாகில் "ஆர் சொல்லிற்றுச் செய்தால் நல்லது" என்றிறே ஆயர்கள் தம் சொல்வழுவாதொழிந்தது. (நல்விடை யித்யாதி) கொடிதான ருஷபங்கள் ஏழும் விளக்குப்பிணம்போலே அவியும்படியாக நன்றான மிடுக்கை யுடையனாய், அத்தாலே இடையரும் "எங்கள்குல நாதன்"என்று கொண்டாடும்படி அவர்களுக்கு நாதனுமானவனே!.

அரு.—ஏழாம்பாட்டு. (துப்பித்யாதி) (இத்தால்)என்றவநந்தரம் "மற்றை ருஷபங்களை" என்று கூட்டுவது. ஆயர்களுடைய காயதார்ட்ட்யத்தைச் சொல்லி மநோதார்ட்ட்யமாக அர்த்தாந்தரம் (அன்றிக்கேயித்யாதி). ஹேதுவானபடியை உபபாதிக்கிறார் (இவளோடே யித்யாதி). (ஆர் சொல்லிற்றுச் செய்தால்) என்றது- ஆர்சொல்லிற்றுச் செய்தாலு மென்றபடி. நல் விடையானால் அவிக்கக்கூடுமோ வென்ன (கொடிதானவித்யாதி). "நல்" என்றால்

(நல்லதிறலுடைய) திறலுக்கு நன்மையாவது - பரார்த்தமாகை யிறே.

இவ்வளவேயோ? உபயவிபூதிக்கு நாதனான படியை அருளிச் செய்கிறார். (தப்பின வித்யாதி) ப்ரஸவஸமநந்தரம் மாதா எடுப்ப தற்கு முன்னே காணாமல் போன வைதிகன் புத்ரர்களை, தன்னதா யிருக்கிற*தன்னுடைச் சோதியிலே செல்லத்தானே அத்விதீயமான தேரை நடத்தி அங்கே சென்றுபுக்கு, பிள்ளைகளைக் கொண்டுவந்து, மாதாவானவள் "என்பிள்ளைகள்" என்று உச்சிமோந்து அணைக்கும் படி அவளோடேகூட்டின இம்மஹோபகாரத்தைத் தமக்குச்செய்த தாகக்கொண்டு "என்னப்பா" என்கிறார். .... (எ)

"நல்விடை" என்றது - "நல்லபாம்பு" என்னுமாபோலே க்ரௌர்ய த்தைப்பற்ற.

(தப்பினவித்யாதி) ப்ரஸவஸமநந்தரம் மாதாவானவள் காண்ப தற்குமுன்னே கைதப்பிப்போன வைதிக புத்ரர்களை. (க) "தன்னு டைச்சோதி" என்கிறபடியே தனக்கு அஸாதாரணமாய் நிரவதிக தேஜோரூபமான பரமபதத்திலே செல்லும்படியாகத் தனியே அத் விதீயமான தேரைநடத்தி, அத்தை ப்ரக்ருதி மண்டலத்தளவிலே நிறுத்தி, தானேஅங்கேசென்றுபுக்கு அங்குநின்றும்கொடுபோந்து, மாதாவானவள் "என்பிள்ளைகள்" என்று உச்சி மோந்து எடுக்கும் படி அவளோடே கூட்டினவனாய், ஆஸ்ரிதர் கார்யம்செய்து அவ் வழியாலும் எனக்கு உபகாரகனானவனே! .... (எ)

மூ.—உன்னையுமொக்கலையில்கொண்டு தமில்மருவி
உன்னொடுதங்கள்கருத்தாயின செய்துவரும்
கன்னியரும்மகிழக் கண்டவர்கண்குளிரக்
கற்றவர்தெற்றிவரப் பெற்றவெனக்கருளி

கொடுமையைச் சொல்லும்படி யென்னென்ன வருளிச்செய்கிறார் (நல்விடை யித்யாதி).

(நிரவதிக தேஜோரூபமான பரமபதத்திலே) என்றவிடத்தில் ஸ்ரீ ஹரி வம்ஸே ஷஷ்டிசததமே உ த்யாயே வைதிகபுத்ராநயநாநந்தரே (உ) "కథం సముద్రస్య బ్ధోయం కృత స్తే కమలేక్షణ। పర్వతానాఞ్చ వివరం కథ స్తే కృత మప్యభూత్ - கதம்ஸமுத்ர ஸ்தப்தோயம் க்ருதஸ்தே கமலேக்ஷண। பர்வதாநாஞ்ச விவரம் கதந்தேக்ருத மப்யபூத்" என்றநுஸந்தேயம்.

(க) தி-வாய்-ரு-கo-ரு. (உ) ஹரிவம்ச- ககூo-

ஸ்வா.—எட்டாம்பாட்டு. (உன்னையுமித்யாதி) தர்ஶநமாத்ரத்திலே த்ருஷ்டிசித்தாபஹரணம் பண்ணவல்ல உன்னையும். (ஒக்கலையில் கொண்டு தமில்மருவி) இதென்ன அருமைதான்; இவன்மத்ய மாங்கத்திலேயிருக்க தந்தாம்க்ருஹங்களறிந்தபடியென்?. (உன்னித்யாதி) ஏவம்ப்ரகாரனான உன்னோடே தங்கள் நினைவின்படியே பரிமாறி, மீண்டும் மாதாவின் பக்கலிலே கொண்டுவருகைக்குள்ள அருமை, தந்தாம் க்ருஹங்களிலே கொண்டு போனதிலும் அரிதிறே. (கன்னியரும்மகிழ) மாதா மகிழுமளவேயன்றிக்கே அபிமதைகளானவர்களும் உகக்க. விட்டுப்போகிறவர்கள் மகிழ்கிறது - விட்

மன்னுகுறுங்குடியாய்! வெள்ளறையாய்! மதிள்சூழ்
சோலைமலைக்கரசே! கண்ணபுரத்தமுதே!
என்னவலங்களைவா யாடுகசெங்கீரை
ஏழுலகுமுடையா யாடுகவாடுகவே. (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (உன்னையுமித்யாதி) ஸௌந்தர்யாதிகளாலே * த்ருஷ்டிசித்தாபஹாரியான உன்னையும் மருங்கிலே எடுத்துக்கொண்டு தங்கள் க்ருஹங்களிலே சேர்ந்து. "இதென்னஅருமைதான், இவன் மருங்கிலேயிருக்க இவர்கள் தங்கள் க்ருஹங்களறிந்து போனபடி என்" என்று கருத்து. (உன்னித்யாதி) ஈத்ருஶனான உன்னோடே தங்கள் நினைவுக்குத்தக்கபடி பரிமாறி, மீளவும் கொண்டுவராநிற்கும் பாலைகளானவர்களும் இச்சேஷ்டிதத்தைக் கண்டு உகக்கும்படியாக. இத்தால் தனியிடத்திலே யௌவநாவஸ்த்

அரு.—எட்டாம்பாட்டு. (உன்னையுமித்யாதி) "உன்னை ஒக்கலையில் கொண்டு" என்னாதே "உன்னையும் ஒக்கலையில் கொண்டு" என்று சொல்லுகையால் தமில்மருவுகைக்கு துஷ்கரதை தோன்றுகையாலும், "தங்கள் கருத்தாயின செய்து வரும்" என்றதுக்கநுகுணமாகவும் தாத்பர்யமருளிச் செய்கிறார் (ஸௌந்தர்யாதீத்யாதி). "தமில்" என்றதுக்கு(தங்களுடையக்ருஹம்) என்றர்த்தம்; இத்தை அருளிச்செய்கிறார் (தங்களித்யாதி). "உன்னையும்" என்கிற சப்தத்தையும் "தமில்மருவி" என்றபதத்தையும் கடாக்ஷித்து பலிதமான துஷ்கரதையைஅருளிச்செய்கிறார்(இதென்னவித்யாதி).இவனழகிலும் ஸௌகுமார்யத்திலும் துவக்குண்டு மயங்க ப்ராப்தமாயிருக்க, ஸ்வக்ருஹங்களில் சேர்ந்தது அதிதுஷ்கரமென்று திருவுள்ளம். (பாலைகளானவர்களும் என்ற ச(ஞ)காரம்-விரோதத்திலே. அதாவது - யௌவநாவஸ்த்தை யிருக்குமது

டப்போனல் வரும் வ்யஸநமறியாத மௌக்த்யமிறே. (கண்டவ ரித்யாதி) போக்குவரத்தில்பா(ஷா)வ பந்த(ஸ்த)மின்றியேகண்டவர் களுக்கும் இளநீர்க்குழம்புபோலே கண்குளிரும்போலேகாணும்.(கற் றவரித்யாதி) நாலுசப்தம்தொடுக்கக்கற்றவர்கள், பிள்ளையினுடைய ஸ்த்திதிக(X)மந ஶயநாதிகளைக்கண்டு,தங்கள்ப்ரீதியாலேபிள்ளைக்கவி பாடுவர். (பெற்றவெனக்கருளி) இதுமேலே அந்வயிக்கக்கடவது.

(மன்னித்யாதி) திருக்குறுங்குடியிலே நித்யவாஸம் பண்ணு கிறவனே!. (க) ‘‘𑌨𑌪𑍍𑌲𑌾𑌵𑌯𑌤𑌿 𑌸𑌾𑌗𑌰𑌃- நப்லாவயதி ஸாகர:’’ என்று நின்றதிறே. (வெள்ளறையாய்) இவர் விசேஷித்து மங்களாசாஸ நம்பண்ணும் தேசமிறே திருவெள்ளறை. (மதிள்சூழ் சோலைமலைக்

தனைத் தங்களோடே பரிமாறுமவன், மாத்ருஸந்நிதியில் இப்படி ஶைஶவாவஸ்த்தனைச்செய்கிற சேஷ்டிதம் கண்டால் அவர்கள் உகப்பார்களென்று கருத்து. (கண்டவர் கண்குளிர) ஆரேனுமாக இச்சேஷ்டிதங்களைக் காண்பவர்கள் கண்கள் இளநீர்க்குழம்பிட்டாப் போலே குளிரும்படியாக. (கற்றவர்தெற்றிவர) நாலுசப்தம் தொடுக்கக்கற்றவர்கள், உன்னுடைய பாலசேஷ்டிதரஸத்தைக் கண்டு பிள்ளைக் கவிகள் தொடுத்துவர. (பெற்றவெனக்கருளி) உன்னைப் பிள்ளையாகப்பெற்றஎனக்கு ப்ரஸாதத்தைப்பண்ணி. இது மேலே அந்வயிக்கக்கடவது.

(மன்னுகுறுங்குடியாய்) (க) ‘‘𑌨𑌪𑍍𑌲𑌾𑌵𑌯𑌤𑌿 𑌸𑌾𑌗𑌰𑌃- நப்லாவயதி ஸாகர:’’ என்கிறபடியே ப்ரளயத்துக்கும் அழியாத திருக்குறுங்குடியிலே வர்த்திக்கிறவனே!. (வெள்ளறையாய்) அவ்வளவன்றிக்கே, திருவெள்ளறையிலேயும் நித்யவாஸம்பண்ணுகிறவனே!. (மதிள்சூழ்

மகிழ்ச்சிக்கு ஹேதுவாயிருக்க, ஶைஶவாவஸ்த்தையைக் கண்டு மகிழக்கூடுமோ வென்கை. ஆகிலும் மகிழும் ப்ரகாரத்தை அருளிச்செய்கிறார் (இத்தாலித் யாதி). (இளநீர்க்குழம்பு) நாரிகேளாஞ்ஜநம். ‘‘தெற்றிவர’’ என்றதினர்த் தம் (பாலேத்யாதி). (பிள்ளைக்கவிகள்) என்றது-பால்யசேஷ்டிதங்களைச் சொல்லும் பாட்டுக்கள்.

‘‘மன்னு’’ என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யம் (நப்லாவயதீத்யாதி). ‘‘என்கிறபடியே’’ என்றது-என்னுமாபோலே யென்றபடி. அதாவது - க்ருஷ்ணன் திருமாளிகையை ஸாகரம் அமிழ்த்தாதாப்போலே யென்கை. (உ) * மதிதவழ்குடுமியான திருமலைக்கு மதிளென்கையாலே ஔந்நத்யம் தோன்று

(க)பாக-ரு-ங-அ-கூ. (உ) தி·வாய்-உ-கo.உ.

கரசே) இவர் நிர்ப்பரராம்படி திருமதிளுண்டாவதே அத்தேசத்துக்கு; திருமதிளாலே சூழப்பட்ட திருமலையிலே நித்யவாஸம் செய்து ஈரரசு தவிர்த்துநின்றவனே!. (கண்ணபுரத்தமுதே)மங்களாசாஸநம் பண்ண, (க) ✻ கற்றவர்கள்தாம்வாழும் கணபுரமிறே. '(அமுதே என்னவலம்களைவாய்) ஜ்ஞாநஸங்கோசம் பிறவாமல் ரக்ஷகத்வத்தை மாறுடி நடத்துகையாலே, "அமுதே என்னவலங்களைவாய்" என்கிறார். இவர்க்கு அவலமுண்டாவது - அவன் நியாம்யனுகாதொழியிலிறே. இவர் அவனை நியமித்து "இவை முதலான திவ்ய தேசங்களிலே நித்யஸந்நிதிபண்ணவேணும்" என்று நிறுத்தினவர்போலே காணும். (பெற்றவெனக்கருளி) பெற்றாரும் தாமேபோலே காணும். (ஏழுலகுமித்யாதி) இவன் இவருக்கு நியாம்யனுனுவிறே ஏழுலகு முடையனுவது. "உன் உடைமையை நோக்கிக் கொள்ளாய்" என்கிறார்.

சோலைமலைக்கரசே) அரணுகப்போரும்படியான மதிளாலே சூழப்பட்ட திருமலைக்கு ராஜாவாய்க்கொண்டு ஈரரசுதவிர்த்துநின்றவனே!. (கண்ணபுரத்தமுதே) ஸர்வஜந போக்ய (ஶ்ரீX௲)மாம்படி திருக்கண்ணபுரத்திலே நிற்கிற அம்ருதமே. (என் அவலம் களைவாய்) என்னுடைய அவத்யத்தைப்போக்குமவனே!. அதாவது - எனக்கு ப(ஶ)வ்யனுய் நான்சொன்னபடிசெய்கையாலே நீஅநியாம்யனுனபோது நான்படும் க்லேசத்தைப் போக்குமவனே யென்கை. (ஆடுக செங்கீரை) இப்படியிருக்கிற நீ செங்கீரை ஆடியருளவேணும். (ஏழுலகுமித்யாதி) ஸமஸ்தலோகங்களுக்கும் ஸ்வாமியானவனே! ஆடியருளவேணுமென்கை.

கிறதென்றத்தை அருளிச்செய்கிருர் (அரணுகப் போரும்படியான) என்று• பரமபதத்தில் நின்றும் வந்து சோலைமலைக்கு ராஜாவாய் அழகாலும் சீலாதிகளாலும் நாட்டை வென்று தனக்காக்கிக் கொள்ளுகையாலே (ஈரரசுதவிர்த்து நின்றவன்) என்றது. அவலமென்றதினர்த்தம் (அவத்யத்தை) என்றது. (உ) "என்னநோன்பு நோற்ருள்கொலோ இவனைப்பெற்ற வயிறுடையாள்" என்று புகழப்படுமவளுக்கு அவத்யம்வரப்ரஸக்தியில்லாமையாலே, "செங்கீரையாடுக" என்னும்படி பவ்யனுயிருக்கிற ப்ரகரணுநுகுணமாக அவத்யத்தை விவரிக்கிருர் (அதாவதித்யாதி) ... ... (அ)

(க) பெரு-தி-அ-சு. (உ) உ-உ-சு.

"மன்னுகுறுங்குடியாய் வெள்ளறையாய் மதிள்சூழ் சோலை மலைக்கரசே கண்ணபுரத்தமுதே என்னவலம் களைவாய் - ஏழுலகு முடையாய் - உன்னையும் ஒக்கலையில்கொண்டு தமில் மருவி உன்னொடு தங்கள் கருத்தாயின செய்து வரும் கன்னியரும் மகிழக் கண்டவர் கண்குளிரக் கற்றவர் தெற்றிவரப்பெற்ற வெனக்கருளி-ஆடுக" என்றந்வயம். .... (அ)

ஸ்வா.—ஒன்பதாம்பாட்டு. (பாலித்யாதி) பால் நெய்தயிர் முதலானவைகளை, களவிலும் வெளியிலும் பலகாலும் அமுதுசெ

"மன்னு குறுங்குடியாய்" என்றுதொடங்கி, "என் அவலம் களைவாய்" என்று ஸம்போதித்து, "உன்னையு மொக்கலையில்" என்று தொடங்கி, "பெற்றவெனக்கருளி - ஆடுக செங்கீரை" என்று அந்வயம். .... (அ)

மூ.—பாலொடுநெய்தயிரொண் சாந்தொடுசெண்பகமும்
பங்கயம் நல்லகருப்பூரமும் நாறிவரக்
கோலநறும்பவளச் செந்துவர்வாயினிடைக்
கோமளவெள்ளிமுளைப்போல் சிலபல்லிலக
நீலநிறத்தழகாரைம்படையின் நடுவே
நின்கனிவாயமுத மிற்று முறிந்துவிழ
ஏனுமறைப்பொருளே யாடுக செங்கீரை
ஏழுலகுமுடையா யாடுகவாடுகவே. (கூ)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (பாலித்யாதி) பாலோடேகூட நெய்யும் தயிருமாகிற க(X) வ்யங்களைப் பலகாலும் அமுதுசெய்கை

அரு.—ஒன்பதாம்பாட்டு. (பாலித்யாதி) பால்முதலானவைகள் க்ருஷ்ணன் திருமேனியிலே கந்தித்து வருகைக்கு ஹேதுக்களை அருளிச்செய்து கொண்டு அர்த்தமருளிச்செய்கிறார் (பாலோடே யித்யாதி). (தயிரும்) என்ற ச(ஃ)காரம் வெண்ணெயை ஸமுச்சயிக்கிறது. நந்தாதிகளுக்கு முத்திறமுமுண்டா யிருக்கச் செய்தேயும், ஆழ்வார் பரிவராகையாலே சிறுப்பிள்ளைகள் சரீரங்களுக்கு மாஹிஷாதிகள் ஹிதமாகாமையாலே அருளிச் செய்யாரென்றும், க்ருஷ்ணனுக்கும், பண்ணின உபகாரமறியும் பசுக்களிடத்தில் ப்ரீத்யதிசய முண்டாகையாலும், கவ்யமே விவக்ஷித மென்றருளிச் செய்கிறார் (கவ்யங்களை)என்று. (க)"செண்பக மல்லிகையோடு செங்கழுநீர்" என்

(க) உ-எ-கo.

முடநாற்றமும், உகந்தார் உகந்தபடி சாத்தினநிற மழகிதான சாந்து செண்பகம் முதலானவையும், குணுங்கோடே கலந்து பரி

யாலும், திருமேனியிலே அழகிய சாந்து செண்பகம் முதலானவற்றைப் பலகாலும் சாத்துகையாலும், திருமேனி அசைகையாலே அவையும், ஹர்ஷத்தாலே (க) "கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ" என்னும்படியான திருப்பவளம் விகஸிக்கையாலே பங்கஜமும் நல்ல கர்ப்பூரமுமாகிற அவையும் தன்னிலேகலந்து கந்தி (గన్ధి) கிற பாட்டைத்திருவுள்ளம்பற்றி "செண்பகம்" என்றத்தை உபலக்ஷணமாக்கி அர்த்தமருளிச்செய்கிறார் (திருமேனியிலே யித்யாதி). (அவையும்) பால் முதலானவற்றினுடைய கந்தங்களும். அவையுமென்ற ச(చ)காரத்தால் "சாந்தொடு செண்பகமும்" என்ற சகார விவக்ஷிதமான ஸமுதாயம் தோன்றுகிறது.

கீழே திருமேனியில் கந்தங்களெல்லாம் சொல்லியிருக்க, மீளவும் "பங்கயமும் கருப்பூரமும்" என்று சொல்ல ப்ரஸக்தியேதென்ன ; ப்ரமாண பூர்வகமாக இது ஸ்வாபாவிக கந்தங்களைச் சொல்லுகிறதென்கிறார் (ஹர்ஷத்தாலே கர்ப்பூரமித்யாதி). (உ)"పద్మవర్ణం సుకేశాన్తం పద్మనిశ్వాసముత్తమమ్। కదా ద్రక్ష్యామి రామస్య వదనం పుష్కరేక్షణమ్ - பத்மவர்ணம்ஸுகேசாந்தம் பத்மநிஶ்வாஸமுத்தமம்। கதா த்ரக்ஷ்யாமி ராமஸ்ய வதநம் புஷ்கரேக்ஷணம்" என்றும், (௩)సదృశం శారదస్యేన్దోః ఫుల్లస్య కమలస్య చ। సుగన్ధి మమ నాథస్య ధన్యా ద్రక్ష్యన్తి తన్ముఖమ్- ஸத்ருஶம் ஶாரதஸ்யேந்தோ: புல்லஸ்ய கமலஸ்ய ச। ஸுகந்தி மமநாதஸ்ய தந்யாத்ரக்ஷ்யந்தி தந்முகம்" என்றும் சொல்லுகிறஸ்வாபாவிக கந்த(గన్ధ)ங்களெல்லாம் ஆண்டாளுக்குக் கருத்தென்று திருவுள்ளம். (பங்கயமும் கருப்பூரமும்) என்றது-தத்தத் கந்த(గన్ధ) ங்களை யென்றபடி. (கந்தித்துவர) என்றது-அபிவ்யக்தமாய் வர யென்றபடி. அமுது செய்கையாலும், சாத்துகையாலுமுண்டான இவை - திருமேனி அசைகையாலேயும், பங்கயமும் நல்ல கருப்பூரமுமான இவை - "கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ" என்னும்படியான திருப்பவளம் ஹர்ஷத்தாலே விகஸிக்கையாலேயும், இவை தன்னிலே கலந்து கந்தித்து வரவென்று அங்கங்கே அத்த்யாஹரித்துஅந்வயம் கண்டுகொள்வது. அன்றிக்கே, அமுது செய்கையாலும் சாத்துகையாலும் பரிமளிதமான திருமேனி அசைகையாலேதோற்றும்படியான அவையும், "கர்ப்பூரமித்யாதி" என்னும்படியான திருப்பவளம் ஹர்ஷத்தாலே விகஸிக்கையாலே தோற்றும்படியான பங்கயம் நல்ல கருப்பூரமுமா

(க) நா-தி-எ-க. (உ) ரா-அயோ-கூக-அ. (௩)

மளிதமாய் எங்கும் பரந்துதோற்ற. (கோலமித்யாதி) தர்ஶநீய மாய், பரிமளிதமான செம்பவளம்போலே துவர்ந்த திருப்பவளத் திடையிலே வெள்ளி அரும்பினுப்போலே நன்ருன திருமுத்துக்கள் ஒளிவிட.

(நீலமித்யாதி) அழகார்ந்த நீலநிறத் திருமார்விலே ஸ்ரீபஞ்சா யுதத்தின் நடுவே பக்வப (ஃ)லம் போலே கனிந்த உன்னுடைய திருப்பவளத்தில் அம்ருதமானது இற்றிற்றுவிழ. (மறையேலும்

த்துவர. (கோலமித்யாதி) தர்ஶநீயமாய் பரிமளிதமான பவளம் போலே அழகியதாய்ச் சிவந்திருக்கிற திருவதரத்தினுள்ளே இளை யதான வெள்ளி அரும்புபோலே சிலமுத்துக்கள் விளங்க.

(நீலமித்யாதி) நீலமான திருமேனி நிறத்துக்குப் பரபாக (ஓ^X) த்தாலே அழகுமிக்கிருக்கிற ஸ்ரீ பஞ்சாயுதத்தின் நடுவே உன்னு டைய பக்வப(ஃ)லம்போலேயிருக்கிற திருப்பவளத்திலூருகிற வாக ம்ருத ஜல்மானது இற்றிற்றுவிழ. (ஏலுமித்யாதி) தகுதியான வே

கிற அவையும் கந்தித்து வரவென்று இப்படி அங்கங்கே அத்த்யாஹரித்து அந்வயமாகவுமாம்.

"கோலமாய், நறுவிதாய் பவளம்போலேயிருக்கிறசெந்துவர்வாய்" என்று எல்லாம் திருவதரத்துக்கே விசேஷணமாகச் சொல்லுமளவில் முன்பே கந்த (X)வத்வம் சொல்லியிருக்கையாலே மீளவும் " நறும் " என்று சொன்னுல் புநருக்தமாமென்றும், ப்ரவாளம் நேரே உபமாநமாகாமையாலும் பவளத்துக்கு விசேஷணமாக அந்வயித்து அபூ(஝ு)தோபமையென்று கருத்தாக்கி அர்த்த மருளிச்செய்கிருர் (தர்ஶநீயமாயித்யாதி). "செம்" என்றதினர்த்தம் (அழ கியதாய்) என்றது. "கோமளம்" என்று-ம்ருதுத்வம் சொல்லுமளவில், வெள் ளிக்கும் தந்தங்களுக்கும் சொல்லக்கூடாமையாலும், முளைகளை தந்தங்களு க்கு உபமாநமாக கவிகள்சொல்லாமையாலும், இளமையும் அரும்புமாக அர்த்த மருளிச்செய்கிருர் (இளையதானவித்யாதி). இளமை தோற்ற வெள்ளியாலே பண்ணின அரும்பு போலே யென்று கருத்து. "சிலபல்" என்றது- பருவத் தைப்பற்ற.

நீலபதத்தைத் திருவுள்ளம்பற்றி அர்த்தமருளிச்செய்கிருர் (நீலமான வித்யாதி). (நிறத்துக்குப் பரபாக(ஓ^X)த்தாலே) என்றது-அதுக்கு விஜா தீயமான வர்ணோத்கர்ஷமுண்டாயிருக்கையாலே யென்றபடி. (பஞ்சாயுதம்) என்றது - திருமார்பில் சாத்தின பஞ்சாரமென்கிற ஆபரணவிசேஷம். "இற் றுமுறிந்து" என்கிறது-அர்த்த்தஃ மீமிசையாகையாலே (இற்றிற்று) என்றது.

பொருளே) (க) వేదైశ్చ - வேதைஶ்சவிதே. ஏல்-பொருத்தம். மறைக்குப்பொருந்தின பொருள்யாதொன்று, அதிறே ஏழுலகுக்கும்ஸ்வாமியாவது. .... (கூ)

ஸ்வா.—பத்தாம்பாட்டு. (செங்கமலமித்யாதி) சிவந்த்தாமரைபோலேயிருக்கிற திருவடிகளில் பூவின் உள்ளிதழ்போலேயிருக்கிற திருவிரல்களிலே ஸஹஜமென்னும்படிசேர்ந்து ஒளிவிடாநின்ற அங்குளீயங்களும், திருவரையில் - கிண்கிணியும், தங்கிய பொற்றிரு

தார்த்தமானவனே!(க)"వేదైశ్చసర్వైరహమేవవేద్యః-வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்யஃ"என்கிறபடியே வேதத்துக்கு அநுரூபமானஅர்த்தம் இவனேயிறே. சேஷம்பூர்வவத். .... (கூ)

மூ.—செங்கமலக்கழலில் சிற்றிதழ்போல்விரலில்
சேர்திகழாழிகளும் கிண்கிணியுமரையில்
தங்கியபொன்வடமும் தாளநன்மாதளையின்
பூவொடுபொன்மணியும் மோதிரமுங்கிறியும்
மங்கலவைம்படையும் தோள்வளையுங்குழையும்
மகரமும்வாளிகளும் சுட்டியுமொத்திலக
எங்கள்குடிக்கரசே யாடுகசெங்கீரை
ஏழுலகுமுடையா யாடுகவாடுகவே. (க௦)

வ்யா.—பத்தாம்பாட்டு. (செங்கமலமித்யாதி) சிவந்தகமலம் போலே யிருக்கிற திருவடிகளில், அதில் உள்ளிதழ்போலே சிறுகியிருக்கிற திருவிரல்களிலே ஸஹஜமென்னும்படி சேர்ந்து விளங்காநின்ற திருவாழி மோதிரங்களும், திருவரையில்கிண்கிணியும். அன்

(உ) వేదశాస్త్రాత్పరంనాస్తి నదైవంకేశవాత్పరమ్ - வேதசாஸ்த்ராத் பரம் நாஸ்தி நதைவம் கேசவாத்பரம்" என்கிறபடியே - வேதம் ஸர்வப்ரமாணோத்க்ருஷ்டமானுப்போலே ஸர்வப்ரமேயோத்க்ருஷ்டனை இவனே தகுதியான அர்த்தமென்று இத்தை ப்ரமாணமுகேந உபபாதிக்கிறுர் (வேதைஶ்சேத்யாதி). ... ... (கூ)

அரு.—பத்தாம்பாட்டு. (செங்கமலமித்யாதி). "சேர்" என்றத்தாலே ஸுஸம்ஶ்லிஷ்டதை தோன்றுகையாலே அத்தை அருளிச்செய்கிறுர் (ஸஹஜமென்னும்படி சேர்ந்து) என்று. "அரையில்-கிண்கிணி" என்றந்வயித்து அர்த்தமருளிச்செய்கிறுர் (திருவரையித்யாதி). "செங்கமலக்கழலில் கிண்

(க) கீ-கரு-கரு. (உ) ஹரிவம்-சேஷத-உ-கரு.

வரைநாணும், கோவையிட்ட தாளையுடைத்தாய் நன்றான மாதளையின்பூவோடே கோக்கப்பட்ட பொன்மணிகளும். (மோதிரமும்) திருவிரல்களில் சாத்தின மோதிரமும். (கிறியும்) திருக்கையிலேசாத்தித் திருமஞ்ஜநத்திலும் கழற்றவொண்ணாத சிறுப்பவளவடமாதல்; பிறைமுகப்பணியாதல்;

(மங்கலவைம்படையும்) திருமார்பிலே பிள்ளைக்கு ரக்ஷையாகச் சாத்தினஸ்ரீபஞ்சாயுதமும், தோள்வளையும். (குழையும்) திருக்காதுப் பணிகளும். (மகரமும்) திருமகரக்குழையும். (வாளிகளும்) திருச்செவிமடல்மேலே சாத்தின வாளிகளும். (சுட்டியும்) திருக்குழலில்

றிக்கே "கிண்கிணி" என்கிறவித்தைக் கீழோடே சேர்த்துப் பாதச் சதங்கையாகச் சொல்லவுமாம். "சேவடிக்கிண்கிணி" என்னக்கடவதிறே. (அரையில்தங்கிய பொன்வடமும்) திருவரையில் ஸர்வகாலமும் சாத்தியிருக்கும் பொன்னரைநாணும். (தாளநன்மாதளையின் பூவொடுபொன்மணியும்)(க) "உடையார் கனமணியோடொண் மாதளம்பூ" என்கிறபடியே தாளையுடைத்தாய் நன்றான மாதளம் பூவோடே நடுநடுவே கலந்துகோத்த பொன்மணிக்கோவையும். (மோதிரமும் கிறியும்) திருக்கையில் திருவிரலில் சாத்தின மோதிரங்களும், மணிக்கட்டில் சாத்தின சிறுப்பவளவடமும்.

(மங்கலவைம்படையும்) திருமார்வில்சாத்தின மங்களாவஹமான ஸ்ரீ பஞ்சாயுதமும். (தோள்வளையும்) அதுக்குப் பரபாக(ர)மாய்க்கொண்டு இரண்டருகும் விளங்காநின்றுள்ள திருத்தோள் வளைகளும். (குழையும்) திருக்காதுப் பணிகளும். (மகரமும்) திருமகரக்குழைகளும். (வாளிகளும்) திருச்செவிமடல்மேல் சாத்தின வாளிகளும். (சுட்டியும்) திருக்குழலிலே சாத்தித் திருநெற்றிக்

கிணி" என்றந்வயித்து யோஜநாந்தரமருளிச்செய்கிறார் (அன்றிக்கேயித்யாதி). கிறி பதார்த்தம் (பவளவடம்) என்றது.

திருமார்வில் பஞ்சாயுதங்களைச் சொன்னவநந்தரம் மேலேபோகாமல் அருகில் திருத்தோள்வளைகளை அநுபவிக்கைக்கு ப்ரஸக்திமுகேந அர்த்தமருளிச்செய்கிறார்(அதுக்கித்யாதி). (அதுக்கு)பஞ்சாயுதத்துக்கு. (காதுப்பணிகள்) என்றது - மகரகுண்டலவ்யதிரிக்தங்களான கர்ணபூஷணங்களென்றபடி. "ஒத்து" என்றதுக்கு இரண்டர்த்தம்; அவையெல்லாம் தன்னிலே

(க) ௧-௩-௨.

சாத்தின சுட்டியும். (ஒத்திலக) பிள்ளைக்குத்தகுதியாகப்ரகாசிக்க. (எங்கள் குடிக்கரசே) திருவாய்க்குலத்துக்கு அரசானவளவன் றிக்கே விசேஷித்து எங்கள் குடிக்கு அரசானவனே!. ....(க0)

அவ.— பதினோராம்பாட்டு. நிகமத்தில் இத்திருமொழிகற் றூர்க்குப் பலம் சொல்லித் தலைக்கட்டுகிறூர்.

ஸ்வா.—(அன்னமுமித்யாதி) ✻ அருமறை பயந்து, ✻ மலைகளை

கலங்காரமாக நாலும் சுட்டியும். (ஒத்திலக) இரண்டருகு மசைந் தாடுகையாலே எல்லாம்சேர ஒளிவிட வென்னுதல்; திருமேனிக் குத் தகுதியாய் ப்ரகாசிக்க வென்னுதல். (எங்கள் குடிக்கரசே) எங் களுடைய குலத்துக்கு ராஜாவானவனே! .... (க0)

அவ.—பதினோராம்பாட்டு. நிகமத்தில், இத்திருமொழிகற்றூர் க்குப்பலம் சொல்லித்தலைக்கட்டுகிறூர்.

மூ.—அன்னமும்மீனுருவு மாளரியும் குறளும்
ஆமையுமானவனே! ஆயர்கள்நாயகனே!
என்னவலம்களைவா யாடுகசெங்கீரை
ஏழுலகமுடையாய்! ஆடுகவாடுகவென்று
அன்னநடைமடவா ளசோதை யுகந்தபரிசு
ஆனபுகழ்ப்புதுவைப் பட்டனுரைத்ததமிழ்
இன்னிசைமாலைகளிப் பத்தும்வல்லாருலகில்
எண்டிசையும் புகழ்மிக் கின்பமதெய்துவரே. (கக)

வ்யா.—(அன்னமுமித்யாதி) வேதப்ரதமானஹம்ஸமும், ப்ரளயா

சேரவென்னுதல்; திருமேனியோடொத்தென்னுதல். இவை இரண்டை யும்அடைவே அருளிச்செய்கிறூர் (இரண்டித்யாதிவாக்யத்வயத்தாலே).(க0)

அரு.— பதினோராம்பாட்டு. (அன்னமுமித்யாதி) அன்னமுமித்யாதி ச (ஃ) காரம் - அவ்வவதாரங்களுடைய அஸாதாரண சேஷ்டிதங்களுக்கு ஸூசகமென்று திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறூர் (வேதேத்யாதி). (க) "நிலையிட மெங்குமின்றி நெடுவெள்ளமும்பர் வளநாடு மூடவிமையோர் தலையிட மற்றெமக்கோர் சரணில்லையென்ன வரணாவனென்னு மருளால்" என்று தொடங்கி,"வருமீனைமாலை மறவாதிறைஞ்சென்மனனே" என்கிறதிருமங்கை யாழ்வார் ஸ்ரீஸூக்தியை உட்கொண்டருளிச் செய்கிறூர் (ப்ரளயாபத்ஸக மானவென்று). இவ்விடத்தில் (உ) " మీనతను స్త్వంనాథ నిధాయ స్థిరచర

(க)தி-மொ-கக-ச-க- (உ) ர-ஸ்த-உ-சு0.

மீதுகொண்டு, * அங்கோராளரியாய், * அறியாமைக்குறளாய், கிடந்துதுயிலுமாமையுமானவனே! (ஆயர்கள்நாயகனே) இடையர்க்கு ஸ்வாமியானவனே!.“இவ்வவதாரபரம்பரைகளுக்குஎன்வருகிறதோ” என்றிருக்கிற என்க்லேசத்தை, உன்னை நோக்கித்தந்து போக்கினவனே!. “ஆடுகசெங்கீரை” என்று பெருந்ருத்தவிசேஷம். (எழித்யாதி) ஏழேழென்று சொல்லப்பட்ட லோகங்களுக்கெல்லாம்ஸ்வாமியானவனே!. (ஆடுகவாடுக) என்னுதல்-“ஆடுக” “ஆடுக” என்று இளையாமைக்காக; அத்தை அமைக்கவும்ாம்.

(அன்னமித்யாதி)அன்னம்போலேநடையழகையும் ப(ஂ)வ்யதையுமுடைய யசோதை, “ஆடவேணும்” என்று ஆடக்கண்டு உகந்த

பத்ஸகமான மத்ஸ்யமும், ஹிரண்ய நிரஸநார்த்தமான நரஸிம்ஹமும், இந்த்ராபேக்ஷித ஸம்விதாநம் பண்ணும் வாமநனும், மந்தராதாரமான கூர்மமுமானவனே!. இத்தால்-ஆஶ்ரித ஸம்ரக்ஷணார்த்தமாக அஸாதாரண திவ்ய விக்ரஹத்தை அழியமாறிக்கொண்டு அவ்வவ தசாநுகுணமாக ரக்ஷிக்குமவனென்கை. (ஆயர்கள் நாயகனே) அவையெல்லாம்போலன்றிக்கே பூபா(ரு)ரநிர்ஹரணார்த்தமாக அவதரித்து இடையர்க்குத் தலைவனானவனே!. (என் அவலம் களைவாய்) எல்லாத்தசையிலும் “உனக்கென்வருகிறதோ” என்று வயிறெரியாநிற்கும் என்னுடைய க்லேசத்தை, உன்னைநோக்கித்தருகையாலே போக்கினவனே!. (ஆடுக செங்கீரை) செங்கீரை ஆடியருளவேணும். (ஏழுலகுமித்யாதி) ஸர்வலோகங்களுக்கும் ஸ்வாமியானவனே! ஆடவேணும், ஆடவேணுமென்று.

(அன்னமித்யாதி),அன்னம்போலேநடையழகையும் ப(ஂ)வ்யதையையுமுடையளான யசோதைப்பிராட்டி உகந்து சொன்ன ப்ரகா

పరికరమనుమనుభగవన్। వేదసనాభిస్స్వోక్తివినోదైరకలితలయభయాలవమమువహః-

மீநதநுஸ்த்வம் நாவி நிதாய ஸ்த்திரசரபரிகரமநுமநு பகவந்। வேதஸநாபிஸ்ஸ்வோக்திவிநோதை ரகலித லயபயலவ மமு மவஹ:” என்றது அநுஸந்தேயம். “ஆனவனே” என்றத்தாலே முன்பு இப்படியிராதவன் இப்படியானானென்று தோற்றுகையால், பலிதத்தை யருளிச்செய்கிறார் (இத்தாலித்யாதி). “ஆயர்களுக்கு நாயகன்” என்றத்தால் ஸௌசீல்யாதிசயம் தோற்றுகையாலே அருளிச்செய்கிறார் (அவையித்யாதி). “அவலம்” என்று - இவள் சொல்லுகைக்கு அவத்யம் வேறு இல்லாமையாலேஅத்தை விசேஷித்துக் காட்டாநின்றுகொண்டு அர்த்தமருளிச் செய்கிறார் (எல்லாத்தசையிலுமித்யாதி).

“ஆனபுகழ்” என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார்

ப்ரகாரத்தை. (ஆனபுகழித்யாதி) யசோதையிலும் மிஞ்சினபுகழை யுடையராய் புதுவைக்கு ஸ்வாமியானஆழ்வாரருளிச்செய்த இனிய விசையோடுகூடின தமிழ்மாலே இப்பத்தும் வல்லார். (உலகிலித் யாதி) இந்த தேஹத்தோடே இந்தலோகத்திலே யிருக்கச்செய்தே எட்டுதிக்கிலும் அடங்காத புகழையுடையராய், (க) "உரையாவெந் நோய்" என்கிறதுஃக்கமும்தீர்ந்து பரமஸுகிகளுமாகப்பெறுவர்கள். "அது" என்கையாலே சூழ்ந்திருந்தேத்துகையும் காட்டுமிறே. (கக)

பிள்ளை திருவடிகளே சரணம்.

—∞✲∞—

ரத்தை. (ஆனவித்யாதி) ப்ராஹ்மணோத்தமராய்வைத்து கோ(ரீ) பஜந்மத்தை ஆஸ்த்தாநம் பண்ணி, அவள் தத்காலத்திலே அநுப வித்தாப்போலே பிற்காலத்திலே அநுபவிக்கையாலே அவளிலுங் காட்டில் ஸம்ருத்தமான புகழையுடையராய், ஸ்ரீ வில்லிபுத்தூ ருக்கு நிர்வாஹகரான ஆழ்வாரருளிச்செய்த த்ராவிடரூபமாய் இனியதான இசையோடே கூடியிருந்துள்ள தொடைகளான இப் பத்தையும்அப்ய(ஸ்)ஸிக்கவல்லவர்கள். (உலகிலித்யாதி)இந்தலோக த்திலே இருக்கச்செய்தே எட்டுத்திக்கிலு மடங்காத பெரியபுகழை யுடையராய், அவர்களுக்கு நிலமல்லாதபகவதநுபவ பரமஸுகத்தை ப்ராபிக்கப் பெறுவர்கள். .... (கக)

பெரியஜீயர் திருவடிகளேசரணம்.

பெரியாழ்வார் திருமொழி முதற்பத்து அஞ்சாந்திருமொழி முற்றிற்று.

——(*)——

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

முதற்பத்து ஆறுந்திருமொழி மாணிக்கக்கிண்கிணி ப்ரவேசம்.

அவ.—கீழே-செங்கீரையாடுகையாகிற அவனுடைய பாலசேஷ்

(ப்ராஹ்மணோத்தமராய்) என்று துடங்கி (ஸம்ருத்தமான) என்னு மளவும். "உலகிலெண்டிசையும் மிக்க புகழை எய்து, அது இன்பமெய்துவர்" என்றந் வயம் திருவுள்ளம் பற்றி அர்த்தமருளிச்செய்கிறுர் (இந்தவித்யாதி). "அது" என்ற பதார்த்தம் (அவர்களுக்கு நிலமல்லாத) என்றது. (அவர்கள்) புத்தி ஸ்த்தரான நித்யஸூரிகள். ... ... (கக)

ஜீயர்திருவடிகளே சரணம்.

அரு.— மாணிக்கக் கிண்கிணி ப்ரவேசம். கீழ்த்திருமொழியிலே செங் கீரையும், மேல் திருமொழியில் "சப்பாணி கொட்டாய்" என்றுமிருக்கைக்கு ஸங்கதித்யோதநார்த்தம் வ்ருத்த வர்த்திஷ்யமாண கீர்த்தநம் பண்ணுகிறுர் (கீழேயித்யாதி). செங்கீரை ஆடுகைக்கும் சப்பாணி கொட்டுகைக்கும் பருவம்

(க) தி-வாய்-அ-௯-கக.

ஸ்வா.—மாணிக்கக்கிண்கிணிப்ரவேசம்.—கீழே "ஆடுக, ஆடுக" என்று ஆயாஸிப்பித்தார். இத்தால் ப்ரயோஜநம் அவதாரத்தில் மெய்ப்பாடுதோன்றினஒழுக்கமாகையாலே,வர்ணாஸ்ரமாதிகளுக்கும் ஶாஸ்த்ரஸித்தமாய், சக்த்யநுகுணமாய், †மங்களபர்யந்தமான நடப்புவேணுமென்றதாய்த்து. இனிமேல் "சப்பாணி" என்கிற வ்யாஜத்தாலே ஆகிஞ்சந்யத்தை வெளியிட்டு லோகத்தை ரக்ஷிக்கிறார்.

ஸ்வா.—முதற்பாட்டு.(மாணிக்கமித்யாதி) ஆணிப்பொன்னால்வாயழகியதான உடைமணியுடையமருங்கின்மேல் மாணிக்கக்கிண்கிணி

டிதத்தை, தத்காலத்திலே யசோதைப்பிராட்டி ப்ரார்த்தித்தநுபவித்தாப்போலே*மயர்வற மதிநல மருளப்பெறுகையாலே அந்த ஸ்நேஹத்தை யுடையராய்க்கொண்டு, தாமும் தத்காலம்போலே அநுபவித்தாராய்நின்றார்; இனி, சப்பாணிகொட்டுகையாகிற பால சேஷ்டிதத்தைச் செய்தருள வேணுமென்று அவனைப்ரார்த்தித்து அந்தசேஷ்டிதரஸத்தை அவளநுபவித்தாப்போலே ஒரு சேஷ்டிதத்தை அநுபவித்தவளவில் பர்யாப்தி பிறவாத அபி(நி)நிவேசாதிசயத்தாலே அந்த சேஷ்டிதரஸத்தையு மநுபவிக்க ஆசைப்பட்டு, அவள் பேசினாப்போலே பேசித் தாமு மநுபவிக்கிறார். *

மூ.— மாணிக்கக்கிண்கிணியார்ப்ப மருங்கின்மேல்
ஆணிப்பொன்னாற்செய்த வாய்பொன்னுடைமணி
பேணிப்பவளவாய் முத்திலங்கப்பண்டு [சப்பாணி. (க)
காணிகொண்டகைகளால் சப்பாணி கருங்குழற்குட்டனே!

வ்யா.—முதற்பாட்டு. (மாணிக்கமித்யாதி) மாற்றெழும்பின பொன்னாலே சமைக்கப்பட்டதாய்ப் பழிப்பற்று அழகியதாயிருந்

வேறுபட்டிருக்குமென்று, அதுக்கு அநந்தரம் இத்தை அநுபவிக்கிறாரென்று ஸங்கதியென்று திருவுள்ளம். (அநுபவித்தாப்போலே) என்றவநந்தரம் "இவ்வாழ்வார்" என்றுசேஷம். (அவளநுபவித்தாப்போல்)என்றதுக்கு (அநுபவிக்க ஆசைபட்டு) என்றத்தோடந்வயம். ... ... *

அந.—முதற்பாட்டு. (மாணிக்கக்கிண்கிணியித்யாதி) "ஆணிப்பொன்னாற் செய்த ஆய் பொன்னுடைமணி - மருங்கின்மேலே மாணிக்கக்கிண்கிணி ஆர்ப்ப" என்றந்வயித்தர்த்த மருளிச் செய்கிறார் (மாற்றெழும்பின வித்யாதி). "ஆணி" என்று விசேஷித்ததுக் கர்த்தம் (மாற்றெழும்பின) என்றது. அதாவது - நிறம் அதிகமான வென்றபடி. "ஆய்" என்றதினர்த்தம் (பழிப்பற்று)

† (பா) ஸ்வரூபாநுரூபமான.

ஆர்ப்ப. பொன் - அழகு. மாணிக்கக்கிண்கிணி சப்திக்குமோவென்னில்; நா, மாணிக்கமாகையாலே சப்திக்கும். கிண்கிணிக்கு மாணிக்கம் புறம்பே பதித்தாலும் சப்தியாது.

(பேணியித்யாதி) விருப்பத்தோடே திருப்பவளத்தில் திருமுத்துத் தோன்றும்படி ஸ்மிதம்செய்து கொண்டு (க) "குடங்கையில் மண்கொண்டளந்து" என்கிறபடியே முன்பொருகாலத்திலே மஹாப(ப)லி யஜ்ஞவாடத்திலே சென்று (உ) "தன்குடங்கை நீரேற்றான்" என்கிறபடியே உதகபூர்வகமாகக்கொண்ட கைகளாலே சப்

துள்ள அரைவடத்தை யுடைத்தான மருங்கின் மேலே மாணிக்கக்கிண்கிணியானது த்வநிக்க. "ஆய் பொன்னுடைமணி" என்கிறவிடத்தில், ஆய்தல் - தெரிதலாய், பழிப்பறுதலைச் சொல்லுகிறது. "ஆணிப்பொன்னால் செய்த" என்று கீழே சொல்லுகையாலே, மேல் "பொன்" என்று-அழகைச் சொல்லுகிறது. மாணிக்கக்கிண்கிணி சப்திக்குமோ வென்னில்; நா, மாணிக்கமாகையாலே சப்திக்கும். கிண்கிணிக்குப் புறம்பே மாணிக்கம் பதித்தாலும் சப்தியாது.

(பேணியித்யாதி) என்னுடையநிர்ப்பந்தத்துக்காகவன்றிக்கே, விருப்பத்தோடே. பவளம்போலேயிருக்கிற திருவதரமும் திருமுத்தும் பரபாக(ஶ்ரீ)த்தாலே விளங்கும்படி ஸ்மிதம் செய்துகொண்டு. அன்றிக்கே, "பேணி" என்றது-உன்திருமேனி யலையாதபடி பேணிக்கொண்டென்னவுமாம். (பண்டித்யாதி) முன்பு, (க) "குடங்கையில் மண்கொண்டு" என்கிறபடியே உன்னுடைமையான பூமியைமஹாபலி பக்கலிலேசென்று உத(க)கபூர்வகமாகப்பரிக்ரஹித்த

என்றது. "வெண்கலக்கிண்கிணியன்றோ சப்திப்பது, அல்லது சப்தியாதே" என்று சங்காநுவாதம் பண்ணி பரிஹரிக்கிறார் (மாணிக்கமித்யாதி). கிண்கிணி வெங்கலமேயாய், நாக்குமாத்ரம் மாணிக்கமாகையாலே சப்திக்கு மென்று கருத்து. நாக்கு மாத்ரம் மாணிக்கமென்னவேணுமோ? மாணிக்கம் அழுத்தின வெண்கலக் கிண்கிணி என்றாலோவென்ன வருளிச்செய்கிறார் (கிண்கிணிக்கித்யாதி).

"பேணி" என்றதுக் கிரண்டர்த்தம் - ஆதரமும், போஷித்தலும். இவ்விரண்டையும் அடைவேயருளிச் செய்கிறார் (என்னுடையவித்யாதி வாக்யத்வயத்தாலே). "குடங்கை" குவித்தகை. இது சப்பாணி கொட்டுகை

(க) சா-ரு-கூ. (உ) ரு-திருவ-கூஉ.

பாணி. கருகின திருக்குழலேயும், பிள்ளேத்தனத்தையு முடைய வனே! சப்பாணி.

"சப்பாணி" - அஞ்ஜலியை ப்ரகாசிப்பிக்கிறது. இருகால் "சப்பாணி" என்கையாலே உபாய பா (ஷ°) வத்திலும் உபேய பா வத்திலும் ஆகிஞ் சந்யம் வேணுமென்று அவனேக்கொண்டுப்ரகாசிப் பிக்கிருர். "காணி" என்கையாலே-பலரும் "என்னது" என்று தோன்ற அபிமாநித்துப் பிறர்க்கும் வழங்கிக் கொண்டு போரிலும் இந்த விபூதி "அவனுடைய காணி" என்கிறது. அதுதன்னேயிறே இவன் இரந்து கொண்டதும். .... (க)

ஸ்வா.—இரண்டாம்பாட்டு. (பொன்னித்யாதி) தன்னுடைய திருவரையிலே சாத்தின பொன்னரை நாணேடே கோவைப் பட்ட மாணிக்கக் கிண்கிணி சப்திக்க. திருக்குழலிலே சாத்தின

திருக்கைகளாலே. இத்தால்-தன்மேன்மைபாராதே ஆஶ்ரிதர்க்கா கத்தன்னே அழியமாறிக் கார்யம்செய்யும் கையென்கை. (சப்பாணி) சப்பாணி கொட்டியருளவேணும். (கருங்குழலித்யாதி). கருகின திருக்குழலேயும், பிள்ளேத்தனத்தையு முடையவனே! சப்பாணிகொட்டி யருளவேணும். .... (க)

மூ.—பொன்னரைநாணெடு மாணிக்கக்கிண்கிணி
தன்னரையாடத் தனிச்சுட்டி தாழ்ந்தாட
என்னரைமேல்நின்றிழிந் துங்களாயர்தம் [சப்பாணி. (உ)
மன்னரைமேல் கொட்டாய் சப்பாணி மாயவனே!கொட்டாய்

வ்யா.—இரண்டாம்பாட்டு. (பொன்னித்யாதி.) பொன்னுலே செய்யப்பட்ட திருவரைநாணேடே சேர்ந்த மாணிக்கக் கிண்கிணி யானது தனக்கு வாஸஸ்தாநமான கடிப்ரதேசத்திலே கிடந்து சப்திக்க. (தனியித்யாதி.) திருக்குழலில் சாத்தின அத்விதீயமான

யிலே ஹேதுவென்று தாத்பர்ய மருளிச்செய்கிருர் (இத்தாலித்யாதி). சப் பாணி கொட்டுகையாவது - இரண்டுகையும் சப்திக்கும்படி தட்டுகை. "கொட்டாய்" என்று மேல்பாட்டுக்களிலிருக்கையாலே, இங்கு அநுஷங்கித்தா ரென்று கண்டுகொள்வது. ... ... (க)

அரு.—இரண்டாம்பாட்டு. (பொன்னித்யாதி) தன்னென்றதுக்கர்த்தம் (தனக்கு) என்றது; அதாவது - கிண்கிணிக்கென்றபடி. (சப்திக்க) என்றது- அரையிலே ஆடுகையால் அர்த்தஸித்தம். "தனி" என்று விசேஷிக்கையால் அரைவடத்தில்சுட்டிகளேவ்யாவர்த்திக்கிருர்(திருக்குழலித்யாதி). "அரை"

சுட்டியானது திருநெற்றியிலே தாழ்ந்தசைய. (என்னரையித்யாதி) தன்னரைமேலிருந்தது அவர்க்கு உகப்பாமாபோலே, தனக்கு அவர் மடியில் இவனைக்காண்கை ப்ரியமாகையாலே "என்னரைமேல் நின்றிழிந்து" என்கிறாள். உங்கள் தமப்பனாராய் ஆயர்க்கெல்லாம் நிர்வாஹகரா யிருக்கிறவருடைய மடியிலே யிருந்து கொட்டாயென்கிறாள். மாயவன் - ஆஶ்சர்ய சக்தியுக்தன். .... (உ)

அவ.—ஶ்ரீநந்தகோபர் யசோதைப்பிராட்டி மருங்கிலே காண்கைதமக்கு அபிமதமாகையாலேமீண்டும் உன்மாதாவின் மருங்கிலேயிருந்து விளையாடென்கிறார்.

வ்யா;—முதற்பாட்டு. (இந்திரனித்யாதி) த்ரைலோக்ய பாலகனான இந்த்ரனோடே, சதுர்த்தசபுவநஸ்ரஷ்டாவான ப்ரஹ்மாவும், ஜகத் ஸம்ஹாரகர்த்தாவான ருத்ரனும், இவர்களுக்குப் பரதந்த்ரராய் வர்த்திக்கும் மற்றுமுண்டான தேவர்களுமெல்லாம். இத்தால்-அதிகாரி புருஷர்களோடு அவர்களுக்குக் குடிமக்களாய் வர்த்திக்குமவர்களோடு வாசியற எல்லாருமென்றபடி. ப்ரஹ்மருத்ரேந்த்ரர்கள் மூவரையும் சொல்லுகிறவிடத்தில், இந்த்ரனை முந்துறச் சொல்லிற்று - அவனோபாதி ப்ரஹ்ம ருத்ரர்களுக்கும் அதிகரித்த கார்யத்தால் வந்த ஏற்றமித்தனையொழிய, ஈஶ்வரத்வ கந்த(ꣃ)மில்லையென்று தோற்றுகைக்காக. இவர்கள் தான் தொட்டில் பருவமே பிடித்து இவ்விஷயத்திலே கிஞ்சித்கரித்திரே

அரு.—முதற்பாட்டு. (இந்திரனித்யாதி) "இமையவரெல்லாம்" என்று ஒருசொல்லாலே சொல்லலாயிருக்க, தனித்தனியே அருளிச்செய்ததுக்குத் தாத்பர்யம் தோன்ற விஶேஷிக்கிறார் (த்ரைலோக்யேத்யாதி). மற்றை வருணாதிகளைத் தனித்தனியே சொல்லாதே, "இமையவரெல்லாம்" என்று முழுக்கச் சொல்லுகையாலே வருளுகிறார் (இவர்களுக் கித்யாதி). "ஆராத்யர்" என்று தங்களை நினைத்திருக்கும் தேவஜாதியெல்லாம் தன்னில் வாசியற இவனைக் கிஞ்சித்கரிக்க வருவர்களோ வென்ன வருளுகிறார் (இவர்களித்யாதி). இவனை "ஸர்வஸ்மாத்பரன்" என்றறியுமவர்களாகையாலே, கிஞ்சித்கரித்தாரென்று கருத்து. தொட்டில் பருவத்தில் இவர்கள் கிஞ்சித்கரித்த

மாமலர்கொண்டுநின்றார்கள். ப்ரஹ்மாவோடே "ஈசன்" "இந்திரன்" என்னாதே, இந்த்ரனை கௌரவித்தது-ஔபாதிக கர்மதார தம்யத்தால்வந்த வைஶ்வர்யச்செருக்கு முற்படஸாவதி(ந)யாகை யாலே என்று தோற்றுமிறே. மறைந்துவரா வந்து நின்றாரென் னவுமாம்.

(மந்திரம்) *முறைகொண்ட மந்திரம். தந்தாம் நினைவுக ளாலே மறைந்தார்களாக விருக்குமித்தனையொழிய, இவர்க்கும் மறைய வொண்ணாதே. (மாமலர்) கல்பகம் முதலான புஷ்பா த்யுபகரணங்களைக் கொண்டு, தந்தாம் குறைவுகளையும் கொண்டு, அருளப்பாடிடுந்தனையும் பார்த்து நின்றார்கள். ஜபஹோமதாந தர்ப்பணங்களிலே விநியுக்தமானமந்த்ரத்தைக்கொண்டுமங்களா சாஸநம் செய்வதாக நின்றார்கள். சிலம்ருகங்கள் கண்ணைச்செம் பளித்துத்தந்தாமைமறைத்தனவாக நினைப்பன உண்டிறே.

போருவது. ஆகையாலே * எழிலுடைக் கிண்கிணித்தங்குவனாய் நின்ற இந்த்ரனோடு - வண்ணச்சிறுத்தொட்டில்வரவிட்ட ப்ரஹ் மாவும், * உடையார் கநமணி வரவிட்ட ருத்ரனும், * வலம்புரி, சேவடிக்கிண்கிணி முதலானவை வரவிட்ட மற்றுமுண்டான தேவ ர்களுமெல்லாமென்கை.

(மந்திரமாமலர்கொண்டு) திருமந்த்ர புஷ்பங்கொண்டு. "மந்தி ரம்"என்கிறது - * மறைகொண்ட மந்த்ரமான ஸ்ரீபுருஷ ஸூக்தா திகளை. "மாமலர்"என்கிறது - ஶ்லாக்யமான கல்பக புஷ்பாதிகளை. (மறைந்துவராய் வந்துநின்றார்) (க) "கட்கரிய பிரமன் சிவனிந்திர ன்" என்கிறபடியே இங்குள்ளாருடைய கண்ணுக்கு விஷயமாகாத வர்களாகையாலே, பிறர்க்கும் தெரியாதபடியாக, நீ அருள் பாடிட்ட வாறே வரும்படி உனக்கு அதூரவிப்ரக்ருஷ்டராய் வந்து நின்றார் கள். "மறைந்துவரா" என்று பாடமானபோது, உவரா-அதூரவிப் ரக்ருஷ்டராகவென்று பொருள்.

த்தைக் காட்டாநின்றுகொண்டு, ப்ரக்ருதத்திலே உபஸம்ஹரிக்கிறார் (ஆகை யாலே யித்யாதி).

(திருமந்த்ர புஷ்பம்கொண்டு) என்றவிடத்திலே "திரு" என்றது-ஔப சாரிகம். மறைந்திருக்கைக்கும் உவராயிருக்கைக்கும் ஹேதுக்களை தர்ஶிப் பித்துக்கொண்டர்த்த மருளுகிறார் (கட்கரிய வித்யாதி).

(க) தி-வாய்-எ-எ-கக.

குணத்ரயவஶ்யரல்லாதார்மேலே“உவர்”என்கிற அநாதரோக்தி செல்லாதே.

(சந்திரனித்யாதி) திருவெள்ளறையில் வர்த்திக்கிறஶ்ரீ வைஷ்ணவர்கள் திருமாளிகைகளிலும் கோயிலிலுமுண்டான உயர்த்தியாலே சந்திரன் வந்து சேருமென்கிறார். இத்தால்-ஆந்தராளிகரானஜ்ஞாதாக்கள் சேருமிடமென்கிறது. ஶாஸ்த்ரஜந்ய ஜ்ஞாநம் தீபப்ரகாசம்போலே,ஶாஸ்த்ரஜந்யஙில்ஜ்ஞாநவைராக்ய நிஷ்டர் ஆதித்ய ப்ராகாசம்போலே; உபதேஶஜ் ஞாநம்போலேயிறே பூர்ண சந்த்ரனைச் சொல்லுவது. இந்த உபதேஶகம்ய ஜ்ஞாநத்தில் அநந்யார்ஹத்வம் த்ருதீயாவிபூதியிலும் த்ரிபாத்விபூதியிலும் துல்யவிகல்பமாயிருந்ததேயாகிலும், அங்குள்ளார்க்கும் கௌரவப்ராப்ய மிறே. (சதுரர்கள் வெள்ளறை நின்றாய்) அவன் தனக்கும் ப்ராப்யம் இங்கேயிறேநிலைநின்றது. ஆகையிறே(க)“நிலையாரநின்றான்” என்னுமாபோலே நின்றானென்றது. (சதிராவது) பூவாமல்காய்க்கும் மரங்கள்போலே“ఁయో దేవలముక్త్ర ఠఙ-க்ரியாகேவலமுத்தரம்”என்கையிறே. அதாவது-(உ)“சலிப்பின்றியாண்டு” என்கிறபடியே தங்களாசாரத்தாலேயும் ஸம்ஸாரஸம்பந்தநிகளநிவ்ருத்திபண்ண வல்லராயிருக்கை.

(அந்திபம் போதிதுவாகும்) விளையாட்டுப்பராக்காலே அஸ்தமித்ததும் அறிகிறாயில்லையீ! (அழகனே காப்பிடவா

(சந்திரனித்யாதி) சந்த்ரபதத்தளவும் செல்ல ஓங்கியிருக்கையாலே, சந்த்ரன் மாளிகைகளிலே வந்து சேரும்படியிருப்பதாய், உன் ஸௌகுமார்யாதிகளையறிந்து மங்களாசாஸநம் பண்ணி நோக்கவல்ல ஸமர்த்தரானவர்கள் வர்த்திக்கின்ற திருவெள்ளறையிலே நின்றருளினவனே! (அந்தியம் போதிதுவாகும்) இது ஸந்த்யாகாலமாயிருக்கும். விளையாட்டுப் பராக்காலே அஸ்தமித்ததும் அறிகிறாயில்லையீ! (அழகனே) த்ருஷ்டி தோஷபயத்தாலே அநவர

“சதுரர்கள்” என்றதுக்கு ஸ்வார்த்தபரரானவர்களைச் சொல்லுமது, இவர் ப்ரக்ருதிக்குச் சேராதென்று தாத்பர்ய மருளுகிறார் (உன் ஸௌகுமார்யேத்யாதி). “காப்பிடவாராய்” என்றபோதே அழகு அர்த்தஸித்தமாயிருக்க, “அழகனே!” என்று ஸம்போதிக்கவேணுமோவென்னும் ஜிஜ்ஞாஸாப்ரஶ்நத்

(க) தி-மொ-௬-௯-அ. (உ) தி-வாய்-௩ள-௬.

மூ.—கன்றுகளில்லம்புகுந்து கதறுகின்றபசுவெல்லாம்
நின்றொழிந்தேனுன்னைக்கூவி நேசமேலொன்றுமிலாதாய்
மன்றில் நில்லேலந்திப்போது மதிள் திருவெள்ளறைநின்றாய்
நன்றுகண்டாயென்றன்சொல்லு நானுன்னைக்காப்பிடவாராய்.

ராய்) அஸ்தமித்தது அறியாதாப்போலே உன்ஸௌந்தர்ய மார்த்தவ வாசியு மறிகிறா யில்லை, உன்னுடைய ஸமுதாய சோபைக்கும் ஒப்பனையழகுக்கும் மங்களாசாஸநம் பண்ணித்திருவந்திக் காப்பிட வேணுங்காண் வாராயென்கிறார். அந்தியம்போதால்-ராஜஸகுணப்ராதாந்யத்தால் அஹங்காரக்ரஸ்தருமாய், பரஸம்ருத்த்யஸஹபருமாயிருப்பார் நடையாடுங்கால மென்று பீ(ஃ)தராய், வாராயென்கிறார். ... ... (க)

ஸ்வா;—இரண்டாம்பாட்டு. (கன்றித்யாதி), கன்றுகளெல்லாம் தொழுவத்தில் தந்தாம் நிலைகளிலே புகுந்து நின்று கதறு

தம் காப்பிடவேண்டும்படியான அழகையுடையவனே! அஸ்தமித்ததறியாதாப்போலே உன்னழகின் வாசியும் அறிகிறாயில்லையீ! (காப்பிடவாராய்) உன்னுடைய ஸ்வாபாவிகமான ஸமுதாய சோபைக்கும் ஒப்பனையழகுக்கும் ஒரு குறைவாராதபடியாகத் திருவந்திக்காப்பிடவாராய். .... (க)

திலே ஸமபிவ்யாஹார பலிதத்தை யருளுகிறார் (அஸ்தமித்த தறியாதாப் போலே யித்யாதி). விளையாட்டுப் பராக்காலே மெய்மறந்திருக்கையாலே அழகை ஸ்மரிப்பித்தாரென்று கருத்து. அநவரதம் காப்பிடும்படியான வழகாயிருக்க, "அந்தியம் போதிதுவாகும், காப்பிடவாராய்" என்றுகாலவிசேஷத்தைச் சொல்லி அழைக்க நிமித்தமென்னென்கிற சங்கையிலே அருளுகிறார் (உன்னுடைய வித்யாதி). (ஸ்வாபாவிகமான ஸமுதாய சோபைக்கும்) என்றது - "அழகனே" என்று நிரூபகமாகச் சொல்லுகையாலே. (ஒப்பனை அழகுக்கும்) என்றது - "மந்திரமாமலர் கொண்டு" என்று தேவர்கள் கொணர்ந்த மலர்களாலும், கீழே தான்சூட்டின புஷ்பங்களாலும் வந்தவழகுக்கு மென்றபடி. இத்தால், இரண்டழகாலும் இப்போது ஆலத்தியெடுக்க வேண்டுகையாலே, அருளிச்செய்தாரென்று கருத்து.

"சந்திரன்மாளிகை" என்று தொடங்கி "அழகனே!இந்திரனோடித்யாதி மலர்கொண்டு மறைந்துவாராய் வந்துநின்றார்கள், அவையும் சூட்டிக்கொண்டு, இது அந்தியம் போதாகும், காப்பிடவாராய்" என்று சிறிது அத்யாஹரித்து அந்வயம் கண்டுகொள்வது.

நின்றன. பசுக்கள் எல்லாம் முலைக்கடுப்பாலே புறம்பே நின்று கதறு நின்றன; சுரப்புமாறில் நீ யுண்ணும்படியென்.

(நின்றொழிந்தே னுன்னைக் கூவி) உன்னையழைத்த விடத்தில் நீ வந்திலையே, நான் நின்றேவிடு மித்தனையோ? (நேசமேலொன்று

வ்யா;—இரண்டாம்பாட்டு. (கன்றித்யாதி) பசுக்களானவையெல்லாம் கன்றுகள் நிற்கிறவிடத்தில் வந்து புகுந்து, கன்றுகளைக் குடிக்கவிடுதல், கறக்குதல் செய்வாரில்லாததுகண்டு முலைக்கடுப்பாலே கதறுநின்றன. அதவா, "கதறுகின்ற" என்றத்தை, கீழும் மேலும் அந்வயித்து, கன்றுகளெல்லாம் தொழுவத்தில் தந்தாம் நிலைகளிலே புகுந்துநின்று முலையுண்ணப் பெறுமையாலே நாக் கொட்டிக் கதறுநின்றன; பசுக்களெல்லாம் புறப்பே நின்று, கன்றுகள் குடித்தல் கறத்தல் செய்யப்பெறுமையாலே முலைக்கடுப்பாலே கதறு நின்றனவென்னவுமாம்.

அவை அப்படிக் கதறவேண்டுகிறது-முன்போலே நீ கன்றுகளை விட்டுக் கறவாமையன்றோ?; அது செய்யா தொழிவானென்னென்ன; (நின்றொழிந்தே னுன்னைக்கூவி) நான் உன்னை யழைத்து நின்றேவிட்டேன்; பின்னை அங்கு ஆரது செய்வார்; அவை கன்றை நினைத்துக்கதறுகிறாப் போலேயன்றோ நான் உன்னை அழைத்தே நின்றுவிட்டபடி. (நேசமேலொன்றுமிலாதாய்) என்பக்கல் ஸ்நே

அரு;—இரண்டாம்பாட்டு. (கன்றித்யாதி) "பசுவெல்லாம் கன்றுகளில்லம் புகுந்து கதறுகின்ற" என்றந்வயம் திருவுள்ளம்பற்றி, கதறுகைக்கு ஹேதுவை அருளிச்செய்து கொண்டு அர்த்த மருளுகிறார் (பசுக்களானவையித்யாதி). "கன்றுகளானவை இல்லம் புகுந்து நின்று கதறுகின்ற, பசுவெல்லாம் புறம்பேநின்று கதறுகின்ற" என்று விவக்ஷித்து யோஜநாந்தர மருளுகிறார் (அதவேத்யாதி).

மேலுக்கவதாரிகை (அவையித்யாதி). அந்வயமபிப்ரேத்ய சப்தார்த்தம் (நானித்யாதி). ஹார்த்தபாவம் (பின்னையித்யாதி). "பின்னையும் அங்காரது செய்வார்" என்று கொண்டு "என்னைக் கூவுவானேன் கறக்கப்போகவொண்ணாதோ?" என்னக் கீழ்ச்சொன்னத்தைத் த்ருஷ்டாந்தமாக்கி ப்ரயுக்தரமாக பாவமருளுகிறார் (அவைகன்றையித்யாதி). உன்பக்கல்ஸ்நேஹத்

மிலாதாய்) "இவளழைத்த விடத்தில் செல்லக்கடவோமல்லோம்" என்று என்னளவில் உனக்கு ஸ்நேஹலேசமும் கூடவில்லாதாப் போலே காண்; நானுன்னை நியமித்து வஶவர்த்தியாக்கவேணுமென்னும் ஸ்நேஹமொன்றுமே யொழிய, மற்றொன்று மின்றிக்கேயிருக்கிறபடி. மேலொன்றும் என்மேலொரு ஸ்நேஹ மில்லாதா யென்றபடி.

(மன்றில் நில்லேலந்திப்போது) நாற்சந்திகளிலே தனியே நில்லாதே கொள்ளாய். உன்னோடே விளையாடுகிற பிள்ளைகளெல்லாரும் அகம் புகுந்தார்கள் காண். உன்னை யறியாவிட்டால் என்னையுமறியாமல் நிர்பரனாயிருக்கவேணுமோ? மதிள் திருவெள்ளறை

ஹமாகில் ஒன்றுமில்லாதவனே! கதறுகிற தாய்களளவில் கன்றுகளுக்குண்டான ஸ்நேஹம், என்பக்கல் உனக்குண்டாக வேண்டாவோ?; அதில் ஏகதேசமுமில்லாதவனா யிருந்தாயே நீ.

நான் உன்பக்கல் ஸ்நேஹ மற்றிருக்கிறேனோ? விளையாடி வருகைக்காக நின்றேனத்தனையன்றோவென்ன; (மன்றில் நில்லேலந்திப்போது) ஸந்த்யாகாலத்திலே க்ஷுத்ரதேவதைகள் நிற்குமிடமான நாற்சந்தியிலே நில்லாதே கொள்ளாய். விளையாடுகைக்கு ஸ்தலமும் காலமுமல்லகாண் இது. (மதிள் திருவெள்ளறைநின்றாய்) மங்களாசாஸநபரர்க்கு அஞ்சவேண்டாதபடி உனக்கு அரணாகப்போரும் படியான மதிளையுடைய திருவெள்ளறையிலே நின்றருளினவனே!

தாலே போகமாட்டே னென்று கருத்து. "நேசமிலாதாய்" என்றால் "காப்பிடவாராய்" என்றதுக்கு விருத்த(ம்)மன்றோ வென்கிற சங்கையிலே, இப்படிச் சொன்னதுக்கு ஸ்நேஹ ப்ரார்த்தனையிலே நோக்கென்னுமத்தை ஸத்ருஷ்டாந்தமாக உபபாதிக்கிறார் (கதறுகிற வித்யாதி).

மேலுக்கவதாரிகை(நான் உன்பக்கலித்யாதி). "அந்திப்போதுமன்றில் நில்லேல்" என்றந்வயித்து நில்லாமைக்கு ஹேதுதோன்றும்படி நாற்சந்தியைவிசேஷித்தர்த்த மருளுகிறார் (ஸந்த்யேத்யாதி). (விளையாடிவருகைக்காக நின்றேனத்தனை) என்றதுக்கு உத்தரமானபடியைக் காட்டுகிறார் (விளையாடுகைக்கித்யாதி). இப்போது உனக்கு என்பக்கல் ஸ்நேஹ முண்டானதுக்கடையாளம் மன்றில் நில்லா தொழிகை யென்று கருத்து. காப்பிடும் ப்ரகரணத்திலே மதிளைச்சொன்னதுக்கு பாவம் (மங்களாசாஸநேத்யாதி). ஆனால் மதிளிருக்க, நீர் காப்பிடவரச் சொல்லுவானென்னென்ன, "மன்றில்

நின்றாய்) இவனை மதிளுக்குள்ளே யாக்கி நிர்பரையாய், கன்றுகள் விடவும், கறப்பாரை நியமிக்கவும், தன்னுடைய க்ருஹ கார்யத்திலே ஒருப்படவும் போலே காணும் இவள்தான் நினைக்கிறதும். திருவெள்ளறையில் திருமதிள்தான் மங்களாசாஸந பரர்க்கெல்லாம் நெஞ்சிலே கைவைத்து உறங்கலாம்படி போலே காணுமிருப்பது.

(நன்று கண்டாயென்றன் சொல்லுநானுன்னைக் காப்பிடவாராய்) உனக்குமெனக்கும், நீ உகந்தகன்றுகளுக்கும், சுரப்பாக்களுக்கும்நன்றாய்காண்என்சொல்லிருப்பது. இவருடையநான் தானிருப்பது-சரமசதுர்த்தியிலே மூட்டி மீண்டு த்ருதீயாக்ஷரத்திலே வந்தானுயிறே யிருப்பது. (உன்னை)ப்ரதமாக்ஷரத்திலே நின்று பூர்வக்ரமமாகச் சென்று, "அஹம்"என்று மூட்டி,மீண்டுப்ரதமாக்ஷரத்திலே நிற்கையாலே †(நின்றாய்) நின்றவுன்னைக் காப்பிடவாராய் (உன்னை) என்றது-உனக்கென்றபடி.(க)" கண்ணபுரமொன்றுடையானுக்கு" என்றாப்போலே.

புறம்பே புறப்பட்டு வ்யாபரியாதே அவ்வரணுக்குள்ளே திரியாநின்றாயாகில் எனக்கிப்படி வயிறுபிடிக்க வேண்டாவே.

(நன்றுகண்டா யென்றன் சொல்லு) இப்படி சொன்னவிடத்திலும் தன்சொல் அவன் கைக்கொள்ளாமையாலே, என் சொலவு நன்றுகிடாய்;அத்தைக் கைக்கொள்ளென்கிறாள்.(உ)"தாயர்வாய்ச் சொல் கருமங்கண்டாய்" என்றாப்போலே. (நானுன்னைக் காப்பிட வாராய்) உன் பக்கல் ஸ்நேஹயுக்தையாய் மங்களாஶாஸநபரையாயிருக்கிற நான், அநவரதம்காப்பிட வேண்டும்படியான ஸௌகுமார்யாதிகளை யுடைய உன்னைக் காப்பிடும்படியாக நீ வாராய். (உ)

நில்லேல்" என்றத்தைக்கடாக்ஷித்து பாவமருளுகிறார் (புறம்பேயித்யாதி). ஆகையாலே அம்மதிளிருக்கும் ஸ்த்தலங்களிலே விளையாட வேண்டினாலும், இருகிடாயென்று தாத்பர்யம். (உ)

(இப்படிச் சொன்னவிடத்திலும்) என்றது-மதிளுண்டான விடத்திலே நிற்கவேணும், நாற்சந்தியில் நில்லாதொழியவேணுமென்ற விடத்திலுமென்றபடி. (என்றாப்போலே) என்றதுக்கு, (கைக்கொள்ளென்கிறாள்) என்றத்தோடே அந்வயம். காப்பிடுகைக்கு ஹேதுவாகத் தோன்றவேண்டி "நான்" "உன்னை" என்ற பதங்களை விசேஷிக்கிறார் (உன்பக்கலித்யாதி). ... (உ)

(க) தி-மொ-அ-கூ-ரு. (உ) உ-உ-டு. † அதிகம்.

மூ.-செப்போதுமென்முலையார்கள்சிறுசோறுமில்லும் சிதைத்திட்டு
அப்போது நானுரப்பப்போ யடிசிலுமுண்டிலையாள்வாய்
முப்போதும்வானவரேத்தும் முனிவர்கள்வெள்ளறைநின்றாய்
இப்போது நானொன்றும் செய்யே னெம்பிரான்காப்பிடவாராய்.

(மன்று)நாற்சந்தியாதல்;பலரும் கூடிப் பிரியுமிடமாதல். "நால்சந்தி" என்றது-வேதவாதரதான சாந்த(ஸ்)ஸர்வர்த்திக்குமிடத்தைக்காட்டுகிறது. ரஜோகுணோத்ரிக்தர் வர்த்திக்கிற ஸந்த்யாகாலத்தைச் சொல்லுகையாலே, பலரும் கூடிப் பிரியுமென்றத்தாலே-இவர்க்கும் இறையறியாதாரைக் காட்டுகிறது. கன்றென்றது-விஹிதபரராய், ஸ்வரக்ஷணத்தில் அஸக்த்தராயிருப்பாரைக்காட்டுகிறது "பசுக்கள்" என்று-அஸக்தரை அழைத்துரக்ஷித்தாலல்லது துக்க நிவ்ருத்தி பிறவாதாரை. ... ... (உ)

அவ;—மூன்றாம்பாட்டு. "நீ என்னை அழைக்கிறது-ஒப்பித்து ஒரு காப்பிட்டு விளையாடப் புறப்படாமல் மதிளுக்குள்ளே விட்டுப் பிடித்துக் கொள்ளவன்றோ" என்ன ; நான் ஒன்றும் செய்யேனிப் போதென்கிறாள்.

ஸ்வா;—(செப்பித்யாதி) "செப்போடே உபமாகம் சொல்லும் படியானஸ்தநபரிணமங்களையுடையராய், அத்யந்தம்ருதுஸ்வபாவைகளாயிருக்கிறவர்களுடைய விளையாடு சிறுசோறுகளையும், சிற்றிலான கொட்டங்களையும் சிதைத்து, அவர்களோடு கைப்பிணக்கிட்டு விளையாடித் திரியவேண்டா காண்" என்று நான் கோபித்தழைக்க வழைக்கப்போய், இப்போதளவாக அடிசிலுமுண்டிலையே)

வ்யா ;— மூன்றாம்பாட்டு. (செப்பித்யாதி). செப்பென்று சொல்லும்படியான ஸந்நிவேசத்தை யுடைத்தாய், அதுபோலே கடிநமாயிருக்கையன்றிக்கே ம்ருதுவாயிருக்கும் முலையையுடையவர்களுடைய. (சிறுசோறுமில்லுஞ் சிதைத்திட்டு) லீலார்த்தமாக மணற்கொழித்துச் சமைத்த சிறு சோற்றையும் கொட்டகத்தையுமழித்திட்டு. (அப்போது நானுரப்பப்போய்) "பெண்க

அரு;—மூன்றாம்பாட்டு. (செப்பித்யாதி) செப்பென்று ஓதும்படியென்றார்த்த மருளுகிறார் (செப்பென்றித்யாதி). (கடிநமாயிருக்கையன்றிக்கே) என்றது - கடிநஸ்பர்ஶூாயிருக்கையன்றிக்கே யென்றபடி. (ம்ருதுவாயிருக்கும்) என்றது-ஸ்லக்ஷணதையாலே ஸுகஸ்பர்ஶமாயிருக்கு மென்றபடி. "உரப்புகை"- அதட்டுகையாய், அதன் ப்ரகாரத்தை, கீழ்பதத்தைக் கடாக்ஷித்தரு

இப்படியேயோ என்னையாளவிருக்கிறபடி. (௧) ஆட்கொள்ளத் தோன்றியவாயர்தம் கோவினை'' என்னக்கடவதிறே.

(முப்போது மித்யாதி) (உ) "ஊரனுலொரு மூன்றுபோதும்" என்கிறபடியே த்ரிஸந்தியும் ப்ரஹ்ம பாவனை தலையெடுத்த போ

ளோடே கைப்பிணக்கிட்டு விளையாடித்திரிய வேண்டா காண்'' என்று அப்போது நான்கோபித்தவாறே, "நாணி பிடிக்குதல் அடிக்குதல் செய்யப்போகிறேன்" என்று என்முன் நிற்க வஞ்சிப்போய். (அடிசிலுமுண்டிலை) உனக்கினிதாகச் சமைத்துவைத்த அடிசிலும் அமுதுசெய்திலை. (ஆள்வாய்) என்னை யாளப்பிறந்தவனே!. இப்படியோ நீ யென்னையாளத்தேடுகிறது. இவளையாளுகையாவது- இவள் சொல்வழி வந்து, இவள் கொடுத்தவற்றையும் விநியோகம் கொண்டு, கோல்கீழ்க்கன்றாய் நடக்கையிறே.

(முப்போதுமித்யாதி)(௩) "ஆதிநடுவந்திவாய்" என்கிறபடியே, த்ரிஸந்த்யமும்-ப்ரஹ்மபாவனை தலையெடுத்தபோதெல்லாம், தேவர்களாலே ஸ்துதிக்கப்படுமவனாய், மங்களாசாஸநபரராய்க் கொண்டு

ளிச் செய்யாநின்று கொண்டு, "போய்" என்றதுக்கும் தாத்பர்யமருளுகிறார் (பெண்களோடேயித்யாதி). "அடிசிலும்" என்ற ச(உம்)காரத்தாலே தோன்றும் ப்ராதாந்யத்தை அருளிச் செய்யாநின்று கொண்டு அர்த்தமருளுகிறார் (உனக்கித்யாதி). "ஆள்வாய்" என்றதுக்கு - கிழைக்கடாக்ஷித்து அபிப்ரேதார்த்தத்தை யருளுகிறார் (இப்படியித்யாதி). பிள்ளையானவன் தாயை ஆளக்கூடுமோ வென்ன; அத்தை விவரிக்கிறார் (இவளையித்யாதி). (கோல்கீழ் கன்றாய்) என்றது-வஶ்யனாயிருக்கை யென்றபடி.

"முப்போதும்" என்ற ச(உம்)காரம் அநுக்த ஸமுச்சயமாய், கால விசேஷத்தைச்சொல்லுகிறதென்று திருவுள்ளம்பற்றி, அத்தைக்காட்டுகிறார் (ப்ரஹ்மேத்யாதி). கர்மபாவனை யுண்டானபோது நியதமாக த்ரிஸந்த்யமும் ப்ரஹ்ம பாவனை தலையெடுத்தால், அநவரதம் ஏத்துவரென்று திருவுள்ளம். "முப்போதும் வானவரேத்தும்" என்றத்தால்-கர்மப்ரஹ்ம பாவநாநிஷ்டருடைய ஸ்தோத்ரத்தைச்சொல்லுகையாலே, இது உபலக்ஷணமாய், கர்மநிஷ்டரும் பக்தி நிஷ்டருமெல்லாரும் முக்த ப்ராயரென்று திருவுள்ளம்பற்றி, இனி "முனிவர்"என்றால், அநந்யரானமங்களாசாஸநபரரைச்சொல்லவேணுமென்று அருளிச்செய்கிறார் (மங்களாசாஸநபரரித்யாதி). இவ்வாக்யத்தால் "வானவரே

(௧) ௧-௭-௧௧. (உ) பெரிய-திருவ-௯௪.(௩)உ-திருவ-௭௩.

மூ.—

கண்ணில்மணற்கொடு தூவிக்காலினால் பாய்ந்தனையென்றென்று
எண்ணரும்பிள்ளைகள் வந்திட்டிவரார் முறைப்படுகின்றார்
கண்ணனே வெள்ளறைநின்றாய் கண்டாரோடே தீமைசெய்வாய்
வண்ணமேவேலைய தொப்பாய் வள்ளலே காப்பிடவாராய். (௪)

தெல்லாம் தேவர்களெல்லாரும் வந்து ஸ்தோத்ரம் செய்யக்கேட்டருளி, மநநஶீலரான தேஶிகர் அபிமாநித்ததிருவெள்ளறையிலே நித்யவாஸம் செய்து நிற்கிறவனே! (இப்போதித்யாதி) உன்னை அடிசிலூட்டிவிடுமதொழிய "நியமியேன்" என்றவாறே, "உன்வார்த்தையன்றோ" என்று பிடிகொடாமல் ஓடப்புகுந்தான்; ஓடினவளவிலும் இவர்விடாமல் செல்லுகிறாரிறே. இதென்ன தஶாவிசேஷந்தான்.

"எம்பிரானென்னையாள்வாய், செப்போது மென்முலையார்கள் சிறு சோறுமில்லும் சிதைத்திட்டு நானூரப்பப்போய், முப்போதும் வானவரேத்தும் முனிவர்கள் வெள்ளறை நின்றாய், இப்போது அடிசிலுமுண்டிலை; இப்போது நானொன்றும் செய்யேன்; காப்பிடவாராய்" என்றந்வயம். .... (௫)

அவ;—நாலாம்பாட்டு. கீழே "ஓடாதே வாராய்" என்ன; ஓடிப்போய் "அவர்கள் கண்ணிலே மணலைத்தூவினான்" என்று

உன்னுடைய ஸம்ருத்தியையே எப்போதும் மநநம்பண்ணாநிற்குமவர்களுடைய திருவெள்ளறையிலே நிற்குமவனே!. (இப்போது நானொன்றும் செய்யேன்) அப்போது ஹிதரூபமாக உன்னைக் கோபித்து வார்த்தை சொன்னேனாகிலும், இப்போது நானுன்னை ஒன்றும் செய்யேன். (எம்பிரான் காப்பிடவாராய்) என்னுடை நாயனே! உனக்குநான் காப்பிடும்படி வாராய். .... (௫)

த்தும்படியும், முனிவர் மங்களாசாஸநம்பண்ணும்படியும் உகந்திருக்குமவனன்றோ? நீ அப்படியே எனக்கும் காப்பிடும்படி வரவேணும்" என்று கருத்தென்று சொல்லிற்றாயிற்று. "வானவர்க்கும் முனிவர்க்கும் முகம்கொடுக்குமா போலே வந்து முகம் கொடுக்கச் சொல்லா நின்றாய்; அவர்கள் உன்னைப்போலேஉரப்பினார்களோ?, நீயானால் கோபித்தாயே" என்ன; அதுக்கு உத்தரமாக "இப்போதும் நானொன்றும் செய்யேன்" என்கிறாளென்னுமிடம்தோன்றவருளுகிறார் (அப்போதித்யாதி) .இத்தால்நான்ஹிதமாக அப்போ கோபித்ததைப் பொறுத்துக்கொள்ளென்று சொல்லிற்றாயிற்றென்று திருவுள்ளம்.

முறைப்பட, பொருமைதோன்ற வார்த்தை சொல்லுகிறாள்.

ஸ்வா;—(கண்ணித்யாதி) விளையாடுகிற பிள்ளைகள் "எங்கள் கண்ணிலே மணலைத்தூவினன்" என்றும், "எங்களைக்காலாலே பாய்ந்தான்" என்றும், பரிகணிக்கவொண்ணாத பிள்ளைகளெல்லாரும் வந்து முறைப்படா நின்றார்களென்று, இவனைப் பிடித்து இறுக்கி, அவர்களைப்பார்த்து இன்னதாகிறாள், (இவரார் முறைப்படுகின்றார்) என்று. அதாவது-"நீங்கள் பலர், இவன் ஒருத்தன், நீங்களோஇன்னும்முறைப்படுகிறிகோள்" என்னும்படியாக. "என் கண்ணிலே மணலைத்தூவி, காலாலே பாய்ந்தார்கள்" என்றழுமே இவன்; அதுவிறே அவள் மெய்யாகக் கொள்வது.

(கண்ணனே) அவர்கள் கண்ணிலே நில்லாதே இங்கேவாராய். அன்றியிலே, "எல்லார்க்கும் உன்னைத்தீம்பேற்றும்படி எளிய

வ்யா.—நாலாம்பாட்டு. (கண்ணிலித்யாதி) கண்விழித்து விளையாடவொண்ணதபடி கண்ணிலே மணலைக்கொடுவந்துதூவி, "எங்கள்கண்ணிலே நீமணலைத்தூவுவானென்" என்றவாறே, "கோபித்துக் காலாலே யுதைத்தாய்" என்று தனித்தனியே சொல்லிப் போருவது ஒருவரிருவரன்றிக்கே, அஸங்க்யாதரான பிள்ளைகள் உன்னால் ஈடுபட்டமை தோற்றவந்து இவர்கள் முறைப்படா நின்றபடி பாராய்.

(கண்ணனே வெள்ளறைநின்றாய்) எல்லார்க்கும் ஸுலபனாய்க்கொண்டு திருவெள்ளறையிலே நின்றருளினவனே!. (கண்டாரோடே தீமைசெய்வாய்) உன்னோடு ஸம்பந்தமும் ஸ்நேஹமுமுண்

அரு;—நாலாம்பாட்டு. (கண்ணிலித்யாதி) "காலினல்" என்றவிடத்தில்-இன்-சாரியையாய், காலால்பாய்ந்தவென்றர்த்தமாய், அதுக்கு ப்ரஸக்தியைக்காட்டுகிறார் (எங்களித்யாதி). "என்றென்று" என்றது-என்று சொல்லி யென்றர்த்தமாய், மேலே முறைப்பட்டவர்களைத் திரளச்சொல்லுகையாலே, தனித்தனியே யென்று விசேஷித்தர்த்தமருளுகிறார் (என்று தனித்தனியே சொல்லி) என்று. (இவர்கள்) என்றது-தாய்மார்களை. (தனித்தனியே சொல்லி) என்றதுக்கு, (முறைப்படாநின்றபடி) என்றத்தோடன்வயம். "ஆர்" என்று தானறியாதவர்களைக் கேட்கிறதாகச் சொல்லக்கூடாமையாலே, பலிதத்தையருளுகிறார் (பாராய்) என்று.

பதத்வயஸமபிவ்யாஹாரார்த்தத்தையும் காட்டிக்கொண்டு சப்தார்த்தமருளுகிறார் (எல்லார்க்குமித்யாதி). (எல்லார்க்கும்) என்றது-திருவெள்ளறைவெற்

ளுய் நில்லா நின்றாயே'' என்னவுமாம். (வெள்ளறை நின்றாய்) அது தன்னிலுங் காட்டில் ஒரு ஸௌலப்யமிறே இது. (கண்டாரோடே தீமை செய்வாய்) பொருந்தாதாரோடே தீம்புகள் செய்யாநின்றாயே. (வண்ணமே வேலையதொப்பாய்) வேலை போன்ற நிறத்தையுடையவனே!; தீம்புகள் செய்தாலும் விடவொண்ணாத வடிவழகையுடையவனே!; (வள்ளலே) இவ்வடிவழகை எனக்கு உபகரித்தவனே!

இத்தால், வைதமான ஜ்ஞாநத்தை இந்த்ரிய பாரவஶ்யத்தாலே மறைத்தும், அஶாஸ்த்ரீயலீலாரஸ ஶ்ரத்தையாலே சிலரை அநிஷ்ட நிவ்ருத்திக்கும் இஷ்டப்ராப்திக்கும் ஹேதுவான ஸாதந

டாய் நீ செய்தது பொறுக்கத்தக்கவர்களன்றிக்கே, கண்டவர்களோடெல்லாம் தீம்புகளைச்செய்யுமவனே!. இப்படி, தீமைசெய்யலாகாதுகாண். (வண்ணமேயித்யாதி) நிறத்தால் ஸமுத்ரத்தோடொக்குமவனே!. வண்ணம்-நிறம். ஏவகாரம்-அவ்யயம். வேலை-ஸமுத்ரம். (அது) என்றது - வேலையாகிறவதுவென்றபடி. இத்தால் - தீம்புசெய்தாலும் விடவொண்ணாத வடிவழகை யுடையவனென்கை. (வள்ளலே) இவ்வடிவழகை யெனக்கு உபகரித்தவனே! (காப்பிடவாராய்). உன்வடிவழகுக்கு நான்காப்பிடும்படியாக வாராய். .... (க)

பாகையாலே, மண்ணோர்க்கும் விண்ணோர்க்கு மென்றபடி. காப்பிட வரச்சொல்லும்போது ''தீமைகள் செய்வாய்'' என்றால்விருத்தமாகையாலே, தாத்பர்யத்தை யருளுகிறார்(இப்படியித்யாதி). காம்பீர்யாதிகளாலும் ஸாத்ருஶ்யம் சொல்லலாமாகையாலே ''வண்ணமே'' என்ற ஏவகாரம் வ்யவச்சேதகமாகையாலே அருளுகிறார் (ஏவகாரமவ்யயம்) என்று.

''கண்ணனே வெள்ளறைநின்றவனே! எண்ணரும் பிள்ளைகள் 'கண்ணில் மணல் கொடுதூவிக்காலினால் பாய்ந்தனை' என்றென்று எண்ணரும் பிள்ளைகளையிட்டு இவர் முறைப்படுகின்றார் ஆர்; இப்படி கண்டாரோடே தீமைகளித்யாதி'' என்றந்வயம் கண்டுகொள்வது. இப்பாட்டில் பூர்வார்த்தம் ''இப்படி'' என்றத்த்யாஹரியாவிட்டால் அந்வயியாமையாலேயும், ''கண்டாரோடே'' இத்யாதிபதங்களுக்கு ஸமபிவ்யாஹாரதாத்பர்யங்களையருளிச் செய்கையாலும் இப்படியே அந்வயிக்கவேணும். ... ... (உ)

மூ.—

பல்லாயிரவரிவ்வூரிற் பிள்ளைகள்தீமைகள்செய்வார்
எல்லாமுன்மேலன் றிப்போகா தெம்பிரான்நீயிங்கேவாராய்
நல்லார்கள்வெள்ளறைநின்றாய் ஞானச்சுடரேயுன்மேனி
சொல்லாரவாழ்த்திநின்றேத்திச் சொப்படக்காப்பிடவாராய். (ரு)

த்தாலே சிலரை நிஷேதித்தும் செய்தானென்று, அவன் மேலே பலராக தோஷத்தை வைப்பர்களிறே, ஸம்ஸாரிகள் தங்கள் தோஷ மறியாமையாலே; ஸாதநஸாத்த்யங்களில்பொருந்தாதாரைக் கண்டிருக்கச் செய்தேயும் அவர்களுக்கு ஸந்நிஹிதனாகையிறே தீம்பாவது. (ச)

அவ;—அஞ்சாம்பாட்டு. இப்பாட்டாலும் அதுதன்னையே விஸ்தரிக்கிறது.

ஸ்வா;—(பல்லாயிரவரித்யாதி) இவ்வூரில் பஞ்சலக்ஷம் குடியில்பிள்ளைகளெல்லாரும் தந்தாம் செய்த தீமைகளை உன்மேலே வையாநின்றார்கள். அவர்களபிப்ராயத்தாலும் உன் வ்யாபாரங்களாலும் ஸத்யம்போலே கருத்தறியாதார்க்கு உன்மேலே தோன்றுமிறே. (எம்பிரான் நீ இங்கேவாராய்) இப்படிச்சொல்

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (பல்லாயிரவரித்யாதி) பஞ்சலக்ஷம் குடியான விவ்வூரில் தீமை செய்யுமவர்களான பிள்ளைகள் அனேகமாயிரம்பேரிறே. (எல்லாமுன்மேலன்றிப் போகாது) தந்தாம் செய்த தீமைகளை நீசெய்தாயென்று உன்மேலே வையாநின்றார்கள். ஆகையால், அவர்கள்செய்த தீமைகளெல்லாம் உன்மேலே ஏறுமதொழிய,புறம்புபோகாது. (எம்பிரான் நீயிங்கேவாராய்)என்

அரு;—அஞ்சாம்பாட்டு. (பல்லாயிரவரித்யாதி) "இவ்வூரில் தீமைகள் செய்வார்பிள்ளைகள் பல்லாயிரவர்" என்று அந்வயம் திருவுள்ளம்பற்றி, "பல்லாயிரவர்" என்றிருக்கையாலே ததநுகுணம் ஏதச்சப்த விவக்ஷிதத்தையும் அருளிச்செய்துகொண்டு அர்த்தமருளுகிறார் (பஞ்சலக்ஷமித்யாதி).கீழே கடாக்ஷித்து அத்தீமைகளெல்லாம் இவன்மேலே வருகைக்கு ஹேதுவை அருளிச்செய்யாநின்றுகொண்டு சப்தார்த்தமருளுகிறார் (தந்தாமித்யாதி வாக்யத்வயத்தாலே). "இங்கே" என்றத்தாலே "அங்கு நின்றும்" என்று தோன்றுமாகையாலே "உன் மேலன்றிப்போகாது" என்றவிடத்தில் அபிப்ரேதார்த்தத்தை

னுவாரிடங்களில் நில்லாதே, அவர்கள் சொலவும் நினைவும் பொருந்தாரிடத்தே நீவாராய். ఉదఙ్క మహర్షి - உதங்க மஹர்ஷி, இவ்வர்த்தத்தைப்ரஸ்துதமாக்க, "மஹர்ஷி! போந்தகார்யமென்?, போகலாகாதோ" என்றானிறே. த்ருதராஷ்ட்ராதிகளும், (க) "జానామి ధర్మం నచ మే ప్రవృత్తి ర్జానామ్యధర్మం నచ మే నివృత్తిః। కేనాపి దేవేన హృదిస్థితేన యథా నియుక్తోఽస్మి తథా కరోమి - ஜாநாமி தர்மம் நசமே ப்ரவ்ருத்திர் ஜாநாம்யதர்மம் நசமே நிவ்ருத்தி:। கேநாபி தேவேந ஹ்ருதி ஸ்த்திதேந யதா நியுக்தோஸ்மி ததாகரோமி" என்று - அறிவுக்குத் தானைவும், ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்கு அவனைவும், விபரீத ப்ரதிபத்திபண்ணிச் சொன்னார்களிறே ஸஞ்ஜயனைப் பார்த்து. (உ) "మాయాం న సేవే భద్రం తే - மாயாம்ஸேவே பத்ரம்தே" என்றானிறே ஸஞ்ஜயனும்.

ஆழ்வார்களும் ஓரோதசாவிசேஷங்களிலே வந்தவாற்றாமையாலே (௩) 'இன்னும் நலிவானெண்ணுகின்றாய்" (௪) "ஆற்றங்கரை வாழ்மரம் போலஞ்சுகின்றேன்" (௫) "சீற்ற முளவாகிலும் சொல்லுவன்" (௬) "தருதுயரம் தடாயேல்" (௭) "இவை யென்றிவை யறிவனேலும் - என்னுலடைப்பு நீக்கொண்ணாது" என்னுமிவை முதலாகவருளிச்செய்த பாசுரங்களைத் தந்தாமுக்குத்தோன்றின நினைவுகளாலே சொல்லாமல், ஒருநிபுணாசார்யன் ஸ்ரீபாதத்திலே ஆஸ்ரயித்து, பூர்வாசார்யர்களுடைய அநுஷ்டாநவசநங்களையும், வசநாநுஷ்டாநங்களையும் ப்ரார்த்தநாபூர்வகமாகக்கேட்டு விளங்கவேண்டியிறே இருப்பது. ஜ்ஞாநாநுஷ்டாநங்கள் கைவந்தாம்போதைக்கு அநுஷ்டாந முண்டானபடி வந்ததில்லையாகிலும், அதுக்கநுதபித்து ஜ்ஞாநத்தில் பழுதற நிற்கப் பெறிலும் நன்றிறே வர்த்தமாநர்க்கு.

நாயனே! உன்மேலே தோஷமேறிடுகிறவர்களிடத்தில் நின்றும், அவர்கள் நினைவும் சொலவும் பொருந்தார் வர்த்திக்கிற விங்கே வாராய்.

யும், மேலே "நல்லார்கள்"என்றத்தையும் உட்கொண்டு தாத்பர்யமருளுகிறார் (என்னாயனேயித்யாதி).

(க) பார- (உ) பார- (௩) தி-வாய்-எ-க-க. (௪) தி-மொ-கக-அ-க.
(௫) தி-மொ-கக-அ-உ. (௬) பெரு-தி-ரு-க. (௭) பெரி-திருவ-௩.

(நல்லார்கள்கள் வெள்ளறைநின்றாய் ஞானச்சுடரே) *கண்ணன் விண்ணூரான அவ்வூரில் பிள்ளைகள் தீமைகள் செய்யாதாப் போலேயிறே, திருவெள்ளறையில் தேசிகரும் நல்லவர்களாய், தாங்களும் பொல்லாங்கு செய்யாமல், ப்ராமாதிகமாகப் புகுந்ததுண்டாகிலும் அவன்மேலே வையாமல், அவனவதாராதிகளில் செய்த வ்யாபாரங்களில் ந்யூநாதிரேகங்களுண்டாய்த் தோற்றிற்றேயாகிலும், அவற்றையும் செப்பம்செய்து லோகோபகாரமாக்க வல்ல ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயை யுடையவர்களைக் குறித்திறே "நல்லார்கள் வெள்ளறைநின்றாய்" என்றது. செந்தாமரைக் கண்ணர்க்கும் நித்ய விபூதியிலுள்ளார்க்கும் தங்களுக்கும் இந்த விபூதியிலுள்ளார்க்கும் அதிகாராநுகுணமாகநல்லவர்கள். (ஞானச்சுடரே) ஜ்ஞாநமும் ஜ்ஞாநாஸ்ரயமான ஸ்வரூபமும் ப்ரகாஶிக்கும்படியான விக்ரஹத்தை யுடையவனே!. ஞானச்சுடரேய்ந்திருக்கிற உன்னுடைய திருமேனியை. "ஜ்ஞாநாஸ்ரயமோ" என்று விகல்பிககலாம்படியிறே திருமேனிதானிருப்பது.

(சொல்லாரவாழ்த்திநின்றேத்தி) சொல்நிறையும்படி நின்றேத்தி. ஸர்வஶப்தவாச்யனென்றேத்தி. (க) "கவிக்குநிறை பொ

(நல்லார்கள் வெள்ளறைநின்றாய்) உன்பக்கல் தோஷகந்த(ஸ்ர)ம் சொல்லுமவர்களை ஸஹியாதே, உனக்கு ஸ்நேஹிகளாய் மங்களாசாஸந பரராயிருக்கிறவர்கள் வர்த்திக்கிற திருவெள்ளறையிலே நின்றருளினவனே!. (ஞானச்சுடரே) ஜ்ஞாநப்ரபையையுடையவனே!. (உன்மேனி) அந்தஜ்ஞாநத்துக்கும் ஜ்ஞாநாஸ்ரயமான ஸ்வரூபத்துக்கும் ப்ரகாசகமான உன்னுடைய திருமேனியை.

(சொல்லார - நின்றேத்தி) சொல் நிறையும்படி நின்று ஸ்துதித்து. ஸர்வஶப்தவாச்யமானவிஷயத்திலேயிறே சொல் ஆருவது. (க) "கவிக்கு நிறைபொருளாய்நின்றான்" என்னக்கடவதிறே. (வாழ்

"இங்கேவாராய்" என்றதுக்கு ஹேதுவாக வேண்டியும் "மங்களாசாஸநபரர்க்கு முகம் கொடுக்குமாபோலே, எனக்குக்காப்பிடவந்து முகம் கொடுக்கவேணும்" என்று மேலுக்கு ஹேதுவாகவும் வேணுமென்று திருவுள்ளம்பற்றி, நன்மைகளை விசேஷிக்கிறார் (உன்பக்கலித்யாதி). திருமேனியை எத்தவும் வாழ்த்தவும் வேண்டும்படி ஈழைக் கடாக்ஷித்து விசேஷிக்கிறார் (அந்தவித்யாதி). உக்தத்துக்கு ப்ரமாணம் (கவிக்கித்யாதி). ... ... (இ)

(க) ச-திருவ-சுக.

மூ.—

கஞ்சன்கறுக்கொண்டு நின்மேல் கருநிறச்செம்மயிர்ப்பேயை
வஞ்சிப்பதற்குவிடுத்தா னென்பதோர்வார்த்தையுமுண்டு
மஞ்சுதவழ்மணிமாட மதிள்திருவெள்ளறைநின்றாய்
அஞ்சுவன்நீ யங்குநிற்க வழகனேகாப்பிடவாராய். (௬)

ருளாய் நின்றானை'' என்கிறபடியே சொல்லாருவது பொருள் நிறைந்தவிடத்தேயிறே. அது கூடுவது-வ்யாபகத்வய வ்யாவ்ருத்தமான ஸமாஸத்வயத்திலும் வாக்யத்வயத்திலுமிறே. அதுதான் நிறைவதும்-கீழ்ச்சொன்ன * குறைவொன்றுமில்லாத கோவிந்தனை கண்ணன் நின்ற திருவெள்ளறையிலேயிறே. ஆகையிறே "நல்லார்கள் வெள்ளறை'' என்றதும். இத்தனைவேணுமோ, தான் காப்பிடும்போதைக்கு. (க)"ஏத்திவாழ்த்துமென்னெஞ்சமே''என்கிறபடியே "பல்லாண்டு'' "பல்லாண்டு'' என்று ஏத்திவாழ்த்தி. (சொப்படக்காப்பிடவாராய்)!. (சொப்பட) என்றது-நன்றாகவென்றபடி.(காப்பு)என்றது(உ)"சேவடி செவ்வித்திருக்காப்பு''என்றபடி.

அவ;—ஆறும்பாட்டு. ஸ்வதோஷத்தைப் பரதோஷமாக்குவாரிடத்திலே நில்லாதே, இங்கேவாவென்றார்கீழ். அவன் வாராமையாலே த்வரிப்பித்து அழைக்கிறார் இதில்.

ஸ்வா;— (கஞ்சனித்யாதி) அஶரீரிவாக்யம் முதலானவற்றைக்கேட்டமாத்திரத்திலே சீறினவளவேயன்றிக்கே, அத்யந்தம்

த்து) மங்களாசாஸநம் பண்ணி. (சொப்படக் காப்பிடவாராய்) நன்றாகநான் காப்பிடவாராய். (சொப்பட)நன்றாக வென்றபடி. (௫)

வ்யா.—ஆறும்பாட்டு.(கஞ்சனித்யாதி) அசரீரிவாக்யம் கேட்டவன்று தொடங்கி, அத்யந்தம் வைரஹ்ருதயனாய் அதிசங்கை

அரு;—ஆறும்பாட்டு. (கஞ்சனித்யாதி) "கஞ்சன் நின்மேல் கறுக்கொண்டு'' என்றந்வயித்து, "கறுக்கொண்டு'' என்றத்தால் சி(ர)ரகாலாநுவ்ருத்தமான கோபமென்று தோற்றுகையாலே, இதினுடைய பிறப்பே தொடங்கி விஸ்தரேண அநுவ்ருத்திக்கு ஹேதுக்களை யருளுகிறார் (அஶரீரி, என்று தொடங்கி (உடையனாய்க் கொண்டு) என்னுமளவும். (அதிஶங்கையாலே) என்றது - நாரதர் வந்து கம்ஸனோடே "எல்லாத்துக்கும் மேலான கர்ப்பம் தொடங்கியெண்ணினால் முதலதே அஷ்டமமாகையாலே இப்படியே எல்லாத்

(க) பெரு- தி-உ-௪. (உ) திரு-பல்லா-க.

ணைவரஹ்ருதயனாய், மக்களறுவரளவிலும் † சாவாமலிழந்த வழிகண்டும், சாவாமல் "சிக்கெனப்பிறந்து காவலோடும் ஸ்வஸாமர்த்யத்தோடும் திருவாய்ப்பாடியிலே புக்கு வளருகிறான்" என்று கேட்டிருக்கச் செய்தேயும் பூதனையாலே ஸாதிப்பானாக விறே கம்ஸன் நினைத்துவிட்டது. "ஆகையிறே, நின்மேல்கறுக் காண்டு" என்ன வேண்டிற்று.

ஆகையிறே, (கருநிறச்செம்மயிர்ப்பேயை) இருள் திரண்டு ஒருவடிவானாற்போலே, கருகிய நிறத்தையுடையவளாய், அக்நிஜ்வாலை மிகவும்கொழுந்து விடக்கிளம்பினாற்போலே யிருப்பதான மயிரையு முடையளாயிருக்கிற பேய்ச்சியை "நீ நேர் கொடுநேரே சென்றால் அவனை உன்னால் ஸாதிக்கப்போகாது, நீ க்ருத்ரிமரூபத்தால் சென்று ஸாதிக்கவேணுங்காண்" என்று சொன்னானென்கிற வார்த்தையுமுண்டுகாண் பிறக்கிறது;இவ்வார்த்தைதான் ஸ்ரீ

யாலே*மக்களறுவரைக் கல்லிடைமோதி,"ஸப்தமகர்ப்பம் நழுவிப்போய்த்து"என்றுவிட்டு, "அஷ்டமகர்ப்பமானவிது எப்போதோ பிறப்பது" என்று ஹிம்ஸிப்பதாகப் பார்த்துக்கொண்டிராநிற்கச் செய்தேயும், தாயும் தமப்பனுமொழிய அசலறியாதபடி இருளிலே வந்து பிறந்து, அவ்விருளிலே அங்குநின்றும் திருவாய்ப்பாடியிலே போந்தவித்தை, துர்க்கா(ர்கா)வசநாதிகளாலே அறிந்த கம்ஸன் உன் விஷயத்திலே மிகவும் சீற்றத்தையுடையனாய்க்கொண்டு. கறுப்பென்கிறவிது-"கறு" என்று குறைந்துகிடக்கிறது. (கறுப்பு)-சீற்றம்.

(கருநிறமித்யாதி) இருள்தானொருவடிவு கொண்டாப்போலே கறுத்தநிறத்தையும், அக்நிஜ்வாலைபோலே சிவந்த தலைமயிரையும் உடையளாயிருக்கிற பேய்ச்சியை,"நீ நேர்கொடுநேர் சென்றால் அவனை உன்னால் ஸாதிக்கப்போகாது, வஞ்சநத்தால்சென்றுஸாதி" என்று வரவிட்டானென்பதொரு வார்த்தையுமுண்டுகாண், பிறக்

றுக்கும் எண்ணிக்கை யாகையாலே அஷ்டமத் வமுண்டென்று சொல்ல, அத்தால் வந்த பயத்தாலே யென்றபடி. (வசநாதிகளாலே) என்ற விடத்தில் ஆதிஶப்தத்தாலே சா(ஞா)ரவசநங்களைச் சொல்லுகிறது.

நலிகைக்கு என்னாமல் "வஞ்சிப்பதற்கு" என்கையாலே அத்தை வ்யாவர்த்ய பூர்வகமாக வருளுகிறார் (நீநேர்கொடித்யாதி). (வார்த்தையு முண்டு காண்பிறக்கிறது) என்றது - அன்று தொடங்கியும் பிறக்கிற தென்றபடி.

---

† (பா) மறம்மாறாமல் இழிந்தவழி கண்டும், அஞ்சாமல்.

நந்தகோபர் ஸ்ரீவஸுதேவர் பக்கலிலேசென்றுகேட்டுவந்து சொன்னாராதல்,மதுரையில் பரவைவழக்கமிங்கே பிறந்ததாதல், ஸாக்ஷாத்காரமாதல்.

(மஞ்சுதவழ்மணி மாடமதிள்திருவெள்ளறை நின்றாய்)மேகங்களானவை, நாம் திருமலையில் பெரிய இளைப்போடே பெரிய ஏற்றமேறுமாபோலே, தவழ்ந்தேறும்படியான உயர்த்தியையுடைத்தாய், (க) "படியிடைமாடத் தடியிடைத்தூணில் பதித்த பன்மணிகளினொளியால்" என்கிறபடியே,உள்ளெல்லாம்ரத்நாதிகளாலே அலங்க்ருதமாயிருக்கிற மாடங்களையுமுடையதாய், அதுக்குத் தகுதியான திருமதிள்களாலே சூழப்பட்டிருக்கிற திருவெள்ளறையிலே நிலையாக நின்றவனே! (அஞ்சுவன் நீயங்கு நிற்க) குணத்திலே தோஷதர்சநம் பண்ணுவாரிடத்திலே நிற்கிறதுக்கும் பூதனைக்கஞ்சுமாபோலே நாணும் இவர் அஞ்சுகிறபடி.(அழகனே

கிறது. இவ்வார்த்தைதான், ஸ்ரீநந்தகோபர் வஸுதேவர் பக்கலிலே கேட்டுவந்து சொன்னாராதல்; ஸ்ரீமதுரையில் பரவைவழக்கமிங்கேவந்து பிறந்ததாதல்.

(மஞ்சித்யாதி) மேகங்களானவை தவழும்படியான உயர்த்தியை யுடைத்தாய், மணிமயமான மாடங்களையும் அரணாகப் போரும்படியான மதிளையுமுடைத்தான திருவெள்ளறையிலே *நிலையார நின்றவனே. (அஞ்சுவன் நீயங்குநிற்க) "பூதனைவந்து வஞ்சநத்தால் உன்னை நலியத்தேடினதும் தன்வசமாயன்றிக்கே, கம்ஸப்ரேரிதையாய்" என்று வார்த்தை பிறக்கையால் "அவன் இன்னம் ஆரைவரவிடும், எது செய்யுமென்று தெரியாது" என்று ப(பீ)யஸ்தாநமான அவ்விடத்தில் நீநிற்கிறவிதுக்கு நான் அஞ்சாநின்றேன். (அழகனே காப்பிடவாராய்)ஆனபின்பு அங்குநில்லாதே அதிலோக

இதுபிறந்ததுக்கு மூலத்தை இரண்டுவகையாலே காட்டுகிறார் (இவ்வார்த்தையித்யாதி வாக்யத்வயத்தாலே). (பரவை வழக்கம்) என்றது-கர்ணாகர்ணிகப்பிறக்கிற வார்த்தை யென்றபடி.

"அங்கு நீநிற்க வஞ்சுவேன்" என்றந்வயம் திருவுள்ளம்பற்றி அஞ்சுகைக்கு ஹேதுவை, பூர்வார்த்தத்தை உட்கொண்டு காட்டாநின்று கொண்டு தாத்பர்ய மருளுகிறார் (பூதனையித்யாதி). 'பயஸ்த்தாநமானவவ்விடம்' என்றது - நாற்சந்தி முதலான ஸ்த்தல மென்றபடி.

(க) தி-மொ-௪-௧0-அ.

மூ.—கள்ளச்சகடுமருதும் கலக்கழியவுதைசெய்த
பிள்ளையரசே! நீ பேயைப்பிடித்து முலையுண்டபின்னை.
உள்ளவாறொன்றுமறியே னொளியுடைவெள்ளறைநின்றாய்
பள்ளிகொள்போதிதுவாகும் பரமனே காப்பிடவாராய். (எ)

காப்பிடவாராய்) (க) "पुंसां दृष्टिचित्तापहारिणम्-பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்" (உ) "साक्षान्मन्मथमन्मथः - ஸாக்ஷாந் மந் மத மந்மதஃ" என்று சொல்லுகிற உன்னுடைய ஸௌந்தர்யத்தைக் கண்டிருக்கச் செய்தேயும் த்வேஷம் பண்ணுவாருண்டு போலே காணுமென்னுதல். த்ருஷ்டிதோஷ பரிஹாரார்த்தமாகக் காப்பிடவாராயென்கிறாராதல்.

"மஞ்சு" என்கிறவித்தால், ஆந்தராளிகரானவர்கள் வந்து சேரும்படியான வ்யவஸாய ப்ரவித்திபையும், "மணி" என்கையாலே அகவாயிலே ஸ்வரூபரூபகுண விபூதிகளிலே ப்ரகாஶிக்கிற ஜ்ஞாநவிசேஷங்களையும், அவற்றை நோக்குகிற வ்யவஸாயத்தையும் காட்டுகிறது. .... (சு)

அவ;— ஏழாம்பாட்டு. பிறந்த வார்த்தை மெய்யாகவும் பெற்றதென்கிறார்.

ஸ்வா:—(கள்ளமித்யாதி) பூதனையுடைய முலையைப் பிடித்துண்ட பிள்ளையரசே!. பிள்ளைத்தனம் குன்றாமையாலே "பிள்ளையரமான அழகையுடையவனே!; உன்னழகுக்கு த்ருஷ்டி தோஷம் வாராதபடியாக நான் காப்பிடவாராய்..... .... (சு)

வ்யா.—ஏழாம்பாட்டு. (கள்ளமித்யாதி) கண்வளர்ந்தருளச் செய்தே உன்னை நலிவதாக அஸுராவிஷ்டமாய்வந்த க்ருத்ரிமசகடத்தையும், தவழ்ந்துபோகாநிற்கச்செய்தே உன்னை நலிவதாக அஸுராவிஷ்டமாய்நின்ற யமளார்ஜுநங்களையும், தன்னுடைய ரூபம் கட்டுக்குலைந்து சிதிலமாய் விழும்படியாக,(ங) "காலால்சக

அரு;—ஏழாம்பாட்டு. (கள்ளமித்யாதி) "கலக்கு" என்றதினர்த்தம் - (கட்டுக்குலைந்து) என்றது. "உதைசெய்த" என்றதுக்கு லக்ஷணபா "தள்ளிப்பொகட்ட" என்று சப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி ப்ரமாண பூர்வகமாக வந்த ப்ரகாரத்தை யருளுகிறார் (காலாலித்யாதி). சகடாதிகளைத் தள்ளினவ

(க) ரா-அ-ங-உக, (உ) பாக-கம-ஙஉ-உ, (ங) தி-மொ-அ-சு-அ,

சே'' என்கிறார். க்ருத்ரிமமான சகடாஸுரன் முதலான ப்ரதிகூலரைக் கலங்கி அழியும்படி நிரஸித்தபின்னை உன்னை, உள்ளபடியே அறிகிறேனில்லை. அதாவது - பருவத்துக்குத் தகாதவை செய்தபடியாலே, "மேலும் எதுவிளையும்'' என்றறிகிறேனில்லை. வடதளஸாயியுடைய அகடிதங்தன்னையறிந்தாலும் உன்னையுள்ளவாறறிகிறிலேன். அதாவது - எல்லாவவஸ்த்தையிலும் ஆஸ்ரித ரக்ஷணம் தப்பாமைப்பாரீர்.

இத்தால்- " ஆஸ்ரிதவிரோதிநிரஸநமோ ? அவர்களுடைய அபீஷ்ட பலப்ரதாநமோ? உன்னுடைய ஸத்பாவஹேது'' என்றறிகிறிலேன். அது உள்ளபடியே ப்ரகாசிக்கும்படியாகவிறே, அதிப்ரகாஸமான திருவெள்ளறையிலே நின்றருளிற்றும். (ஒளியுடை

டம் பாய்ந்தான்'' என்றும், (௧) "ஊருகரத்தினொடு முந்திய'' என்றும் சொல்லுகிறபடியே, திருவடிகளாலும், திருத்துடை, திருத்தோள்களாலும் தள்ளிப்பொகட்ட. (பிள்ளையரசே) இந்த அதிப்ரவ்ருத்திகளைச் செய்யாநிற்கச் செய்தேயும் பிள்ளைத்தனத்தில் புரையற்றிருந்த பெருமையை யுடையவனே!. (நீ பேயைப்பிடித்து முலையுண்ட பின்னை) நீ பேயைத்தாயாகப் பிடித்து முலையுண்டபின்பு.

(உள்ளவாறொன்று மறியேன்) உள்ளபடி யொன்றும் அறிகிறேனில்லை. அதாவது - இன்னம் அப்படிக்கொத்தவற்றைச் செய்வுதியாகில், "ஒருநாளல்ல, ஒருநாள் அபாயம் விளையும்'' என்று பயப்படாநின்றேனென்கை. (ஒளியுடையித்யாதி) மாடங்களும் மதிள்

ளைப் "பிள்ளையரசே'' என்று பாலனுகச் சொல்லப் போமோ வென்ன வருளுகிறார் (இந்த வித்யாதி). வேணுமென்று ஓராயுதாதிகளாலே நிரஸியாமல் பிள்ளைத் தனத்துக்கடுத்தவ்யாபாரத்தாலேதானே அவற்றைத் தள்ளினுனென்று திருவுள்ளம். பேய்முலை யுண்ணும்போது பேயைப் பிடித்தது அர்த்தஸித்தமன்றோ? பிடித்தென்று சோல்ல வேணுமோ வென்ன, "தாயாக வத்த்யவஸித்து'' என்று அர்த்தம் விவக்ஷித்துஸப்தார்த்த மருளுகிறார்(நீபேயையித்யாதி).

பூதநாநிரஸநாதிக ளெல்லாமறிந்திருக்க, "ஒன்று மறியேன்'' என்னக்கூடுமோவென்ன; இனிமேலே நீ செய்கிற வற்றிலொன்றும் உள்ள படி யறியேனென்கிறுளென்று விவரிக்கிறார் (அதாவதித்யாதி).

(௧)௧-௯-௫,

மூ.—
இன்பமதனையுயர்த்தா யிமையவர்க்கென்றுமரியாய்
கும்பக்களிறட்டகோவே கொடுங்கஞ்சன்நெஞ்சினிற்கூற்றே
செம்பொன்மதில்வெள்ளறையாய் செல்வத்தினால்வளர்பிள்ளாய்
கம்பக்கபாலிகாணங்குக் கடிதோடிக்காப்பிடவாராய். (அ)

வெள்ளறை நின்றாய்பரமனே) இப்படி நின்றருளின ஸர்வஸ்மாத் பரனே! (பள்ளிகொள்போதிதுவாகும்) நான் அழைக்கிற விந்தக் காலம் கண்வளர ப்ராப்தமான காலங்காண்; (காப்பிடவாராய்). பள்ளிகொள்கையாவது - லீலாரஸத்தில் நிர்பரனுகையிறே.

"பேயைப்பிடித்து முலையுண்ட பிள்ளையரசே! ஒளியுடை வெள்ளறை நின்றாய், கள்ளச் சகடுமருதும் கலக்கழிவுதைசெய்த பின்னை, உன்னை உள்ளவாறென்று மறிபேன்" என்றந்வயம்.

அவ;— எட்டாம்பாட்டு. பூதநாதிகளை நிரஸித்தவளவே யோ? குவலயாபீடத்தையும் அநாயாஸேந நிரஸித்தவனன்றோ நீ என்கிறார்.

ஸ்வா;— (இன்பமித்யாதி) புருஷார்த்தமாக நிலை நின்ற இன்பத்துக்குமேலே, உன்னுடைய அவதார வ்யாபாரங்களிலுண்

களுமான அழகையுடைய திரு வெள்ளறையிலே நின்றருளின வனே!. (பள்ளிகொள்போதிதுவாகும்) நீ கண்வளர்ந்தருளுகிற போதாய்த்து இப்போது. ஸந்த்யாகாலத்தளவன்றிக்கே, காலம் வைகிற்றுக் காணென்றபடி. (பரமனே காப்பிடவாராய்) ஸௌந்தர் யாதிசளால் உனக்கு மேற்பட்டாரில்லாதவனே! உனக்கொருகுறை வாராதபடியாக நான் காப்பிடவாராய் .... (எ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (இன்பமதனையுயர்த்தாய்) உன்னுடைய அவதாரகுண சேஷ்டிதாநுபவத்தால் வந்த ஸுகத்தை எனக்கு மேன்மேலு மதிசயிப்பித்தவனே!. (க) "தொழுகையு மிவை கண்டவசோதை தொல்லையின்பத் திறுதிகண்டாள்" என்

(காலம்வைகிற்று). காலம்கழிந்ததென்றபடி.

"கள்ளவித்யாதி வெள்ளறை நின்றாய்! பரமனே! இதுபள்ளி கொள்போதாகும், உள்ளபடிகளையறியாதே அஞ்சி யிருக்கும் நான் காப்பிடவாராய்" என்று அந்வயித்துக் கொள்வது. ... ... (எ)

(க) பெரு-தி-எ-அ.

டான ஶீலாதிகுணங்களை எனக்கு மிகவும் ப்ரகாஶிப்பித்து, என்னைக்கொண்டு மங்களாஶாஸநம் பண்ணுவித்துக் கொள்ளுகிறவனே! (இமையவர்க்கென்றுமரியாய்) இவ்வெளிமை இந்நிலத்திலே வந்தால் நித்யஸூரிகளுக்கு மரிதானவனே யென்னுதல். அன்றிக்கே, இவ்வெளிமை இந்நிலத்தில் தேவர்களுக்கு ப்ரகாஶிப்பியாதவனே யென்னுதல். (கும்பக்களிறட்ட கோவே) *கும்பமிகுமதயானைப்பாகனொடும் குலைந்து விழநிரஸித்த ஶௌர்யத்தையுடையவனே! கும்பம்-மஸ்தகம். (கொடுங்கஞ்சன் நெஞ்சினில்கூற்றே) கஞ்சன்றன்னுடைய நெஞ்சிற்காட்டில் தனக்குக்கொடிதான கூற்றில்லையிறே. ஆயிருக்க, அவனுக்கு அவன் நெஞ்சிலுங்காட்டில் கொடிதான கூற்றாய், அந்நினைவை நிரஸித்தவனே.!

னக்கடவதிறே. (இமையவர்க்கென்றுமரியாய்) தந்தாமுடையஜ்ஞாநசக்த்யாதிகள் கொண்டு உன்னைலபிக்கப்பார்க்கும் தேவர்களுக்கு என்றுமொக்க துஷ்ப்ராபனானவனே!. இத்தால் - கீழ்ச்சொன்ன நீர்மைக்கு எதிர்த்தட்டான மேன்மையைச் சொல்லுகிறது. (கும்பக்களிறட்டகோவே) (க) "கும்பமிகுமதயானை" என்கிறபடியே மஸ்தகத்தினுடையஉயர்த்தியையுடைத்தாயிருக்கும் குவலயாபீடத்தை நிரஸித்த ஶௌர்யத்தையுடைய ராஜாவானவனே!. (கொடுங்கஞ்சன் நெஞ்சினில்கூற்றே) உன்பக்கல் என்றுமொக்க ச்த்ருவாயிருக்கும் கம்ஸனுடைய மநஸ்ஸில் கூற்றம்போல் பயாவஹனாய்க் கொண்டு தோற்றுமவனே!

அரு;—எட்டாப்பாட்டு. (இன்பமதனையித்யாதி) என்றும் அரியனாகக் கூடுமோ? தேவர்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டு தேவபக்ஷபாதியாயிருக்க வென்கிற சங்கையிலே அருளுகிறார் (தந்தாமுடைய வித்யாதி). "காப்பிடவாராய்" என்கிற விடத்தில் இந்த துஷ்ப்ராபதையைச் சொல்லுவானென்னென்ன வருளுகிறார் (இத்தாலித்யாதி). "இன்பமதனையுயர்த்தாய்" என்றவிடத்தில் சொன்ன ஸௌலப்யம் குணமாகைக்காகச் சொல்லிற்றென்று கருத்து. ஆனைக்கெல்லாம் கும்பஸ்தலங்களுண்டா யேயிருக்க, இத்தை "கும்பக்களிறு" என்று விசேஷித்ததுக்கு ப்ரமாண பூர்வகம் தாத்பர்ய மருளுகிறார் (கும்பமிகுவித்யாதி). (கூற்றம்போலே) ம்ருத்யுபோலே.

(க) தி-மொ-ச-௯-௬.

(செம்பொன்மதிள் வெள்ளறையாய்) மங்களாசாஸநபரர்க்கு ஸ்ப்ருஹாவஹமான மதிளாலே சூழப்பட்ட திருவெள்ளறையை நிருபகமாகவுடையவனே! (செல்வத்தினால் வளர்பிள்ளாய்) சக்ரவர்த்தித் திருமகனைப் போலே பலர்க்கும் நியாம்யனாய் வளருகையன்றிக்கே, * தந்தக்களிறுபோலே தானே விளையாடும்படி நந்தன் மகனான செல்வை யுடையவனே! (கம்பக்கபாலி காணங்கு) கண்டபோதே அநுகூலர்க்கும் நடுக்கத்தை விளைப்பிக்க வல்ல க்ரூரவேஷத்தையும், கபாலத்தையு முடையவள் ஸஞ்சரிக்கிற

(செம்பொன்மதிள் வெள்ளறையாய்)செம்பொன்போலே மிகவும் ஸ்ப்ருஹணீயமான மதிளையுடைய திருவெள்ளறையை வாஸஸ்த்தாநமாக வுடையவனே!. (செல்வத்தினால் வளர்பிள்ளாய்) சக்ரவர்த்தித்திருமகனைப்போலே பலர்க்கும் நியாம்யனாய் வளருகையன்றிக்கே, ஒருவர் நியமநத்தில் அடங்காமல், வேண்டினபடி செய்து வேண்டினபடி புஜித்து, செல்வச் செருக்கோடே வளருகிற பிள்ளையானவனே!. (கம்பக்கபாலிகாணங்கு) கண்டவர்களுக்கு நடுக்கத்தை விளைக்கும் உக்ரமான † மழுவையும் கபாலத்தையுமுடையளான துர்கை ஸஞ்சரிக்கிற ஸ்த்தலங்காணவ்விடம். அன்றிக்கே "கபாலி" என்று - ருத்ரனைச்சொல்லிற்றாகவுமாம். (கடிதோடிக் காப்பிடவாராய்) அந்த க்ஷுத்ர தேவதைகள் ஸஞ்சரிக்

"செம்" என்று-பொன்னைவிசேஷிக்கை யாலே பலிதம் (மிகவும்) என்றது. (பலர்க்கும் நியாம்யனாய்) என்றவிடத்தில் (க) "పితుర్వచన నిర్దేశాత్ - பிதுர்வசநநிர்தேஶாத்"(உ)"భరద్వాజస్య శాసనాత్ - பரத்வாஜஸ்ய ஶாஸநாத்" (ங) "అగస్త్యవచనాత్ - அகஸ்த்யவசநாத்" (ச) "సుగ్రీవవచనాత్ - ஸுக்ரீவவசநாத்" இத்யாதிகளைக்கண்டு கொள்வது. இப்படி பெரியோனை பின்பும் நியாம்யனானால், பால்யத்தில்நியாம்யத்வம் கிம்புநர்ந்யாய ஸித்தம். (செல்வச் செருக்கோடே வளர்கிற பிள்ளையானவனே) என்றது இப்படி அநியாம் யனாகையாலே நீயே வந்து காப்பிட்டுவித்துக் கொள்ளவேணுமென்று கருத்தென்று திருவுள்ளம். "கம்பத்தையும் கபாலத்தையுமுடையவள்" என்று அக்ஷரார்த்தம் திருவுள்ளம் பற்றி, கம்பபதம் - கம்பஜநகமான வடிவை லக்ஷிக்கிற வர்த்த மருளுகிறார் (கண்டவர்களித்யாதி). ... ... (அ)

(க) ரா-பா-க-௨௪. (உ) ரா-பா-க-௩௧. (ங) ரா-பா-க-௪௨
(ச) ரா-பா-க-௭௦. † (பா) வடிவையும்.

மூ.—

இருக்கொடுநீர்சங்கிற்கொண்டிட் டெழில்மறையோர் வந்துநின்
றருக்கேல்நம்பிசந்திநின்றுதாய்சொல்லுக்கொள்ளாய்சிலநாள்[றூர்
திருக்காப்புநானுன்னைச்சாத்தத் தேசுடைவெள்ளறைநின்றாய்
உருக்காட்டுமந்திவிளக்கின் றொளிகொள்ளவேற்றுகேன்வாராய்.

காலங்காண்; அவ்விடத்தில் நில்லாதே கடுகநடையிட்டு நான்காப்பிடும்படிவாராய்.

அவ;—ஒன்பதாம்பாட்டு, "கீழே கம்பக்கபாலிகாண்" என்ற விடத்திலும் வாராமையாலே, அதிலும் கொடிதுகாண் நல்சந்தி; வாராயென்கிறார். சக்கரவர்த்தித் திருமகன் பக்வனைபின்பிறே மாத்ருவசந பரிபாலநம் செய்தது. நீ பிறந்தவன்றே மாத்ருவசந பரிபாலநம் செய்தவனல்லையோ வென்கிறார்.

ஸ்வா;—(இருக்கித்யாதி) ருக்கு முதலான வேதங்களோடே வேதாந்திகளான ப்ராஹ்மணோத்தமர் உன்னை ரக்ஷையிடுவதாக, சங்கிலே சுத்த ஜலத்தையும் கொண்டுவந்து நில்லாநின்றார்கள்; உங்கள் தமப்பனார் அவர்கள் வந்தால் ஆசாரோபசாரம் செய்து

கிற ஸந்த்யாகாலத்தில் அங்கு நில்லாதே, இக்காலத்திலே நான் உனக்குக் காப்பிடும்படி சடக்கென வோடிவாராய். (அ)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு, (இருக்கித்யாதி) (க) "வேதப்புனிதவிருக்கை" என்கிறபடியே புருஷஸூக்தாதிகளான ருக்குக்களோடேகூட சுத்தஜலத்தையும் சங்கிலேகொண்டு உனக்கு ரக்ஷையிடுகைக்காக விலக்ஷணரான ப்ராஹ்மணர்வந்துநின்றார்கள்: அவர்

அரு;—ஒன்பதாம்பாட்டு. (இருக்கித்யாதி) "இருக்கு" என்று ருக்வேதத்தை மாத்ரம் விசேஷித்தால், மற்றை வேதங்களை வ்யாவர்த்திக்கக் கூடாமையாலே (உ) "వేదేషు పౌరుషంసూక్తమ్ - வேதேஷுபௌருஷம்ஸூக்தம்" என்கிற படியே ஸகல வேதங்களிலும் ஶ்ரேஷ்டமான ருக்குக்களைச்சொல்லுகிறதென்று திருவுள்ளம்பற்றி, அத்தை ப்ரமாண முகேந விசேஷிக்கிறார் (வேதேத்யாதி). "கொண்டிட்டு" என்று முழுச் சொல்லாய், அதுக்கு அர்த்தம்-கொண்டென்றும், "திருக்காப்புச்சாத்த" என்ற பதத்தையும் அநுஷங்கித்துக் கொண்டு, அதுக்கு அர்த்த மருளுகிறார் (உனக்கித்யாதி). "எழில்" என்றதுக் கர்த்தம் (விலக்ஷணரான) என்றது. மேலுக்கவ தாரிகையருளுகி

(க) தி-வாய்-கு-உ-கூ. (உ)

கோ(ஸ்ரீ) தாநம்முதலானவைகளும் செய்து அவர்களைக்கொண்டு ரக்ஷையிடுவித்துக்கொண்டு காண்போருவர். நீயும் அவர்கள் ரக்ஷையிடும்படி வாராயென்ன; அதுவும்கேளாமல் கர்வித்து ஓடப்புகுந்தானென்னுதல்; உத்தரப்ரத்யுத்தரம் சொல்லிஓடப்புகுந்தானென்னுதல். அவன்சொன்ன உத்தரம்தானென்னென்னில்:-“அவர்கள் தங்கள் காரியத்துக்கன்றோ வந்தார்கள்; என் காரியத்துக்கோ வந்தார்கள்” என்றாற்போலே சில உத்தரம் சொல்லவும் கூடுமிறே. “ஐயரை ரக்ஷையிட்டு கோதா(ஸ்ரீ ஸோ)நம் கொண்டுபோகிறாய், அவர்கள் ஸ்வரக்ஷணஸாபேக்ஷராயன்றோ வந்தார்கள்” என்றாற்போலே சில சொல்லவும்கூடுமே. சக்ரவர்த்தித் திருமகனைப்போலே குணவானாய், அவர்களைச்சென்று நமஸ்கரித்து அவர்கள் ரக்ஷையிட, அந்த ரக்ஷை-தனக்கு ரக்ஷையாக நினைத்திருக்கிறானன்றே. (நம்பி) கர்வோத்தரனானவனே யென்னுதல். அந்த ரக்ஷையால் நிரபேக்ஷனானவனே யென்னுதல். (சந்திநின்று தருக்கேல், தாய்சொல்லுக்கொள்ளாய் சிலநாள்) இன்னமும் சில நாள் மாத்ருவசந பரிபாலநம் செய்யவேணுங்காண்.

களைக்கொண்டு ரக்ஷையிடுவித்துக் கொள்ளவேணுங்காண். உங்கள் ஐயரும் அப்படியன்றோ செய்வது, வாராய்” என்ன; அதுகொள்ளாமல் கர்வித்து சந்தியிலேநின்று விளையாடப்புக்கவாறே, (தருக்கேல் நம்பி சந்திநின்று) என்கிறாள். நீம்பால் பூர்ணனானவனே!, க்ஷுத்ரதேவதைகள் ஸந்நிதிபண்ணும் நாற்சந்தியிலேநின்று கர்வியாதே கொள். அவர்கள் ரக்ஷையிடுகைக்காக வந்திலையாகிலும், அந்த ஸ்த்தலந்தன்னில் நில்லாதேவாராய். (தாய்சொல்லுக் கொள்ளாய்

றார் (அவர்களை யித்யாதி வாக்யத்ரயத்தாலே). “தாய்சொல்லுக் கொள்ளாய்” என்றத்தைத் திருவுள்ளம் பற்றி தத்ப்ரதிகோடியாக வருளுகிறார் (உங்களை யரித்யாதி). (அப்படியன்றோ செய்வது) என்றது - உனக்கு ப்ராஹ்மணராலே ஆஶீர்வசநங்களை அப்போ செய்வித்தாரிறே யென்கை. “நம்பீ சந்தி நின்று தருக்கேல்” என்றந்வயித்து, ஶப்தார்த்தமருளுகிறார் (நீம்பாலித்யாதி). கீழே “மறையோராலே ரக்ஷையிடுவிக்க வாராய்” என்றால், அத்தைக்கேளாமல் விளையாடு மவன் “தருககேல் நம்பீ” என்றால் இத்தைக் கேட்பனோவென்கிற ஶங்கையிலே, அது செய்யா விட்டாலும் இத்தை அவஶ்யம் செய்யவேணு மென்னு மபிப்ராயத்தாலே சொல்லுகிறாரென்று தாத்பர்ய மருளுகிறார் (அவர்கள் ரக்ஷையித்யாதி).

"என்னை இப்படி நிர்பந்தித்து நியமிக்கிறது, முன்பு அழைத்தாப்போலேயோ?" என்ன;(திருக்காப்புநானுன்னைச் சாத்தத்தேசுடைவெள்ளறைநின்றாய்) உனக்கு தேஜஸ்ஸுமிகவுண்டாம்படி நானுன்னைத் திருக்காப்புச்சாத்த-அழகிதாக ரக்ஷிபிட, திருவெள்ளறையிலே நித்யவாஸம் செய்கிறவனே! (உருக்காட்டுமந்தி விளக்கின்றொளிகொள்ள வேற்றுகேன்வாராய்) திருவந்திக்காப்பு ஏற்றுவாரேற்றியெடுப்பது, நிரதிசய போக்யமான திருமேனி காண்கை புருஷார்த்தமாகவிறே. அதிறே அவனுக்கு ரக்ஷையாவது. [ஒளிகொள்ளுமந்திவிளக்கின்றுருக்காட்ட வேற்றுகேன் வாராய்] ரத்நாதிகளுடையதேஜஸ்ஸை அதிக்ரமித்திறே †இவன்தேஜஸ்ஸிருப்பது. (இன்று) என்றது - இப்போதென்றபடி. (கூ)

சிலநாள்) இன்னம் சிலநாள்யாத்ருவசநபரிபாலநஞ் செய்யவேணுங்காண்.

(திருக்காப்புநானுன்னைச்சாத்த) நான் உன்னை அழகிதான ரக்ஷியிட. (தேசுடைவெள்ளறை நின்றாய்) விலக்ஷணரானவர்கள் வர்திக்கையால்வந்த தேஜஸ்ஸையுடைய திருவெள்ளறையிலே நின்றருளினவனே! (உருக்காட்டு மந்திவிளக்கு) உன் திருமேனியைக் காட்டும் திருவந்திக்காப்பு. திருவந்திக்காப்பேற்றுவார் ஏற்றியிறே யெடுப்பது, நிரதிசயபோக்யமான திருமேனிகாண்கை புருஷார்த்தமாகவிறே; ஆகையாலே(உருக்காட்டும்) என்கிறது.(இன்றொளிகொள்ள வேற்றுகேன்வாராய்) இப்போது ஒளியையுடை

"எழில்மறையோர்" என்ற பதத்தை உட்கொண்டு "தேசு" என்றதை விசேஷிக்கிறார் (விலக்ஷணரித்யாதி). ஜ்யோதி ரூபமான இவன் திருமேனிக்கு விளக்குக் கொண்டு காணவேணுமோ வென்ன வருளுகிறார் (திருவந்திக்காப்பித்யாதி). நிரதிசயபோக்ய மாகையாலே த்ருஷ்டி தோஷபரிஹார பூர்வகமாகக் காண்கை புருஷார்த்த மாகையாலே யென்று தாத்பர்யம்.

"தேசுடைவெள்ளறை நின்றாய்! இருக்கொடு நீர் சங்கில் கொண்டிட்டு திருக்காப்பு சாத்த எழில்மறையோர் வந்து நின்றார். வாராய் நம்பி! சந்தி நின்று தருக்கேல்,சிலநாள் தாய் சொல்லுக் கொள்ளாய்" என்று இவரருளிச் செய்யாத்திருக்கும் அன்வயம் கண்டுகொள்வது. (கூ)

---

† (பா) தீபதேஜஸ்ஸு.

மூ.—

போதமர்செல்வக்கொழுந்து புணர்திருவெள்ளறையானை
மாதர்க்குயர்ந்தவசோதை மகன்றன்னைக் காப்பிட்டமாற்றம்
வேதப்பயன்கொள்ளவல்ல விட்டுசித்தன்சொன்னமாலை
பாதப்பயன்கொள்ளவல்ல பத்தருள்ளார்வினைபோமே.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

அவ;—நிகமத்தில் இத்திருமொழி கற்றார்க்குப் பலம்சொல்லித் தலைக்கட்டுகிறார்.

ஸ்வா:—(போதமரித்யாதி). தனக்குப் பிறந்தகமான தாமரைப்பூவிலே அமரும்படியான செல்வத்தையுடையவள். பூவில்பரிமளம் வடிவு கொண்டெழுந்தாப்போலேயிறே இவளுடைய மார்தவுருபம் தானிருப்பது அதாவது-அவன் இவளுக்கு* ஸர்வரஸமும் ஸர்வகந்த(ஃ)முமானாப்போலே, இவளும் அவனுக்குஅப்படியாயிருக்கை. இவளுடைய செல்விறே அவனுக்கு ஸர்வாதிகத்வத்தாலுமுண்டான செல்வாபிற்றதும். இச்செல்வம் கொழுந்துவிடுவதும்

த்தாம்படி எற்றுகின்றேன்; இத்தைக்கண்டருளும்படி கடுகவாராய். "திருக்காப்பு நானுன்னைச்சாத்த - உருக்காட்டு மந்திவிளக்கின் றொளிகொள்ள வேற்றுவேன் வாராய்" என்றந்வயம். (௯)

அவ;—நிகமத்தில், இத்திருமொழி கற்றார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டுகிறார்.

வ்யா.— (போதமர்செல்வக்கொழுந்து) தனக்குப் பிறந்தகமான தாமரைப்பூவை யிருப்பிடமாக வுடையளாய், ஸ்ரீயானையாலே ஸகலஸம்பத்ஸம்ருத்திபூதையாய், ப்ராதாநமஹிஷியாயிருந்துள்ள பெரியபிராட்டியார். "பங்கயச்செல்வி" என்றிறே திருநாமம் (புணர்திருவெள்ளறையானை) அவள் தாமரைப்பூவை மறந்து

அரு;—பத்தாம்பாட்டு (போதமரித்யாதி) பெரியபிராட்டியாரை "போதமர்செல்வ" என்று விசேஷித்துச் சொன்னதுக்கு நியாமகம், அந்த திவ்யதேசத்தில் நாச்சியாருடைய திருநாமப்ரஸித்தி யென்கிறார் (பங்கயவித்யாதி). பிறந்தகமான தாமரைப்பூவுக்கு சைத்யமார்தவ ஸௌரப்யாதிகளாலே போக்யதை குறைவற்றிருக்க, "புணர்" என்று இவனை ஸம்ஶ்லேஷிக்கிறளாகச் சொல்லக்கூடுமோவென்ன வருளுகிறார் (அவள் தாமரையித்யாதி)

திருமார்பில் சுவட்டிலேயிறே. அந்தச் சுவடறிந்த பின்பிறே பிறந்தகத்தை மறந்தது. இனி இவளும் நினைப்பது-பிராட்டி ஸ்ரீமிதி(தி)லையை நினைக்குமன்றிறே. இக்கொழுந்துக்கு உபக்ந (ஷ்டு) மாவான் அவனேயிறே. ஆகையிறே "கொழுந்துபுணர் திருவெள்ளறையான்" என்றது. (கொழுந்து) தலைவி. இவளுடைய ப்ராதாந்யமும் தோன்றுமிறே, "திருவெள்ளறையான்" என்றபோதே.

(மாதர்க்குயர்ந்த வசோதை மகன் தன்னைக்காப்பிட்ட மாற்றம்) மாது-பருவத்தால் வந்த விளமையில் ப்ராதாந்யம். மாதர்க்கு (க) "அகலகில்லேன்" என்கிறபடியே க்ஷணகாலமும் பிரியமாட்டாதே நித்யஸம்ஸ்லேஷம் பண்ணும்படியாய்க்கொண்டு திருவெள்ளறையிலே நிற்கிறவனை. (உ) "கோல் தேடியோடுங்கொழுந்தது" என்கிறபடியே கொழுந்தானதொன்று, உபக்ந(ஷ்டு)த்தையொழிய, தரிக்கமாட்டாதாப்போலேயாய்த்து, போதமர் செல்வக்கொழுந்தான விவளும்-திருவெள்ளறையானாகிற உபக்நத்தோடே புணர்ந்தல்லது தரிக்கமாட்டாதபடி. உபக்நம் - ஆதாரமாய் நிற்கும்மாத்ரமாய், அதின்மேலே படர்ந்தகொடியே ப்ரதாநமாயிருக்குமாபோலேயாய்த்து, * செந்தாமரைக்கண்ணர் அப்ரதாநராய், இவளே அவ்வூருக்கு ப்ரதாநையாயிருக்கும்படி.

(மாதர்க்குயர்ந்தவசோதை) (ந) "என்னநோன்பு நோற்றாள்கொலோ விவனைப் பெற்ற வயிறுடையாள்" என்றும் (ச) "எல்

அத்தை மறப்பிக்கும்படி நிரதிசய போக்யமாகையாலே புணர்ந்தாளென்று தாத்பர்யம். "புணர்" என்று வர்தமான தாத்பர்யம் (அகலகில்லேனித்யாதி). இவன் தாயனரயிலும், பரமபோக்யனாகிலும், இவள் பிரியமாட்டாதேயிருக்கைக்கு ஹேதுவேதென்ன "கொழுந்து" என்ற பதத்தைக்கடாக்ஷித்து நியாமகத்தையருளுகிறார் (கோல்தேடியித்யாதி). இத்தால் அந்த போக்யவஸ்துவன்றியிலே த(ரி)ரியாத ஸ்வபாவையாகையாலே நித்யஸம்ஸ்லிஷ்டையாளென்று தாத்பர்யம். "கொழுந்து" என்றத்தால், இவள்-கொடியாய், அவன்-உபக்ந(ஷ்டு)மாய், அத்தால்பலித்த தாத்பர்யாந்தரத்தை யருளுகிறார், (உபக்நமித்யாதி.)

யசோதை மாதர்க்கு உயர்ந்தவளாகைக்கு ப்ரமாணமுகே ஹேதுவைக் காட்டாநின்றுகொண்டு, ஸப்தார்த்தயருளுகிறார் (என்ன நோன்பித்யாதி).

(க) தி-வாய்-சு-௧௦-௧௦. (உ) உ-திருவ-உஎ. (ந) உ-உ-சு
(ச) பெரு-தி-எ-டு

உயருகையாவது - தந்தாமுடைய பர்தாக்களுக்கு அபிமதைகளுமாய், வஶவர்த்திகளுமா யிருக்கையிறே. இவளுக்கு உயர்த்தியாவது-பர்த்ரு ஸ்நேஹத்திலுங்காட்டில் புத்ரஸ்நேஹம் மிகுந்திருக்கை. ஆனுலிறே பர்தாவுக்கு வஶவர்த்தியாவது. (க) "யதா யதா ஹி கௌஸல்யா"இத்யாதிவத். "அசோதைமகன்" என்கையாலே, ஸ்ரீநந்தகோபரும் ஸ்ரீவஸுதேவரைப்போலேயோ தான். இவள் தான் "தன்மகன்" என்றபிமாநித்தாளிறே, அவன் தான் *நந்தன் மைந்தனுகவாகு நம்பியாவதும். (மகன் தன்னைக்காப்பிட்ட மாற்றத்தை) பலகாலுமழைத்துக் காப்பிட்டு, தன்னுடைய ஸ்நேஹமெல்லாம் தோன்றும்படி வாழ்த்தின ப்ரகாரத்தை. (மாற்றம்) சொல்லு.

(வேதப்பயன் கொள்ளவல்ல விட்டு சித்தன்) வேதப்பயன் கொள்ளவல்லார் இவர்போலே காணும்; பயனுவது-மங்களாஶாஸநம் செய்கையிறே. ஶாந்திஸ்வஸ்திகள் வேதப்ரயோஜநமா யிருக்கச் செய்தேயும், ஸாதாரணுஸாதாரண விபாக(ஜ்ஞ) நிரபேக்ஷமாகவும் வருமிறே. விஷ்ணு சித்தரான விவர் கொள்ளும்ப்ரயோஜநம் வ்யாவ்ருத்தமாயிறே இருப்பது. இநத விஷ்ணு ஶப்தம்-வ்யாபகமான ப்ரதமரஹஸ்யத்தில் ப்ரணவ நமஸ்ஸுக்களோடே கூடியிருக்

லாம் தெய்வநங்கை யசோதை பெற்றாள்" என்றும் சொல்லும்படி இவனைப் பிள்ளையாகப்பெற்று, இவனுடைய பாலசேஷ்டிதாதிகளான ஸகலரஸங்களு மநுபவிக்கப்பெற்றவ ளாகையாலே, லோகத்தில் ஸ்த்ரீகளெல்லாரிலும் உத்க்ருஷ்டையான யசோதைப்பிராட்டி. (மகன்றன்னைக் காப்பிட்ட மாற்றம்) ரூபகுண சேஷ்டிதங்களெல்லாவற்றிலும் அநவரதம் காப்பிடவேண்டும்படியாயிருக்கும் தன்னுடையபுத்ரனுனவனை, புத்ரஸ்நேஹமெல்லாந்தோற்ற ரக்ஷையிட்ட பாசுரங்களை.

(வேதப்பயனித்யாதி) பகவத்விஷயத்தில் மங்களாஶாஸநம் பண்ணுகையே வேததாத்பர்யமென்றறிந்து, கைக்கொள்ளவல்ல பெரியாழ்வாரருளிச்செய்த மாலையான வித்திருமொழியில். (பாத

"தன்னை" என்று விசேஷித்தத்தால் பலிதத்தையருளுகிறுர் (ரூபேத்யாதி)

வேதத்துக்குப் பயனுவது, சதுர்விதபுருஷார்த்தங்களல்ல; இவர் மங்களாஶாஸநபரராகையாலே யென்று திருவுள்ளம்பற்றி யருளுகிறுர் (பகவதித்

(க) ரா-அயோ-கஉ-சுஅ.

குமிறே. ஆகையாலேயிறே,(க)“விட்டுசித்தன் மனத்தே கோயில் கொண்ட கோவலன்” என்றது. (சொன்னமாலை பாதப் பயன் கொள்ளவல்ல) அருளிச்செய்தமாலையாவது-சென்னியோங்களவாக. இதில் பாதப்பயனாவது-திருப்பல்லாண்டில் முதல்பாட்டில் முதலடியில் ப்ரயோஜநம். நிகமநப்ரயோஜநமும் இது தானேயிறே. இப்ப்ரயோஜநத்தை இவரைப்(பி)போல அநந்தர்கதமானபக்தியோடே கொள்ள வல்லாருண்டாகில்.(வினைபோமே) “இவரைப்போலே திருப்பல்லாண்டு பாடி அடிமை செய்யப் பெற்றிலோம்” என்கிற வினைகளெல்லாம் வாஸனையோடே போமென்றருளிச் செய்கிறார். (க0)

பிள்ளை திருவடிகளே சரணம்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியாழ்வார் திருமொழி
இரண்டாம்பத்து ஒன்பதாம்திருமொழி
வெண்ணெய் விழுங்கி ப்ரவேசம்.

ஸ்வா—கீழ் பூச்சூட்டிக் காப்பிட்டுத் தனக்கு வஶவர்தியாக்கித்தன்னருகே இவனை உறக்கி,நிர்ப்பரையாய்த்தன் க்ருஹகார்யத்திலேயும் ஒருப்பட்டாளாய் நிற்க,போதுவிடிகிற வளவிலே,இவன் இராச்செய்த தீம்புகளைச் சொல்லி ஊரிலுண்டான பக்வைகளான

ப்பயனித்யாதி) பாட்டுக்கள்தோறும் பின்னடியிற்சொன்ன ப்ரயோஜநத்தைக் கைக்கொள்ளவல்ல பக்திமான்களாயுள்ளவர்களுடைய மங்களாஶாஸந விரோதியாயுள்ள பாபம் தன்னடையே விட்டுப்போம். ... ... (கo)

பெரியஜீயர் திருவடிகளே சரணம்.
